பொருளடக்கம்


| எண் | தலைப்புகள் | பக்கம் |
|---|---|---|
| 1. | உண்மையான வாதம் அனைத்து அம்சங்கள் மூலமாகவும் வெளிப்படுகின்றது | 1 |
| 2. | திருக்குர்ஆனிலிருந்து.... | 2 |
| 3. | நபிமொழியிலிருந்து.... | 3 |
| 4. | ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து.... | 4 |
| 5. | ஜுமுஆ பேருரை – 23 மார்ச் 2017 | 6 |
| 6. | ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் வாழ்க்கை – குடும்ப வாழ்வை மேம்படுத்துவது தொடர்பான சம்பவங்களின் ஒளியில் | 17 |
| 7. | விகிதாச்சார அடிப்படையில் சந்தா கொடுப்பதும், வஸிய்யத் அமைப்பின் முக்கியத்துவமும் அதன் அருள்களும் | 26 |


لَا إِلٰهَ إِلَّا اللّٰهُ مُحَمَّدٌ رَّسُوْلُ اللّٰهِ

# உண்மையான வாதம் அனைத்து அம்சங்கள் மூலமாகவும் வெளிப்படுகின்றது

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஸ் (அலை) அவர்களின் உண்மைத்துவம் தொடர்பாக எவ்வளவு பேசினாலும் அது குறைவுதான். இன்றும் பூமியில் ஒரு பெரும் கூட்டத்தைச் சேர்ந்தவர்கள் அன்னார் (அலை) அவர்கள் மீது நம்பிக்கை கொள்வதிலிருந்து பேறிழந்தவர்களாக இருக்கின்றனர். இதில் நம்பிக்கை இழப்பதற்கு ஒன்றுமில்லை. ஏனென்றால் சான்றுகள் மற்றும் ஆதாரங்கள் மூலமாக நாம் களத்தை வெற்றி பெற்றி விட்டோம். மேலும் இந்த வெற்றியின் களம் 125 ஆண்டுகளாக நம்மிடம் இருக்கின்றது. மேலும் எப்போதும் நம்மிடம் இருக்கும். நிரந்தர வெற்றியைப் பொறுத்தவரை ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் நிரந்தர வெற்றியைக் குறித்து முன்னறிவிப்பும் செய்துள்ளார்கள்.

அன்னார் கூறினார்கள்: அல்லாஹ் இந்த ஜமாஅத்தை முழு உலகிலும் பரப்புவான். மேலும் சான்றுகள் மூலமாக அனைவருக்கு எதிரிலும் இதற்கு வெற்றியை வழங்குவான். நிரந்தர வெற்றியைப் பொறுத்தவரை அதன் நேரம் மற்றும் கால அளவு தொடர்பாக அதாவது எப்போது வெற்றி கிடைக்கும் என்பது தொடர்பாக அன்னார் கூறுகின்றார்கள்:

இன்றிலிருந்து மூன்று நூற்றாண்டுகள் கழிந்திருக்காது. ஈஸாவை எதிர்பார்த்துக் கொண்டிருந்த முஸ்லிமானாலும், கிறித்தவரானாலும் அவர்கள் நம்பிக்கை இழந்து மேலும் தவறான எண்ணம் கொண்டு இந்த பொய்யான கொள்கையை விட்டு விடுவர். மேலும் உலகில் ஒரே மார்க்கம்தான் இருக்கும். ஒரே தலைவர் தான் இருப்பார். நான் விதையை விதைப்பதற்காக வந்துள்ளேன். எனது கரங்களினால் அந்த விதை நடப்பட்டுள்ளது. அது தற்போது வளரும், பரவும். எதுவரையென்றால் அதனை எவராலும் தடுத்து நிறுத்த முடியாது. (தஸ்கரத்துஷ் ஷஹாதத்தைன், ரூஹானீ கஸாயின் தொகுதி 20 பக்கம் 67)

தஸ்கரத்துஷ் ஷஹாதத்தைன் என்ற இந்த நூல் 1903 ஆம் ஆண்டு எழுதப்பட்டது. இந்த முன்னறிவிப்பு செய்யப்பட்டு 115 வருடங்கள் கழிந்து விட்டன. மூன்று நூற்றாண்டுகள் முழுமையடைய 185 வருடங்கள் எஞ்சியுள்ளன. 185 ஆண்டுகளுக்குப் பிறகு முழு உலகிலும் அஹ்மதிய்யா ஜமாஅத்திற்கு வெற்றிகள் கிடைக்கும். அல்லாஹ் விரும்பினால் இதற்கும் குறைவாகவே அஹ்மதிய்யத்திற்கு உலகில் வெற்றி கிடைத்து விடும். எனவே நாம் அல்லாஹ்விடம் இந்த நம்பிக்கை வைத்துள்ளோம். மேலும் இவ்வாறு துஆ செய்கின்றோம்: அல்லாஹ்வே! இஸ்லாம் அஹ்மதிய்யத்தின் வெற்றியை மிக அருகில் கொண்டு வருவாயாக. ஆமீன்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் உண்மைக்கு எண்ணற்ற ஆதாரங்கள் இருக்கின்றன. நாம் எதை எடுத்தக் கூறுவது? எதை எடுத்துக் கூறாமல் இருப்பது? எந்த அம்சத்தை நாம் எடுத்துக் கொண்டாலும் அதில் அன்னாரது உண்மைத்துவம் வெளிப்படுகிறது. காதியான் என்ற குக்கிராமத்திலிருந்து எழுந்த அந்த ஏழை மற்றும் பலவீனமானவரின் குரல் இன்று முழு உலகிலும் 112 நாடுகளில் பரவி விட்டது. உலகத்திற்கு இன்று அஹ்மதிய்யா ஜமாஅத் தெரிந்திருக்கின்றது. மேலும் மிகவும் கண்ணியத்துடன் பார்க்கப்படுகின்றது. வாசகர்களுக்காக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஸ் (அலை) அவர்களின் ஒரேயொரு கூற்றை மட்டும் அன்னாரது உண்மைக்கு சான்றாக எடுத்து வைக்கின்றேன்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: சிலர் பள்ளிவாசல்களில் எனது மரணத்திற்காக தமது மூக்கை தேய்த்துக் கொண்டிருந்தனர். மவ்லவி குலாம் கஸூரி தனது நூலிலும், அலிகடின் மவ்லவி இஸ்மாயீல் என்பவர் என் தொடர்பாக, அவர் பொய்யர் என்றால் நமக்கு முன்னாலேயே மரணித்து விடுவார். நிச்சயமாக நமக்கு முன்பாகவே மரணித்து விடுவார். ஏனென்றால் அவர் பொய்யராவார் என்று எழுதியிருந்தனர். அவர்களது இந்த எழுத்துக்கள் உலகில் அச்சிட்டு வெளிவந்த சிறிது காலத்திலேயே அவர்கள் மரணித்தனர். இவ்வாறு அவர்களது மரணமே யார் பொய்யர் என்பதற்கு தீர்ப்பு வழங்கியது. பிறகு இந்த மக்கள் படிப்பினை பெறுவதில்லை. முஹைதீன் என்பவர் எனது மரணம் தொடர்பாக இல்ஹாமை வெளியிட்டு அவரே மரணித்துப் போனது மகத்துவமிக்க அடையாளம் இல்லையா? மவ்லவி இஸ்மாயீலும் வெளியிட்டார். அவரும் மரணித்தார்... பெஷாவரைச் சேர்ந்த பாதிரி ஹமீதுல்லாஹ் எனது மரணம் தொடர்பாக பத்து மாதத்திற்குள் அவர் மரணித்து விடுவார் என்று காலக்கெடுவை நிர்ணயித்து முன்னறிவிப்பு செய்தார். ஆனால் அவர் மரணித்தார். லேக்கராம் என் மரணம் தொடர்பாக அவர் மூன்று மாதத்திற்குள் மரணிப்பார் என்று காலக்கெடுவை நிர்ணயித்து முன்னறிவிப்பு செய்தார். அவர் மரணித்தார்.

(தொஹ்ஃபா கோல்டவிய்யா, ரூஹானீ கஸாயின் தொகுதி 17 பக்கம் 45)

ஈமானுக்கு வலுவூட்டக்கூடிய பல கூற்றுகளிருந்து ஒன்றையே எடுத்துக் கூறியுள்ளேன். அல்லாஹ் அனைவருக்கும் குறிப்பாக நமது முஸ்லிம் சகோதரர்களுக்கு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை ஏற்றுக் கொள்வதற்கும், அன்னார் மீது ஈமான் கொள்வதற்குமுரிய நற்பாக்கியத்தை வழங்குவானாக. ஆமீன்

**அவர் பொய்யராக இருந்தால் நிச்சயமாக அவரது பொய் அவரையே சாரும். ஆனால் அவர் உண்மையாளராக இருந்தால் எதைக் குறித்து உங்களை அவர் எச்சரித்தாரோ அது நிச்சயமாகளை சூழ்ந்து கொள்ளும்**

**———— [திருக்குர்ஆனிலிருந்து....] ————**

۞ وَعَدَ اللّٰهُ الَّذِيْنَ اٰمَنُوْا مِنْكُمْ وَعَمِلُوا الصّٰلِحٰتِ لَيَسْتَخْلِفَنَّهُمْ فِي الْاَرْضِ كَمَا اسْتَخْلَفَ الَّذِيْنَ مِنْ قَبْلِهِمْ ۪ وَلَيُمَكِّنَنَّ لَهُمْ دِيْنَهُمُ الَّذِي ارْتَضٰى لَهُمْ وَلَيُبَدِّلَنَّهُمْ مِّنْ بَعْدِ خَوْفِهِمْ اَمْنًا ؕ يَعْبُدُوْنَنِيْ لَا يُشْرِكُوْنَ بِيْ شَيْـًٔا ؕ وَمَنْ كَفَرَ بَعْدَ ذٰلِكَ فَاُولٰٓئِكَ هُمُ الْفٰسِقُوْنَ ۝

அல்லாஹ் உங்களுள் நம்பிக்கை கொண்டு நற்செயலாற்றுபவர்களை, அவர்களின் முன்னோர்களை கலீஃபாவாக (தலைவராக) ஆக்கியது போன்று இப்பூமியில் கலீஃபாவாக ஆக்குவதாகவும் அவன் அவர்களுக்காக விரும்பிய அவர்களின் மார்க்கத்தை அவர்களுக்கு உறுதிப்படுத்துவதாகவும் அவன் அவர்களுக்கு அவர்களது அச்சத்திற்குப் பிறகு அதற்குப் பதிலாக அமைதியினை வழங்குவதாகவும் அவர்களிடம் வாக்குறுதியளித்துள்ளான். அவர்கள் என்னை வணங்குவார்கள். எதனையும் எனக்கு இணையாக்கமாட்டார்கள். இதன் பின்னரும் நிராகரிப்பவர்கள் கட்டுப்படாதவர்களாவார்கள். (24:56)

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

அன்பிற்குரியவர்களே! ஆரம்பத்திலிருந்தே அல்லாஹ்வின் நடைமுறை இதுதான். அவன் எதிரிகளின் இரண்டு பொய்யான மகிழ்ச்சிகளை அழித்துக் காட்டுவதற்காக இரண்டு வல்லமைகளைக் காட்டுகின்றான். எனவே இப்போது இறைவன் தனது பழமையான அந்த நடைமுறையை விட்டுவிடுவது சாத்தியமில்லை.

எனவே நான் உங்களுக்கு எடுத்துக் கூறியிருக்கின்ற விஷயங்களில் வருத்தப்படாதீர்கள். உங்கள் உள்ளம் கவலை அடைய வேண்டாம். ஏனெனில் அந்த இரண்டாவது வல்லமையைக் காண்பதும் உங்களுக்கு அவசியமாகும். மேலும், அது வருவது உங்களுக்குச் சிறந்ததாகும். ஏனெனில் அது நிரந்தரமானதாகும். அதன் தொடர் மறுமை வரை அறுந்து விடாது. மேலும் நான் செல்லாத வரை அந்த இரண்டாவது வல்லமை வர முடியாது. ஆனால் நான் சென்று விட்டால் இறைவன் உங்களுக்காக அந்த இரண்டாவது வல்லமையை அனுப்புவான். அது எப்பொழுதும் உங்களுடன் இருக்கும்.

(அல் வஸிய்யத், ரூஹானி கஸாயின் தொகுதி 20 பக்கம் 305)

۞ وَلَوْ تَقَوَّلَ عَلَيْنَا بَعْضَ الْاَقَاوِيْلِ ۝ لَاَخَذْنَا مِنْهُ بِالْيَمِيْنِ ۝ ثُمَّ لَقَطَعْنَا مِنْهُ الْوَتِيْنَ ۝ فَمَا مِنْكُمْ مِّنْ اَحَدٍ عَنْهُ حٰجِزِيْنَ ۝

அவர் எந்தச் சொல்லையேனும் பொய்யான வெளிப்பாடாக எம்மீது சுமத்தியிருந்தால், நிச்சயமாக நாம் அவரை எம் வலக்கையால் பிடித்திருப்போம். பின்னர் நிச்சயமாக நாம் அவருடைய கழுத்துப் பெருநரம்புக் குழாயைத் துண்டித்திருப்போம். உங்களுள் எவராலும் அவரை (எம்முடைய தண்டனையிலிருந்து) காப்பாற்ற இயலாது.

۞ وَقَالَ رَجُلٌ مُّؤْمِنٌ ۖ مِّنْ اٰلِ فِرْعَوْنَ يَكْتُمُ اِيْمَانَهٗٓ اَتَقْتُلُوْنَ رَجُلًا اَنْ يَّقُوْلَ رَبِّيَ اللّٰهُ وَقَدْ جَآءَكُمْ بِالْبَيِّنٰتِ مِنْ رَّبِّكُمْ ؕ وَاِنْ يَّكُ كَاذِبًا فَعَلَيْهِ كَذِبُهٗ ؕ وَاِنْ يَّكُ صَادِقًا يُّصِبْكُمْ بَعْضُ الَّذِيْ يَعِدُكُمْ ؕ اِنَّ اللّٰهَ لَا يَهْدِيْ مَنْ هُوَ مُسْرِفٌ كَذَّابٌ ۝

ஃபிர்அவ்னின் சமுதாயத்தினருள் நம்பிக்கை கொண்டு அந்நம்பிக்கையை மறைத்து வைத்திருந்த ஒரு மனிதர் கூறினார்: என் இறைவன் அல்லாஹ் என்று கூறுகின்ற ஒரே காரணத்திற்காக நீங்கள் ஒரு மனிதரைக் கொலைச் செய்யப் போகின்றீர்களா? மேலும் அவர் உங்கள் இறைவனிடமிருந்து உங்களிடம் தெளிவான சான்றுகளையும் கொண்டு வந்துள்ளார்.

அவர் பொய்யராக இருந்தால் அவரது பொய்யினால் விளையும் தீங்கு அவரையே சேரும். ஆனால் அவர் உண்மையாளராயின் அவர் உங்களுக்கு முன்னறிவித்தவைகளுள் சில தண்டனைகள் உங்களுக்கும் சேரும். நிச்சயமாக வரம்புகளை மீறுபவனுக்கும் பெரும் பொய்யனுக்கும் அல்லாஹ் நேர்வழி காட்டமாட்டான். (40:29)

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

இறைவனது நல்லடியார்கள் மற்றும் அவனால் அனுப்பப்பட்டவர்களுக்கு எதிராக அவர்களை பலவீனப்படுத்துவதற்காக எல்லா விதமான முயற்சிகளும் செய்யப்படுகின்றன. ஆனால் அவர்களுடன் இறைவன் இருக்கின்றான். அவர்களது அனைத்து முயற்சிகளும் மண்ணோடு கலந்து விடுகின்றன.அத்தகைய சந்தர்ப்பங்களில் சில நல்லுள்ளம் கொண்ட மக்கள் இவ்வாறு கூறுகின்றனர்:

وَاِنْ يَّكُ صَادِقًا يُّصِبْكُمْ بَعْضُ الَّذِيْ يَعِدُكُمْ ؕ

உண்மையானது உண்மையாளர்களின் மிகப்பெரிய வலுவான சான்றாகவும் ஆதாரமாகவும் இருக்கின்றது. மேலும் பொய்யர்களின் பொய்யே அவர்களை அழித்து விடுகின்றது. எனவே என்னை எதிர்ப்பதற்கு முன்பாக இவர்கள் சிந்தித்திருக்க வேண்டும். அதாவது இறைவனது வேதத்தில் நல்லடியார்களை அடையாளங்கண்டு கொள்வதற்கான ஒரு வழியை அவன் வைத்துள்ளான். ஆனால் வருத்தத்திற்குரிய விஷயம் என்னவென்றால், இம்மக்கள் திருக்குர்ஆன் ஓதுகின்றனர். அனால் அது அவர்களது தொண்டைக்கு கீழே இறங்குவதில்லை.

(தஃப்ஸீர் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை), தொகுதி 3 தஃப்ஸீர் சூரா மூஃமின் பக்கம் 199)

......☆......☆......☆......

**உங்களில் உயிரோடு இருப்பவர் ஈஸப்னு மர்யமின் காலத்தை அடைவார். அவரே இமாம் மஹ்தியாகவும், நெறி நீதி தீர்ப்பவராகவும் இருப்பார். மேலும் அவர் சிலுவையை முறிப்பார். பன்றியைக் கொல்வார்**

**[நபிமொழியிலிருந்து....]**

۞ عَنْ اَبِیْ هُرَیْرَةَ رَضِیَ اللّٰهُ عَنْهُ قَالَ : قَالَ رَسُوْلُ اللّٰهِ صَلَّی اللّٰهُ عَلَیْهِ وَسَلَّمَ : کَیْفَ اَنْتُمْ اِذَا نَزَلَ ابْنُ مَرْیَمَ فِیْکُمْ وَاِمَامُکُمْ مِنْکُمْ وَفِیْ رِوَایَةٍ فَاَمَّکُمْ مِنْکُمْ

ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். பெருமானார் (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: “மர்யமின் மகன் (அதாவது ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கு ஒப்பானவர்) உங்களிலிருந்து தோன்றி உங்களுக்கு இமாமாக இருக்கும்போது உங்களது நிலை எவ்வாறிருக்கும்?”

இன்னோர் அறிவிப்பில், “அவர்கள் உங்களிலிருந்து தோன்றியதன் காரணமாக உங்களுக்கு இமாமத் செய்கின்ற கடமைகளை நிறைவேற்றுவார் என்றும் வந்துள்ளது.”

(புகாரி கிதாபுல் அன்பியா)

۞ عَنْ اَنَسِ بْنِ مَالِكٍ رَضِیَ اللّٰهُ عَنْهُ اَنَّ رَسُوْلَ اللّٰهِ صَلَّی اللّٰهُ عَلَیْهِ وَسَلَّمَ قَالَ : لَا الْمَهْدِیُّ اِلَّا عِیْسَی بْنُ مَرْیَمَ ۔

ஹஸ்ரத் அனஸ் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ஈஸாவைத் தவிர வேறு எந்த மஹ்தியும் கிடையாது. (அதாவது மஸீஹ்தான் மஹ்தியாக இருப்பார். ஏனென்றால், மஹ்தி வேறு ஒருவர் அல்ல.)

(இப்னு மாஜா, பாப் ஷித்ததுஸ் ஸமான், பக்கம் 257)

● یُوْشِكُ مَنْ عَاشَ مِنْكُمْ اَنْ یَّلْقٰی عِیْسَی بْنَ مَرْیَمَ اِمَامًا مَهْدِیًّا حَكَمًا عَدْلًا یَكْسِرُ الصَّلِیْبَ وَیَقْتُلُ الْخِنْزِیْرَ ۔

உங்களில் உயிரோடு இருப்பவர் ஈஸப்னு மர்யமின் காலத்தை அடைவார். அவரே இமாம் மஹ்தியாகவும், நெறி நீதி தீர்ப்பவராகவும் இருப்பார். மேலும் அவர் சிலுவையை முறிப்பார். பன்றியைக் கொல்வார்.

(முஸ்னது அஹ்மது தொகுதி 2 பக்கம் 156 ஆதாரம்: ஹதீகத்துல் ஸாலிஹீன், முல்க் சைஃபுர் ரஹ்மான் சாஹிப் எழுதியது ஹதீஸ் எண் 948)

۞ عَنْ حُذَیْفَةَ بْنِ یَمَانٍ قَالَ : قَالَ رَسُوْلُ اللّٰهِ صَلَّی اللّٰهُ عَلَیْهِ وَسَلَّمَ : اِذَا مَضَتْ اَلْفٌ وَ مِائَتَانِ وَاَرْبَعُوْنَ سَنَةً یَبْعَثُ اللّٰهُ الْمَهْدِیَّ

ஹஸ்ரத் ஹுதைஃபா பின் யமான் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். பெருமானார் (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: “1240 (வருடங்களுக்குப்) பிறகு அல்லாஹ் மஹ்தியை அனுப்புவான்.”

(அந்நஜ்முஸ் சாகிப் தொகுதி 2 பக்கம் 209)

۞ عَنْ اَبِیْ هُرَیْرَةَ رَضِیَ اللّٰهُ عَنْهُ عَنِ النَّبِیِّ صَلَّی اللّٰهُ عَلَیْهِ وَسَلَّمَ قَالَ : لَا تَقُوْمُ السَّاعَةُ حَتّٰی یَنْزِلَ عِیْسَی بْنُ مَرْیَمَ حَكَمًا مُقْسِطًا وَاِمَامًا عَدْلًا فَیَكْسِرُ الصَّلِیْبَ وَیَقْتُلُ الْخِنْزِیْرَ وَیَضَعُ الْجِزْیَةَ وَیَفِیْضُ الْمَالَ حَتّٰی لَا یَقْبَلَهٗ اَحَدٌ ۔

ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். பெருமானார் (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்:

“எதுவரை நீதியுடன் தீர்ப்பு கூறுபவராகவும் நீதியுடன் செயல்படுகின்ற இமாமாகவும் இருக்கப்போகின்ற மர்யமின் மகன் ஈஸா தோன்றமாட்டார்களோ அதுவரை கியாமத் வராது. (அன்னார் தோன்றும்போது) அவர்கள் சிலுவையை முறிப்பார்கள். பன்றியைக் கொல்வார்கள். ஜிஸ்யா செலுத்தும் வழிமுறையை முடிவுக்குக் கொண்டு வருவார்கள். மேலும் எத்தகைய செல்வத்தை அவர்கள் பங்கிட்டுக் கொடுப்பார்கள் என்றால் அதனை மக்கள் ஏற்றுக் கொள்வதற்கு ஆயத்தமாக இருக்க மாட்டார்கள்.”

(சுனன் இப்னி மாஜா கிதாபுல் ஃபிதன் பாபு ஃபித்னதுத்தஜ்ஜாலி வ ஹுரூஜி ஈஸப்னி மர்யம் வ ஹுரூஜி யஃஜூஜ வமஃஜூஜ்.)

۞ عَنْ حُذَیْفَةَ رَضِیَ اللّٰهُ عَنْهُ قَالَ: قَالَ رَسُوْلُ اللّٰهِ صَلَّی اللّٰهُ عَلَیْهِ وَسَلَّمَ : تَكُوْنُ النُّبُوَّةُ فِیْكُمْ مَا شَآءَ اللّٰهُ اَنْ تَكُوْنَ ثُمَّ یَرْفَعُهَا اللّٰهُ تَعَالٰی ثُمَّ تَكُوْنُ خِلَافَةٌ عَلٰی مِنْهَاجِ النُّبُوَّةِ مَا شَآءَ اللّٰهُ اَنْ تَكُوْنَ ثُمَّ یَرْفَعُهَا اللّٰهُ تَعَالٰی ثُمَّ تَكُوْنُ مُلْكًا عَاضًّا فَتَكُوْنُ مَا شَآءَ اللّٰهُ اَنْ تَكُوْنَ ثُمَّ یَرْفَعُهَا اللّٰهُ تَعَالٰی ثُمَّ تَكُوْنُ مُلْكًا جَبْرِیَّةً فَیَكُوْنُ مَا شَآءَ اللّٰهُ اَنْ یَكُوْنَ ثُمَّ یَرْفَعُهَا اللّٰهُ تَعَالٰی ثُمَّ تَكُوْنُ خِلَافَةٌ عَلٰی مِنْهَاجِ النُّبُوَّةِ ثُمَّ سَكَتَ

ஹஸ்ரத் அபூஹுஸைஃபா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: அல்லாஹ் நாடும் வரை உங்களிடத்தில் இந்த நுபுவ்வத் இருக்கும். பிறகு அல்லாஹ் அதை எடுத்துக் கொள்வான். பிறகு நுபுவ்வத் வழியிலான கிலாஃபத் உருவாகும். அல்லாஹ் நாடும் வரை அது இருக்கும். பிறகு அல்லாஹ் அதையும் எடுத்துக் கொள்வான். பிறகு அவனது நியதிக்கேற்ப துன்பத்தை தரக்கூடிய கொடுங்கோல் ஆட்சி இருக்கும். பிறகு அதையும் அல்லாஹ் எடுத்துக் கொள்வான். பிறகு பலவந்தமான ஆட்சி ஏற்படும். பிறகு அல்லாஹ் அதையும் எடுத்துக் கொள்வான்.

பின்னர் **நுபுவ்வத் வழியிலான கிலாஃபத் இருக்கும்.** இதைக் கூறி விட்டு பெருமானார் (ஸல்) அவர்கள் மௌனமாகி விட்டார்கள்.

(முஸ்னது அஹ்மது தொகுதி 4 பக்கம் 273)

**அல்லாஹ் தனது வாக்குறுதிக்கேற்ப அவ்வாறே செய்தான். மேலும் இந்த எளியவனை பதினான்காம் நூற்றாண்டின் துவக்கத்தில் அனுப்பினான். மேலும் சிலுவை மார்க்கத்தைத் தகர்க்ககூடிய அந்த விண்ணின் ஆயுதத்தை எனக்கு வாங்கினான்**

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து.....**

### எனது எந்தக் கொள்கையும் அல்லாஹ் மற்றும் அல்லாஹ்வின் தூதருடைய கூற்றுக்கு எதிரானதாக இல்லை

அல்லாஹ்வின் மீது ஆணையாக! நான் காஃபிர் அல்லன். லா இலாஹ இல்லல்லாஹ் முஹம்மதுர் ரஸூலுல்லாஹ் என்பது எனது கொள்கையாகும். மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் பற்றி வலாகின் ரஸூலல்லாஹி வகாத்தமன் நபிய்யீன் (ஆனால் அவர் அல்லாஹ்வின் தூதராகவும், நபிமார்களுக்கு முத்திரையாகவும் இருக்கிறார்) என்பதன் மீது எனக்கு ஈமான் இருக்கிறது. நான் எனது இந்தக் கூற்று சரியானது என்பதற்கு இறைவனுக்கு எத்தனை பெயர்கள் உள்ளனவோ மேலும் எந்த அளவுக்கு திருக்குர்ஆனில் எழுத்துக்கள் இருக்கின்றனவோ, இறைவனிடம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு எந்த அளவுக்கு மகத்துவங்கள் இருக்கின்றனவோ அந்த அளவுக்கு ஆணையிட்டுக் கூறுகின்றேன். எனது எந்தக் கொள்கையும் அல்லாஹ் மற்றும் அல்லாஹ்வின் தூதருடைய கூற்றுக்கு எதிரானதாக இல்லை.

எவர் அவ்வாறு நினைப்பாரோ அது அவரது தவறான புரிதலாகும். எவர் இப்போதும் என்னைக் காஃபிர் எனக் கருதுகிறாரோ, பொய்ப்படுத்துவதிலிருந்து விலகுவதில்லையோ மரணத்திற்குப் பிறகு அவரிடம் கேள்வி கேட்கப்படும் என்பதை அவர் உறுதியாக நினைவில் கொள்ளட்டும். இறைவன் மீதும், இறைதூதர் மீதும் எனக்கு எத்தகைய உறுதியான நம்பிக்கை இருக்கிறது என்றால், இக்காலத்தின் எல்லா ஈமான்களையும் ஒரு தராசுத் தட்டில் வைத்து எனது ஈமானை இன்னொரு தராசுத் தட்டில் வைத்தால் அதுவே அல்லாஹ்வின் அருளால் கனமானதாக இருக்கும்.

**(கராமாத்துஸ் ஸாதிகீன் 25 ரூஹானி கஸாயின் தொகுதி 7 பக்கம் 67)**

### இறைவன் தனது வாக்குறுதிக்கேற்ப இந்த எளியவனை பதினான்காம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் அனுப்பியுள்ளான். மேலும் சிலுவை மார்க்கத்தை உடைப்பதற்கு அந்த விண்ணின் ஆயுதத்தை எனக்கு வழங்கியுள்ளான்

இறைவன் வழிகேடு மற்றும் குழப்பம் நிலைபெற்றிருக்கும் குறிப்பிட்ட இந்த நேரத்தில் இந்த எளியவனை பதினான்காம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் படைப்பினச் சீர்திருத்தத்திற்காக முஜத்திதாக அனுப்பியுள்ளான். இந்த நூற்றாண்டில் இஸ்லாத்திற்குப் பங்கம் விளைவிக்கக்கூடிய மிகப்பெரிய குழப்பம் கிறிஸ்தவ பாதிரிகளின் குழப்பமாகும். ஆகையால் இறைவன் இந்த எளியவனின் பெயரை வாக்களிக்கப்பட்ட மஸீஹ் என வைத்துள்ளான். மேலும் இந்த பெயர் அதாவது வாக்களிக்கப்பட்ட மஸீஹ் என்ற பெயர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் முன்னறிவித்த அதே பெயராகும்.

அதாவது திரித்துவ கொள்கையை வெற்றி கொள்ளும் காலத்தில் இறைவனிடமிருந்து இந்த பெயரில் ஒரு முஜத்தித் வருவார் என்ற வாக்குறுதியும் உள்ளது. அவர்தான் சிலுவையை உடைப்பார் என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ஆகையால் சஹீஹ் புகாரி ஹதீஸில் இந்த முஜத்திதிற்கு இதே விளக்கம்தான் தரப்பட்டுள்ளது. அதாவது அவர் முஹம்மதிய்ய உம்மத்தில் இருந்து அவர்களுக்கு ஓர் இமாமாக இருப்பார். சிலுவையை முறிப்பார். இது அவர் சிலுவை மதத்தினை வெற்றி கொள்ளும் காலத்தில் வருவார் என்பதனை சுட்டிக் காட்டக் கூடியதாக உள்ளது. இந்த வகையில் இறைவன் தனது வாக்குறுதிக்கேற்ப அவ்வாறே செய்துள்ளான். இந்த எளியவனை பதினான்காம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் அனுப்பியுள்ளான். மேலும் நான் சிலுவை மார்க்கத்தை உடைப்பதற்கு அந்த விண்ணின் ஆயுதத்தை எனக்கு வழங்கியுள்ளான்.

**(கிதாபுல் பரிய்யா, ரூஹானீ கஸாயின் தொகுதி 13 பக்கம் 358)**

### இறைவன் புறமிருந்து மார்க்கத்தை புதிப்பிப்பதற்காக வரக்கூடியவர் நானே ஆவேன்

காலத்தின் தற்போதைய நிலைமையை கண்டு பூமி பல வகையான தீமையிலும் பாவத்திலும் வழிகேட்டிலும் நிறைந்திருப்பதைக் கண்டு உண்மையை எட்ட வைப்பதற்காகவும் சீர்திருத்தத்திற்காகவும் இறைவன் என்னை நியமித்துள்ளான். இந்த காலமும் கூட அப்படிப்பட்டதாக இருந்தது....

இந்த உலகிலுள்ள மக்கள் ஹிஜ்ரி பதிமூன்றாம் நூற்றாண்டை முடித்துவிட்டு பதினான்காம் நூற்றாண்டின் ஆரம்பத்தை அடைந்திருந்தனர். அப்போது நான் அந்த இறைவனின் கட்டளையைப் பேணியவாறு பொது மக்களிடம் எழுத்துப்பூர்வமான பிரசுரங்கள் மூலமாகவும், சொற்பொழிவுகள் மூலமாகவும் பூமியிலிருந்து உயர்ந்து சென்று விட்ட ஈமானை மீண்டும் நிலைநாட்டுவதற்காகவும் இறைவனிடமிருந்து ஆற்றலைப் பெற்று அவனது கைகளிலுள்ள ஈர்ப்பின் மூலமாக உலகைச் சீர்திருத்தம், இறையச்சம் மற்றும் உண்மையின் பக்கம் ஈர்ப்பதற்கும் அவர்களது கொள்கை அளவிலான மற்றும் செயல் அளவிலான தவறுகளை அகற்றுவதற்காகவும் இந்த நூற்றாண்டின் ஆரம்பத்தில் இறைவன் புறமிருந்து மார்க்கத்தைப் புதுப்பிப்பதற்காக வர இருந்தவர் நானே என்ற இந்த அழைப்பை விடுக்க ஆரம்பித்தேன்.

இதற்குச் சில வருடங்கள் கழிந்த பிறகு இந்த சமுதாயத்திற்காகத் துவக்கத்திலிருந்தே வாக்களிக்கப்பட்டிருந்த அந்த மஸீஹும், இஸ்லாம் வீழ்ச்சியடைந்த சமயத்தில் வழிகேடு பரவிய காலத்தில் நேரடியாக இறைவனிடமிருந்து நேர்வழியைப் பெற்றவரும் அந்த ஆன்மீக உணவுத் தட்டை மனிதர்களுக்கு முன்னால் எடுத்து வைப்பதற்காக இறை நியதியில் நியமிக்கப்பட்டிருந்தவரும் எவரைப் பற்றி இன்றிலிருந்து ஆயிரத்து முன்னூறு வருடங்களுக்கு முன்னதாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நற்செய்தி வழங்கி இருந்தார்களோ அவரும் நானே ஆவேன் என்பது இறையறிவிப்பின் மூலமாக எனக்குத் தெளிவாக திறந்து தரப்பட்டது.

இது தொடர்பாக இறைவனின் உரையாடல்களும், ரஹ்மான் என்னை நோக்கி கூறியவையும் எந்த அளவு தெளிவாகவும் தொடர்ச்சியாகவும் எனக்கு கிடைத்தனவென்றால் அதில் ஐயத்திற்கும் சந்தேகத்திற்கும் இடமில்லை. எனக்கு வந்த

ஒவ்வொரு இறையறிவிப்பும் ஒரு பசுமரத்தாணி போன்று உள்ளத்தில் ஊடுறுவி விட்டது. இறைவின் இந்த அனைத்து உரையாடல்களும் எத்தகைய மகத்தான முன்னறிவிப்புகளால் நிறைந்திருந்தனவென்றால் அவை ஒளிமயமான பகல் போன்று நிறைவேறின. அவற்றின் தொடர்ச்சியும் மிகுதியும் அற்புத ஆற்றல்களின் அதிசயமும் எவனது வசனங்களாக திருக்குர்ஆன் இருக்கின்றனவோ அதே ஏகனும் இணையற்றவனுமாகிய இறைவனின் வார்த்தைகளாக இவை இருக்கின்றன என்பதை ஏற்றுக் கொள்ளும் கட்டாயத்திற்கு என்னை ஆளாக்கி விட்டது.

மேலும் நான் இந்த இடத்தில் தவ்ராத் மற்றும் இஞ்சீலின் பெயரைக் கூறவில்லை. ஏனென்றால் தவ்ராத்தும் இஞ்சீலும் அவற்றை மாற்றம் செய்தவர்களின் கைகளால் எந்த அளவு மாற்றத்திற்கு ஆளாகியிருக்கிறது என்றால் இப்போது அந்த நூல்களை இறைவின் வார்த்தைகள் என்று கூற முடியாது.

சுருக்கமாக, என்மீது இறங்கிய இறைவனின் அந்த வஹீயானது எந்த அளவு உறுதியானதும் மாற்ற முடியாததுமாக இருக்கின்றது என்றால் அதன் மூலமாக நான் எனது இறைவனை பெற்றுக் கொண்டேன். மேலும் இந்த இறையறிவிப்பானது வானத்து அடையாளங்கள் மூலமாக அனுபவத்தினால் ஏற்படும் நிச்சய உறுதியின் தகுதி வரை சென்றடைந்து விட்டது. இன்னும் சொல்வதென்றால், அதன் ஒவ்வொரு பகுதியையும் இறைவனின் வசனமான திருக்குர்ஆனுக்கு முன் எடுத்து வைக்கும் போது அவை அவற்றிற்கு ஏற்ப இருந்தது நிரூபிக்கப்பட்டிருக்கின்றது. மேலும் அவற்றை உண்மைப்படுத்துவதற்காக மழையைப் போன்று வானத்தின் அடையாளங்கள் பொழிந்தன.

மஹ்தியின் காலத்தில் ரமலான் மாதத்தில் சூரியனுக்கும் சந்திரனுக்கும் கிரகணம் ஏற்படும் என்று எழுதப்பட்டிருந்தது போன்றே இதே நாட்களில் ரமலான் மாதத்தில் சூரியனுக்கும் சந்திரனுக்கும் கிரகணமும் ஏற்பட்டது. இதே நாட்களில் பிளேக் நோயும் அதிகமாக பஞ்சாபில் பரவியது. இதைப் பற்றிய செய்தி திருக்குர்ஆனிலும் கூறப்பட்டிருக்கின்றது. இந்த நாட்களில் கொள்ளை நோய் அதிகமாக பரவும் என்று நபிமார்களும் கூட முன்னறிவித்திருந்தனர். மேலும் அது எந்த அளவு பரவும் என்றால் எந்தவொரு கிராமமும் நகரமும் இந்தக் கொள்ளை நோயிலிருந்து வெளியில் இருக்காது என்று அவர்கள் கூறியிருந்தனர். அவ்வாறே நடந்தது. இப்போதும் நடந்து கொண்டிருக்கின்றது.

## இறைவன் மீது ஆணையிட்டுக் கூறுகின்றேன். நானும் எனது ஜமாஅத்தும் முஸ்லிம்களாவோம்

நான் உண்மையாகக் கூறுகின்றேன். மேலும் இறைவன் மீது ஆணையிட்டுக் கூறுகின்றேன். நானும் எனது ஜமாஅத்தும் முஸ்லிம்களாவோம். ஓர் உண்மையான முஸ்லிம் ஈமான் கொள்ள வேண்டியதைப் போன்று நாங்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீதும் திருக்குர்ஆனின் மீதும் ஈமான் கொள்கின்றோம். இஸ்லாத்திற்கு வெளியில் பாதத்தை ஒரு அடி எடுத்து வைப்பது கூட அழிவிற்கு ஆளாக்கக்கூடும் என்று நாம் நம்பிக்கை கொள்கின்றேன். மேலும் ஒரு நபர் எந்த அளவுக்கு அருட்களைப் பெற முடியுமோ மேலும் இறை நெருக்கத்தைப் பெற முடியுமோ அது முழுக்க முழுக்க ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு உண்மையாக கட்டுப்படுதல் மற்றும் முழுமையான அன்பின் மூலமாகவே முடியும். அது அல்லாமல் அது சாத்தியமற்றது. மேலும் அன்னாரின்றி நல்வழிக்கான எந்த வழியும் கிடையாது என்பதே எனது மார்க்கமாகும். (லெக்சர் லூதியானா, ரூஹானி கஸாயின் தொகுதி 20 பக்கம் 260)

## இறைவனது படைப்பினங்கள் மீது அதிகமாக பரிவுடன் நடந்து கொள்ளுங்கள்

நமது ஜமாஅத் இதனை நன்றாக நினைவில் வைக்க வேண்டும். உங்களில் எவருமே ஒருபோதும் மரணிக்க மாட்டார்கள் என்று அல்லாஹ் ஒருபோதும் வாக்குறுதி வழங்கவில்லை. எனினும் அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான். எவர் மக்களுக்கு பயன்தரக்கூடியவர்களாகத் தம்மை ஆக்கிக் கொள்வார்களோ அவர்களது வாழ்நாளை அல்லாஹ் அதிகமாக்குவான் (13:18). இறைவனது படைப்பினங்களின் மீது மிகவும் பரிவுடன் நடந்து கொள்ளுங்கள். இறை அடியார்களுக்குரிய உரிமைகளை வழங்கும் போது முழுமையாக அதனை வழங்க வேண்டும்.

(மல்ஃபூஸாத் தொகுதி 3 பக்கம் 303 – 2003 ஆம் ஆண்டு பதிப்பு)

பலகீனமான சகோதரர்களுக்கு உதவி செய்வது உங்களது வழிமுறையாக இருக்க வேண்டும். அவர்களுக்கு ஆற்றல் வழங்கப்பட வேண்டும். இரண்டு சகோதரர்கள் உள்ளனர். ஒருவருக்கு நீந்தத் தெரியும். இன்னொருவருக்கு நீந்தத் தெரியாது. இந்நிலையில் நீந்தத் தெரிந்தவர் மூழ்கிக் கொண்டிருக்கின்ற மற்றவரைக் காப்பாற்றுவது என்பது அவரது கடமையாக இருக்க வேண்டும். அல்லது அவரை அவர் மூழ்க விடுகின்றார் என்றால் இது எந்த அளவு பொருத்தமற்ற விஷயமாக இருக்கின்றது. அவரை மூழ்குவதிலிருந்து காப்பாற்றுவது அவரது கடமையாக இருக்கின்றது. எனவே தான் திருக்குர்ஆனில், நீங்கள் நன்மையிலும், இறையச்சத்திலும் ஒருவர் மற்றவருக்கு உதவி செய்யுங்கள் (5:3) என்று வந்துள்ளது.

பலகீனமான சகோதரர்களின் சுமையைச் சுமக்க வேண்டும். செயல் அளவிலான மற்றும் ஈமானிலுள்ள பலகீனங்களை அகற்றுவதற்கும் பொருளாதாரப் பலகீனங்களை அகற்றுவதற்கும் அவர்களுடன் இணைந்து நீங்கள் செயல்படுங்கள். உடல் அளவிலான பலகீனங்கள் இருந்தால் அதற்கான சிகிச்சையை நீங்கள் செய்யுங்கள். பலகீனமாக இருப்பவர்களுக்கு ஆற்றல் கிடைத்தவர்கள் ஆதரவு வழங்காத வரை எந்தவொரு ஜமாஅத்தும் ஜமாஅத்தாக இருக்க முடியாது. அவர்களின் குறைகளைத் திரையிட்டு மறைப்பதே இதற்கான வழியாக இருக்கின்றது. புதிய முஸ்லிம்களின் பலகீனங்களைக் கண்டு கோபப்படாதீர்கள்.

ஏனென்றால் நீங்களும் அவர்களைப் போன்றே பலவீனமானவர்களாக இருந்தீர்கள் என்ற போதனையே ஸஹாபாக்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்றது. இவ்வாறே பெரியவராக இருப்பவர் சிறியவர்களாக இருப்பவர்களுக்கு தொண்டு செய்ய வேண்டும் என்பது அவசியமானதாகும். அன்புடனும் மென்மையுடனும் அவர்களுடன் நடந்து கொள்ள வேண்டும்.

பாருங்கள்! பரஸ்பரம் உங்களுக்கிடையில் ஒருவர் மற்றவரைத் தின்னுகின்ற ஜமாஅத் ஜமாஅத்தாக இருக்க முடியாது. நான்கு பேர் ஒன்றாக சேர்ந்து அமரும் போது ஒருவர் தனது ஏழை சகோதரரைப் பற்றி புகார் கூறுகின்றார். அவரது குற்றங் குறைகளை எடுத்துக் கூறுகின்றார் என்றால் ஏழைகளுடன் இழிவாக நடந்து கொள்கின்றார் என்றால் அவர்களை இழிவாகவும், வெறுப்புடனும் பார்க்கின்றார் என்றால் அவ்வாறு ஒருபோதும் நடந்து கொள்ளக் கூடாது.

(மல்ஃபூஸாத் தொகுதி 2 பக்கம் 263 – 2003 ஆம் ஆண்டு பதிப்பு)

# ஜுமுஆ பேருரை

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றுக்களின் ஒளியில் வாக்களிக்கப்பட்ட மஸீஸின் வருகையின் நோக்கம் மற்றும் அவசியம் மற்றும் அந்தஸ்து பற்றி குறிப்பு மற்றும் ஜமாஅத் உறுப்பினர்களுக்கு அறிவுரை**

**அல்லாஹ்வின் அருளால் குக்கிராமத்திலிருந்து எழுந்த அந்தக் குரல் இன்று 210 நாடுகளில் பரவியுள்ளது. இதுவே அன்னாரது உண்மைக்கான ஆதாரமும் ஆகும். தொலை தூரப் பகுதிகளில் 30,40 வருடங்களுக்கு முன்பு வரை அஹ்மதிய்யத் அங்கு சென்று சேறும் என்று எண்ணிக்கூட பார்க்கவில்லை. அங்கு தூதுச் செய்தி மட்டும் சென்று சேரவில்லை. மாறாக, எத்தகைய வலுவான நம்பிக்கையாளர்களை அல்லாஹ் ஏற்படுத்துகின்றான் என்றால் அதனால் வியப்பு ஏற்படுகின்றது**

**நம்மில் ஒவ்வொருவரும் ஆய்வு செய்ய வேண்டும். அதாவது நாம் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை ஏற்றுக் கொண்டுள்ளோம். அன்னாரை ஏற்றுக் கொண்டிருப்பது மற்றும் பைஅத்தின் உரிமைகளை நாம் செலுத்தக் கூடியவர்களாகவும் இருக்கின்றோமா?**

உலகளாவிய அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் தலைவர் சய்யிதுனா அமீருல் முஃமினீன் **ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்** (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் 23 மார்ச் 2018 அன்று இலண்டனிலுள்ள **பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில்** ஆற்றிய ஜுமுஆ பேருரை

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ
أَمَّا بَعْدُ فَأَعُوذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيمِ - بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيمِ
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعَالَمِينَ. اَلرَّحْمٰنِ الرَّحِيمِ. مٰلِكِ يَوْمِ الدِّينِ. إِيَّاكَ نَعْبُدُ
وَ إِيَّاكَ نَسْتَعِينُ. اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيمَ. صِرَاطَ الَّذِينَ أَنْعَمْتَ عَلَيْهِمْ
غَيْرِ الْمَغْضُوبِ عَلَيْهِمْ وَلَا الضَّالِّينَ.

இன்று மார்ச் 23 ஆம் தேதியாகும். இந்த நாள் ஜமாஅத்தில் மஸீஹ் மவ்வூது தினமாக நினைவு கூறப்படுகின்றது. இந்த நாளில் மஸீஹ் மவ்வூது தினக் கூட்டத்தை ஜமாஅத் நடத்துகின்றது. அடுத்த இரண்டு நாட்கள் வாரத்தின் இறுதி நாட்களாக இருக்கின்றன. சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் பல ஜமாஅத்துகளும் இந்த கூட்டத்தை நடத்தும். அதில் இந்த நாளுடன் தொடர்புடைய வரலாறு மற்றும் பின்னணி எடுத்துக் கூறப்படும். இந்த சமயத்தில் நான் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களது சில மேற்கோள்களை எடுத்துக் கூறுவேன். அவற்றில் அவர்கள் வாக்களிக்கப்பட்ட மஸீஹின் வருகையின் நோக்கம், அதன் தேவை மற்றும் அவரது அந்தஸ்து தொடர்பாகக் கூறியுள்ளார்கள்.

அவர்களின் வாதத்திற்குப் பிறகு பெயர் தாங்கி முஸ்லிம் ஆலிம்கள் முஸ்லிம் பொதுமக்களை அவர்களுக்கு எதிராக தூண்டுவதற்காக மிகவும் வலுவாக முயற்சி செய்து வந்தனர். அதிகமாக இதற்காக முயற்சி செய்தனர். எந்த அளவு எதிர்க்க முடியுமோ அந்த அளவு எதிர்த்தனர். இப்போது வரை இதைத்தான் அவர்கள் செய்து கொண்டிருக்கின்றனர். ஆனால், அல்லாஹ்வின் உதவியினால் அவர்களது ஜமாஅத் முன்னேறிக் கொண்டிருக்கின்றது. நல்லியல்புள்ள மக்கள் ஜமாஅத்தில் இணைந்து கொண்டிருக்கின்றனர்.

எவ்வாறிருப்பினும், ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இறைவனின் வாக்குறுதிக்கு ஏற்ப தமது வருகையின் நோக்கத்தைப் பற்றி குறிப்பிட்டவாறு, நானே வர வேண்டிய வாக்களிக்கப்பட்ட மஸீஹாக இருக்கின்றேன் என்ற அறிவிப்பைச் செய்தவாறு இவ்வாறு கூறுகின்றார்கள்: உண்மையான ஏகத்துவம் நபி கரீம் (ஸல்) அவர்களின் களங்கமற்ற நிலை, கண்ணியம் மற்றும் உண்மை மற்றும் அல்லாஹ்வின் வேதம் அல்லாஹ்விடம் இருந்துதான் வந்துள்ளது என்பதன் மீது அநீதியான முறையில் தாக்குதல்கள் நடத்தப்பட்டிருக்கின்றன. எனவே, சிலுவையை முறிப்பவரான அவரை இறங்கக் செய்வது அல்லாஹ்வின் தன்மான உணர்வின் எதிர்பார்ப்பாக இருக்க கூடாதா என்ன?

إِنَّا نَحْنُ نَزَّلْنَا الذِّكْرَ وَإِنَّا لَهُ لَحَافِظُونَ நாமே இந்த வேதத்தை இறக்கினோம். நாமே இதனைப் பாதுகாப்போம் (15:10) என்ற தனது வாக்குறுதியை அல்லாஹ் மறந்து விட்டானா என்ன? உறுதியாக நினைவில் கொள்ளுங்கள். இறைவனின் வாக்குறுதி உண்மையானதாகும். அவன் தனது வாக்குறுதிக்கேற்ப உலகிற்கு எச்சரிக்கை செய்பவர் ஒருவரை அனுப்பினான். ஆனால் உலகமோ அவரை ஏற்றுக் கொள்ளவில்லை. ஆனால் இறைவன் கண்டிப்பாக அவரை ஏற்றுக் கொள்வான். மிகவும் வலுவான தாக்குதல்கள் மூலமாக அவரது உண்மையை வெளிப்படுத்துவான்.

ஹுஸூர் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

நான் இறைவனின் வாக்குறுதிக்கேற்ப வாக்களிக்கப்பட்ட மஸீஹாக வந்துள்ளேன் என்று உண்மையாகவே நான் உங்களுக்குக் கூறிக் கொள்கின்றேன். விரும்பினால் நீங்கள் ஏற்றுக் கொள்ளுங்கள் அல்லது மறுத்து விடுங்கள். நீங்கள் மறுப்பதனால் எதுவும் நடந்து விடாது. இறைவன் எதை நாடியுள்ளானோ அது கண்டிப்பாக நிகழ்ந்தே தீரும்.

ஏனென்றால், இறைவன் ஆரம்பத்திலேயே பராஹீனே பராஹீனே அஹ்மதிய்யாவில் صَدَقَ اللّٰهُ وَرَسُولُهُ وَكَانَ وَعْدًا مَّفْعُولًا அதாவது, தூதரின் கூற்று உண்மையாகி விட்டது. மேலும், இறைவனின் வாக்குறுதி நிறைவேறி விட்டது என்று

கூறியிருந்தான். (மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 206; 1985 ஆம் ஆண்டு பதிப்பு – இங்கிலாந்தில் அச்சிடப்பட்டது)

பிறகு ஒரு சந்தர்ப்பத்தில் ஹுஸூர் (அலை) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்:

நபித்துவ வழிமுறைக்கு ஏற்ப இந்த இயக்கத்தை சோதித்துப் பாருங்கள். பிறகு உண்மை யாருடன் இருக்கின்றது என்று பாருங்கள். கற்பனையான கொள்கைகள் மற்றும் ஆலோசனைகளால் எதுவும் ஏற்படாது. எண்ணங்களிலுள்ள விஷயங்களின் அடிப்படையில் நான் என்னை மெய்ப்பிக்கவில்லை. நான் எனது வாதத்தை நபித்துவ வழிமுறையின் அளவுகோலுக்கு ஏற்பவே எடுத்து வைக்கின்றேன். பிறகு இதே கொள்கையின் அடிப்படையில் இதன் உண்மையை சோதித்துப் பார்க்காமல் இருப்பதற்கான காரணம் என்ன?

ஹுஸூர் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

எவர்கள் உள்ளத்தைத் திறந்து நான் கூறுவதைக் கேட்பார்களோ அவர்கள் அதிலிருந்து பயன் பெறுவார்கள் என்று நான் உறுதியாக நம்புகின்றேன். மேலும் அவர்கள் அதனை ஏற்றுக் கொள்வார்கள். ஆனால் எவர்கள் உள்ளத்தில் கருமித்தனமும் வெறுப்பும் கொண்டிருக்கின்றனரோ அவர்களுக்கு நான் கூறும் விஷயங்கள் எந்தப் பயனையும் தராது. அவரது உதாரணம் சரியான பார்வை இல்லாதவர் போன்றதாகும். அவருக்கு ஒன்று, இரண்டாகத் தெரிகின்றது. அவருக்கு அது இரண்டு அல்ல ஒன்றுதான் என்பதற்கு எந்த அளவு ஆதாரங்களைத் தந்தாலும் அவர் அவற்றை ஏற்றுக் கொள்ள மாட்டார்.

ஹுஸூர் (அலை) அவர்கள் ஓர் உதாரணத்தை கூறுகின்றார்கள்:

சரியாக பார்வை இல்லாத ஒருவர் ஊழியராக ஒரு நபரிடம் வேலை செய்து வந்தார். அவருக்குத் தொண்டு புரிந்து வந்தார். அவரது எஜமானார் அவரிடம் உள்ளேயிருந்து கண்ணாடியைக் கொண்டு வாருங்கள் என்று கூறினார். அவர் உள்ளே சென்றார். திரும்பி வந்து உள்ளே இரண்டு கண்ணாடிகள் இருக்கின்றன. எதை நான் கொண்டு வருவது? என்று கேட்டார். எஜமானார் அவரிடம் ஒரு கண்ணாடிதான் இருக்கின்றது. இரண்டு அல்ல என்று கூறினார்.

சரியான பார்வை இல்லாத அவர் பிறகு நான் பொய்யனா என்ன? என்று கேட்டார். அவரது எஜமான் அவரிடம், நல்லது; அவற்றில் ஒன்றை உடைத்து விடுங்கள் என்று கூறினார். அதை உடைத்தபோதுதான் உண்மையிலேயே தவறு தன்னுடையதுதான் என்பது அவருக்குத் தெரிய வந்தது.

ஹுஸூர் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

ஆனால், எனக்கு எதிராக இருக்கின்ற இந்தப் பார்வையற்றவர்களுக்கு நான் என்ன பதிலைக் கூறுவேன்? அன்னார் கூறுகின்றார்கள்: இம்மக்கள் மீண்டும் மீண்டும் எதையாவது எடுத்துக் கூறுகின்றனர் என்றால் நபிமொழிகளின் தொகுப்பைத்தான் எடுத்து கூறுகின்றனர். அதற்கு சுயமே அவர்கள் யூகத்தின் தகுதியைத் தான் வழங்கியுள்ளனர். அதற்கு மேல் எந்தத் தகுதியையும் அவற்றிற்கு அவர்கள் வழங்குவதில்லை. ஒரு நேரம் வரும். அப்போது இவர்கள் கூறுகின்ற வீணான விஷயங்களைக் கேட்டு மக்கள் சிரிப்பார்கள். (இவர்கள் கூறுகின்ற தலைகீழான விஷயங்களைக் கேட்டு மக்கள் சிரிப்பார்கள்).

அன்னார் கூறுகின்றார்கள்: நம்மிடமிருந்து நமது வாதத்திற்கான ஆதாரத்தைக் கேட்பது உண்மையைத் தேடுகின்ற ஒவ்வொருவருக்கும் இருக்கின்ற உரிமையாக இருக்கின்றது. மிகவும் சரியான விஷயத்தைக் கூறியுள்ளார்கள். ஆதாரத்தைக் கேட்க வேண்டும். ஒவ்வொருவருக்கும் இதற்கான உரிமை இருக்கின்றது.

இதற்காக நபிமார்கள் எடுத்து வைத்தவற்றையே நாமும் எடுத்து வைக்கின்றோம். அதாவது, திருக்குர்ஆனின் வசனங்களையும் நபிமொழிகளையும் அறிவுப்பூர்வமான சான்றுகளையும் எடுத்துக் கூறுகின்றோம். அதாவது ஒரு சீர்திருத்தவாதியின் தேவையை உணர்த்துகின்ற இக்காலத்தின் தேவைகளையும் எனது கைகளின் மூலமாக இறைவன் வெளிப்படுத்தியுள்ள அடையாளங்களையும் எடுத்துக் கூறுகின்றோம்.

அன்னார் கூறுகின்றார்கள்: நான் ஒரு வரைபடத்தைத் தயார் செய்துள்ளேன். அதில் ஏறக்குறைய 150 அடையாளங்களை நான் தந்துள்ளேன். ஒரு வகையில் அதற்குக் கோடிக்கணக்கான மனிதர்கள் சாட்சியாக இருக்கின்றனர். வீணான விஷயங்களை எடுத்துக் கூறுவது நற்பாக்கியத்திற்குரிய பணியல்ல.

ஹுஸூர் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

இதனால்தான் பெருமானார் (ஸல்) அவர்கள் நெறி நீதி தீர்ப்பவராக வருவார் என்று கூறியுள்ளார்கள். அதாவது வாக்களிக்கப்பட்ட மஸீஹ் வரும்போது அவர் நெறி நீதி தீர்ப்பவராக வருவார். அவரது தீர்ப்பை ஏற்றுக் கொள்ளுங்கள். அவர் தீர்ப்பு வழங்குபவராக வருவார். அவரது தீர்ப்பை ஏற்றுக் கொள்ளுங்கள். எந்த மக்களது உள்ளங்களில் தீங்கு இருக்கின்றதோ அவர்கள் ஏற்றுக் கொள்ள விரும்பாமல் இருப்பதால் வீணான வாதங்களையும் ஆட்சேபனைகளையும் அவர்கள் செய்து வருகின்றனர்.

ஆனால், அவர்கள் நினைவில் கொள்ள வேண்டும். இறைவன் தனது வாக்குறுதிக்கு ஏற்ப வலுவான தாக்குதல்கள் மூலமாக எனது உண்மையை வெளிப்படுத்துவான். நான் இட்டுக்கட்டிப் பொய்யைப் புனைந்து கூறுபவனாக இருந்தால் அவன் என்னை உடனடியாக அழித்திருப்பான் என்று நான் உறுதியாக நம்புகின்றேன். ஆனால், எனது எல்லாப் பணிகளும் சுயமே அவனது பணிகளாக இருக்கின்றன. நான் அவனிடமிருந்து வந்துள்ளேன். என்னைப் பொய்ப்படுத்துவது அவனைப் பொய்ப்படுத்துவதாகும். எனவே, சுயமே அவனே எனது உண்மையை வெளிப்படுத்தி விடுவான்.

(மல்ஃபூஸாத் தொகுதி 4 பக்கம் 34–35; 1985 ஆம் ஆண்டு பதிப்பு – இங்கிலாந்தில் அச்சிடப்பட்டது)

வாக்களிக்கப்பட்ட மஸீஹைப் பொய்ப்படுத்துவது மற்றும் அவரை மறுப்பதன் விளைவானது அல்லாஹ்வையும் அவனது தூதரான ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களையும் மறுப்பது வரை உங்களைக் கொண்டு சென்று விடும் என்பதை விளக்கியவாறு அன்னார் கூறுகின்றார்கள்:

என்னை மறுப்பது என்னை மட்டும் மறுப்பதல்ல. மாறாக இது அல்லாஹ்வையும் அவனது தூதரான ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களையும் மறுப்பதாகும். ஏனென்றால், எவர் என்னைப் பொய்ப்படுத்துகின்றாரோ அவர் என்னைப் பொய்ப்படுத்துவதற்கு முன்னதாக அல்லாஹ்வைப் பொய்யாக்கி விடுகின்றார். (அல்லாஹ் காப்பானாக) ஆனால், உட்புற மற்றும் வெளிப்புறக் குழப்பங்கள் எல்லையைக் கடந்து சென்று விட்டதை அவர் பார்க்கின்றார்.

இறைவன் إِنَّا نَحْنُ نَزَّلْنَا الذِّكْرَ وَإِنَّا لَهُ لَحَافِظُونَ என்ற வாக்குறுதியைத் தந்திருந்தும் கூட அவர்களின் சீர்திருத்தத்திற்கான எந்த ஏற்பாட்டையும் செய்யவில்லை என்று கருதுகின்றார். ஆனால், வெளிப்படையான முறையில் அவர் இந்த விஷயத்தின் மீது ஈமான் கொண்டுள்ளார். அதாவது, அல்லாஹ் கிலாஃபத் தொடர்பாக வாக்குறுதி வழங்கியுள்ள வசனங்களில் ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களின் நபித்துவத்தின் தொடரைப் போன்று இந்த முஹம்மதிய நபித்துவத்தின் தொடரிலும் கலீஃபாக்களின் தொடரை அவன் நிலைபெறச் செய்வான் என்ற வாக்குறுதியை வழங்கியுள்ளான்.

ஆனால், அவன் தனது அந்த வாக்குறுதியை நிறைவேற்றவில்லை என்று அவர் கருதுகின்றார். (நவூதுபில்லாஹ் – அல்லாஹ் இதிலிருந்து காப்பானாக) மேலும், இப்போது இந்த உம்மத்திலும் எந்தவொரு கலீஃபாவும் இல்லை என்று அவர் கருத வேண்டியது வரும். இது மட்டுமல்லாமல் இந்த விஷயத்தையும் அவர் மறுக்க வேண்டியது வரும். அதாவது திருக்குர்ஆன் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை மூஸா (அலை) அவர்களுக்கு ஒப்பானவர் என்று கூறியுள்ளதும் கூட சரியல்ல என்று அவர் கூற வேண்டியது வரும். (நவூதுபில்லாஹ் – அல்லாஹ் இதிலிருந்து காப்பானாக)

ஏனென்றால், இந்த நபித்துவத் தொடரின் முழுமையான ஒப்புமைக்கு ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களுக்குப் பிறகு பதினான்காம் நூற்றாண்டில் அன்னாரது நபித்துவத் தொடரில் ஒரு மஸீஹ் வந்தது போன்று இந்த உம்மத்திலும் பதினான்காம் நூற்றாண்டில் ஒரு மஸீஹ் வருவது அவசியமானதாக இருந்தது. இவ்வாறே அஹ்மதின் பிரதிபிம்பமாக ஒருவர் வருவது பற்றிய செய்தியை தருகின்ற وَآخَرِينَ مِنْهُمْ لَمَّا يَلْحَقُوا بِهِمْ (இன்னும் அவர்களைச் சாராத பின்னவர்களிலிருந்து அந்த தூதர் தோன்றுவார்) என்ற வசனத்தையும் அவர் மறுக்க வேண்டியது வரும். இவ்வாறு திருக்குர்ஆனில் பல வசனங்களைப் பொய்ப்படுத்துவது அவருக்குக் கட்டாயமானதாக ஆகி விடும்.

இன்னும் சொல்வதென்றால், நான் வாதம் செய்து இதனைக் கூறுகின்றேன். அதாவது, அல்ஹம்து முதல் வன்னாஸ் வரையிலுள்ள முழுக் குர்ஆனையும் அவர் கை விட வேண்டியது வரும். பிறகு என்னைப் பொய்ப்படுத்துவது எளிதான ஒரு விஷயமா? என்பதைப் பற்றி சிந்தனை செய்யுங்கள். இதை சுயமே என் தரப்பிலிருந்து நான் கூறவில்லை. இறைவன் மீது ஆணையிட்டு நான் கூறுகின்றேன். இதுவே உண்மையாகும்.

அதாவது, எவர் என்னை விட்டு விடுவாரோ, மேலும் என்னைப் பொய்ப்படுத்துவாரோ அவர் நாவால் கூறாமலிருந்தாலும் தனது செயலால் முழுக் குர்ஆனையும் பொய்ப்படுத்தி விட்டார். இறைவனைக் கை விட்டு விட்டார். இதன் பக்கம் எனக்கு வந்த ஓர் இல்ஹாமிலும் சுட்டிக் காட்டப்பட்டிருக்கின்றது. அல்லாஹ் அவர்களை நோக்கி أَنْتَ مِنِّي وَأَنَا مِنْكَ என்று கூறினான்.

அன்னார் கூறுகின்றார்கள்: என்னை பொய்ப்படுத்துவதன் மூலம் இறைவனைப் பொய்ப்படுத்துவது கட்டாயமானதாக ஆகி விடும் என்பதில் சந்தேகமில்லை. என்னை ஏற்றுக் கொள்வதன் மூலம் இறைவன் மெய்ப்பிக்கப்படுகின்றான். மேலும் அவனது இருப்பின் மீது வலுவான ஈமான் உருவாகின்றது.

பிறகு என்னைப் பொய்ப்படுத்துவது என்னை மட்டும் பொய்ப்படுத்துவது அல்ல. இது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களைப் பொய்ப்படுத்துவதாகும். ஒருவர் என்னைப் பொய்ப்படுத்துவதற்கும் மறுப்பதற்கும் துணிவதற்கு முன்னதாக சிறிதளவு தனது உள்ளத்தில் சிந்தித்துப் பார்த்து அவர் எவரைப் பொய்ப்படுத்துகின்றார் என்பது பற்றி அவரது உள்ளத்திடம் ஃபத்வா கேட்கட்டும்.

வாக்களிக்கப்பட்ட மஸீஹைப் பொய்ப்படுத்துவதன் மூலம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் பொய்ப்படுத்துவது கட்டாயமானதாக ஆகி விடுகின்றது என்பதை மேலும் விளக்கியவாறு இதற்கான காரணம் என்ன? எவ்வாறு வாக்களிக்கப்பட்ட மஸீஹை மறுப்பதனால் பெருமானார் (ஸல்) அவர்கள் பொய்ப்படுத்தப்படுகின்றார்கள் என்பது தொடர்பாக ஹுஸூர் (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்:

வாக்களிக்கப்பட்ட மஸீஹை மறுப்பதனால் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஏன் பொய்ப்படுத்தப்படுகின்றார்கள்? பெருமானார் (ஸல்) அவர்கள் ஒவ்வொரு நூற்றாண்டின் ஆரம்பத்திலும் சீர்திருத்தவாதி தோன்றுவார் என்று வாக்குறுதி வழங்கி இருந்தார்கள். அது பொய்யாகி விட்டது. (நவூதுபில்லாஹ் – அல்லாஹ் இதிலிருந்து காப்பானாக).

பிறகு பெருமானார் (ஸல்) அவர்கள் இமாமுக்கும் மின்கும் (உங்களது இமாம் உங்களிலிருந்து தோன்றுவார்) என்று கூறியதும் தவறாகி விட்டது. (நவூதுபில்லாஹ் – அல்லாஹ் இதிலிருந்து காப்பானாக) அன்னார் சிலுவைக் குழப்பம் நிலவும் சமயத்தில் ஒரு மஸீஹ் மற்றும் மஹ்தி வருவார் என்று கூறிய நற்செய்தியும் கூடத் தவறாக ஆகி விட்டது. (நவூதுபில்லாஹ் – அல்லாஹ் இதிலிருந்து காப்பானாக)

ஏனென்றால், இந்தக் குழப்பம் இருக்கின்றது. ஆனால், வர வேண்டிய அந்த இமாம் வரவில்லை. இந்த விஷயத்தை ஒருவர் ஏற்றுக் கொள்ளும் போது செயலளவில் அவர்

பெருமானார் (ஸல்) அவர்களைப் பொய்ப்படுத்துபவராக ஆகுவாரா? ஆக மாட்டாரா?

ஹுஸூர் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

மீண்டும் நான் விளக்கமாகக் கூறுகின்றேன். என்னைப் பொய்ப்படுத்துவது எளிதான காரியமல்ல. என்னைக் காஃபிர் என்று நீங்கள் கூறுவதற்கு முன்னதாக சுயமே நீங்கள் காஃபிராக ஆக வேண்டியது வரும். என்னை மார்க்கமற்றவன் என்றும் வழிதவறி விட்டவன் என்றும் கூறுவதற்கு முன்னதாக நீங்கள் வழிதவறிச் சென்று விட்டதையும் உங்களுக்கு ஏற்படுகின்ற இழிவையும் நீங்கள் ஏற்றுக் கொள்ள வேண்டியது வரும். திருக்குர்ஆனையும் ஹதீஸையும் கை விட்டு விட்டவன் என்று என்னைப் பற்றி கூறுவதற்கு முன்னதாக முதலில் சுயமே திருக்குர்ஆனையும் ஹதீஸையும் நீங்கள் கை விட வேண்டியது வரும்.

இவ்வாறிருந்தும் கூட அவர்தான் அவற்றைக் கை விட்டு விடுவார். (அதாவது நான் அவற்றைக் கை விட்டு விட்டேன் என்று கூறுபவர்தான் அவற்றைக் கை விட்டு விடுகின்றார்.)

அன்னார் கூறுகின்றார்கள்: நான் திருக்குர்ஆனையும் நபிமொழியையும் உண்மைப்படுத்துபவனாக இருக்கின்றேன். நான் வழிதவறிச் சென்றவன் அல்லன். நான் மஹ்தியாக இருக்கின்றேன். நான் காஃபிர் அல்ல. மாறாக, اَنَا اَوَّلُ الْمُؤْمِنِیْنَ (நான் நம்பிக்கை கொண்டவர்களில் முதன்மையானவனாக இருக்கின்றேன்) என்பதைச் சரியான முறையில் மெய்ப்பிக்கக் கூடியவனாக இருக்கின்றேன். எவற்றையெல்லாம் நான் கூறுகின்றேனோ அவை உண்மையாகும் என்பதை இறைவன் எனக்கு வெளிப்படுத்திக் காட்டியுள்ளான்.

எவருக்கு இறைவன் மீது உறுதி இருக்கின்றதோ, மேலும் எவர் திருக்குர்ஆன் உண்மையானது என்றும் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் உண்மையாளர் என்பதையும் ஏற்றுக் கொள்கின்றாரோ அவருக்கு எனது நாவிலிருந்து கூறப்படுவதைக் கேட்டு விட்டு அமைதியாக இருந்து விடுகின்ற அந்த அத்தாட்சியே போதுமானதாகும். ஆனால் எவர் துணிச்சலுடனும் தரக்குறைவாகவும் நடந்து கொள்கிறாரோ அவருக்கு என்ன சிகிச்சை செய்ய முடியும்? இறைவன் சுயமே அவருக்குக் புரிய வைப்பான்.

அவர்கள் இந்த எல்லா விஷயங்களையும் அவர்களிடம் வந்திருந்த ஒரு விருந்தினருக்கு புரிய வைத்தார்கள். அவர்கள் கூறினார்கள்: எனது விவகாரத்தில் அவசரம் காட்டாதீர்கள். மாறாக, நல்லெண்ணத்துடனும் மூளையில் எந்த எண்ணமும் இல்லாமல் இதுபற்றிச் சிந்தனை செய்யுங்கள்.

(மல்ஃபூஸாத் தொகுதி 4 பக்கம் 14–16; 1985 ஆம் ஆண்டு பதிப்பு – இங்கிலாந்தில் அச்சிடப்பட்டது)

பிறகு அன்னார் ஒரு சந்தர்ப்பதில் இவ்வாறு கூறுகின்றார்கள்:

எனவே இந்த மக்களது உள்ளத்தில் கருமித்தனமும் பிடிவாதமும் இல்லாமல் இருந்தால் அவர்கள் நான் கூறுவதைக் கேட்க வேண்டும். மேலும் எனக்கு பின்னால் வர வேண்டும். பிறகு இறைவன் அவர்களை இருளில் விட்டு விடுகின்றானா என்ன? அல்லது ஒளியின் பக்கம் கொண்டு செல்கின்றானா என்ன? என்பதை அவர்கள் பார்க்க வேண்டும். எவர் பொறுமையுடனும் உண்மையான உள்ளத்துடனும் எனக்குப் பின்னால் வருவாரோ அவர் அழிக்கப்பட மாட்டார் என்று நான் உறுதியாக நம்புகின்றேன். மாறாக, அவர் என்றும் அழியாத அந்த வாழ்க்கையின் பங்கைப் பெறுவார். அதாவது இவ்வுலகிலும் அவர் அருட்கொடையைப் பெறுவார். மறுமை வாழ்க்கையிலும் அல்லாஹ் அவர்களுக்கு அருட்கொடைகளை வழங்குவான்.

அன்னார் கூறுகின்றார்கள்: எவரது உள்ளம் தூய்மையாக இருக்கின்றதோ, மேலும் இறையச்சமும் அவரிடம் இருந்தால் அவருக்கு முன்னால் ஒருவர் இரண்டாவது முறையாக திரும்பி வருவது பற்றி ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் வழங்கியுள்ள தீர்ப்பை எடுத்துக் கூறுகின்றேன். அவர் எனக்கு அது பற்றி புரிய வைக்கட்டும். மஸீஹ் வருவதற்கு முன்னதாக எலியா வர வேண்டியது அவசியமானதல்லவா? என்ற யூதர்களின் கேள்விக்கு எந்தப் பதிலை ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் கூறினார்களோ அது சரியா? இல்லையா? என்பதை அவர் எனக்குப் புரிய வைக்கட்டும். யூதர்கள் தமது வேதத்தில் எழுதப்பட்டிருந்ததை அவர்களுக்கு முன்னால் வைத்தனர்.

அதாவது மலாக்கி தீர்க்கதரிசியின் நூலில் எலியா வருவது பற்றி எழுதப்பட்டிருக்கின்றது. எலியாவிற்கு ஒப்பானவர் பற்றிய எந்த குறிப்பும் அதில் இல்லை. சுயமே எலியா வருவது பற்றி தான் அதில் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. எலியாவிற்கு ஒப்பானவர் பற்றி அதில் குறிப்பிடப்படவில்லை. அவரது முன்மாதிரியாக திகழ்கின்ற ஒருவர் வருவது பற்றி அதில் எதுவும் எழுதப்பட்டிருக்கவில்லை.

அன்னார் கூறுகின்றார்கள்: வர வேண்டியவர் இதே யோவான்தான். நீங்கள் விரும்பினால் அவரை ஏற்றுக் கொள்ளுங்கள் என்று ஈஸா (அலை) அவர்கள் கூறுகின்றார்கள். இப்போது நீதியுடன் தீர்ப்புக் கூறுகின்ற ஒருவர் முன்னால் தீர்ப்பிற்காக இந்த விஷயத்தை வைத்து விட்டு அவர் யாருக்கு சாதகமாக தீர்ப்பு கூறுவார் என்பதை பாருங்கள். ஒரு நீதிபதி முன்னால் தீர்ப்பிற்காக இந்த விஷயத்தை வைத்து விட்டு அவர் யாருக்கு சாதகமாக தீர்ப்பு கூறுவார் என்பதைப் பாருங்கள். நிச்சயமாக அவர் யூதர்களுக்கு சாதகமாகத்தான் தீர்ப்பு கூறுவார்.

ஏனென்றால், வெளிப்படையாக என்ன எழுதப்பட்டிருக்கின்றதோ அதற்கு ஏற்பவே தீர்ப்பு கூறப்படும். (ஆனால், அந்த தீர்ப்பு சரியானதல்ல என்று அன்னார் கூறுகின்றார்கள்.) ஆனால் இறைவன் மீது நம்பிக்கை வைத்துள்ள மற்றும் இறைவனிடமிருந்து வருகின்ற தூதர்கள் எவ்வாறு வருகின்றனர் என்பதை அறிந்திருக்கின்ற நம்பிக்கை கொண்ட ஒருவர் மஸீஹ் எதைக் கூறினாரோ, எதனை செய்தாரோ அதுதான் சரியானது என்று உறுதியாக நம்புவார்.

ஹுஸூர் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

அதே போன்ற விவகாரம்தான் இந்த சமயத்திலும் இருக்கின்றதா? அல்லது இதற்கு வேறுபட்ட ஒன்றாக அது

இருக்கின்றதா? என்று நீங்களே கூறுங்கள். இறைவன் மீதுள்ள அச்சம் இருந்தால் எனது இந்த வாதம் பொய்யானதாகும் என்று கூறுவதற்குத் துணிகின்றபோது உடல் நடுங்கி விடும். அந்தோ பரிதாபம்! ஃபிர்அவ்னின் சமுதாயத்தைச் சார்ந்த ஒரு நபரிடம் இருந்த அந்த அளவு ஈமான் கூட இவர்களிடம் இல்லையா?

அந்த நபர் இவர் பொய்யராக இருந்தால் சுயமே இவர் அழிந்து விடுவார் என்றே அவர் கூறினார். என் தொடர்பாக தக்வாவுடன் செயல்படுபவராக இவர்கள் இருந்தால் இதையே அவர்களும் கூறியிருக்க வேண்டும். இறைவன் தனது ஆதரவையும் உதவியையும் எனக்கு வழங்குகின்றானா? அல்லது எனது இயக்கத்தை அழிக்கின்றானா? என்பதை அவர்கள் பார்க்க வேண்டும்.

(மல்ஃபூஸாத் தொகுதி 4 பக்கம் 30–31; 1985 ஆம் ஆண்டு பதிப்பு – இங்கிலாந்தில் அச்சிடப்பட்டது)

இன்றும் கூட அல்லாஹ்வின் அருளால் ஒரு குக்கிராமத்திலிருந்து எழுந்த ஓசை உலகிலுள்ள 210 நாடுகளில் பரவி விட்டது. இதுவே அவர்களின் உண்மைக்கான அடையாளமும் ஆகும்.

கடந்த 30 அல்லது 40 வருடங்களுக்கு முன்னர் அஹ்மதிய்யத் அந்த பகுதிகளில் சென்று சேரும் என்பதை கற்பனை செய்து கூட பார்த்திருக்க முடியாத உலகில் தொலை தூரப் பகுதிகளில் அஹ்மதிய்யத்தின் தூதுச் செய்தி மட்டும் சென்று சேரவில்லை. மாறாக, அல்லாஹ் அங்கு எத்தகைய உறுதியான ஈமான் உள்ளவர்களை உருவாக்கியுள்ளான் என்றால் அதைப் பார்த்து வியப்பு ஏற்படுகின்றது.

ஒரு சம்பவத்தைக் கூறுகின்றேன்: பெனின் ஆப்பிரிக்காவிலுள்ள ஒரு சிறிய நாடாகும். 2012 –ல் அங்கு ஒரு ஜமாஅத் நிறுவப்பட்டது. அந்த கிராமத்தைச் சார்ந்த ஓர் அஹ்மதி இப்ராஹீம் சாஹிப் அவர்கள் அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொண்டார்கள். அதற்கு முன்னரும் அங்கு முஸ்லிம்கள் இருந்தனர். போதுமான அளவு அறிவுள்ளவர்களாக அவர்கள் இருந்தனர்.

இப்ராஹீம் சாஹிப் அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொண்ட பிறகு கலப்பற்ற தன்மையிலும் பற்றுறுதியிலும் முன்னேற ஆரம்பித்தார். தமது உறவினர்களுக்கும் அவர் சகோதரருக்கும் தப்லீக் செய்ய ஆரம்பித்தார். இவர் தப்லீக் செய்து நமது மார்க்கத்திலிருந்து நம்மை விலக்குகின்றார் என்று இவரது தப்லீகினால் மிகவும் தொந்தரவுக்கு ஆளாகி விட்ட இவரது சகோதரர் இவருடன் சண்டையிட ஆரம்பித்தார்.

ஆனால், இவர்களோ தப்லீக் செய்து கொண்டே இருந்தார்கள். மக்களுக்கு அஹ்மதிய்யத்தின் தூதுச் செய்தியை, உண்மை இஸ்லாத்தின் தூதுச் செய்தியை அவர்கள் எட்ட வைத்துக் கொண்டே இருந்தார்கள். இவரது முயற்சியினால் அல்லாஹ்வின் அருளால் இவருக்கு அக்கம் பக்கத்திலுள்ள மூன்று கிராமத்தைச் சார்ந்தவர்களும் அஹ்மதிய்யத்தில் இணைந்து விட்டனர். இவரது சகோதரர் தனது ஒரு நண்பருடன் சேர்ந்து இவரைக் கொலை செய்யத் திட்டம் தீட்டினார். இதற்கு ஒரே சிகிச்சைதான் இருக்கின்றது. அதாவது இவரைக் கொலை செய்து விட வேண்டும் என்று அவர் தீர்மானித்தார்.

இப்ராஹீம் சாஹிப் கூறுகின்றார்கள்: நான் கனவில் எனது சகோதரரும் அவரது நண்பரும் ஒரு பெரிய குழியைத் தோண்டி அதில் எதையோ இடுவதைப் பார்த்தேன்.

இவர் கூறுகின்றார்: இவ்வாறு கனவு கண்டு மூன்று நாட்கள் கழிந்திருந்த நிலையில் இவரது மூத்த சகோதரரின் நண்பர் திடீரென்று நோய்வாய்ப்பட்டார். பிறகு அவர் மரணித்து விட்டார். இதைப் பார்த்த இவரது சகோதரர் அஹ்மதிகள் எனது நண்பர் மீது மந்திரம் செய்து விட்டனர் என்று கூற ஆரம்பித்தார்.

இவர்கள் கூறுகின்றார்கள்: சிறிது காலம் கழிந்ததும் நான் ஒரு கனவு கண்டேன். இவர்களது சகோதரர் ஒரு மரத்துடன் சேர்ந்து நின்றவாறு சுயமே தன்னை அளந்து பார்த்துக் கொண்டிருந்தார். அந்த பகுதியில் இந்த வழக்கம் இருந்து வந்தது. அதாவது அங்கு எவராவது மரணித்து விட்டால் அவரது கபருக்காக குழி தோண்டுவதற்காக மய்யித்தை மரத்துடன் சேர்த்து ஒட்டி வைத்து அதை அளந்து பார்ப்பார்கள். அதன் மூலம் அதன் அளவிற்கேற்ப கபர் அமைக்கப்படும்.

அவர்கள் கூறுகின்றார்கள்: சில நாட்கள் கழிந்த பிறகு மூத்த சகோதரரின் கருவுற்றிருந்த மனைவி நோய்ப்பட்டிருந்தார். இரண்டு நாட்களுக்குள் அவர் வஃபாத் ஆகி விட்டார். அவரது அப்பாவி குழந்தைகளும் நோய்வாய்ப்பட்டன. நோய் குறையவில்லை. அவரது சகோதரர் இவர் மந்திரத்தில் ஈடுபடுகின்ற ஒரு நபர் ஆவார் என்று இப்ராஹீம் சாஹிப் தொடர்பாக எல்லா இடங்களிலும் கூற ஆரம்பித்தார். அங்குள்ள உள்ளூர் அரசர் அதாவது Chief இடம் சென்று புகார் கூறினார்.

அந்த Chief கொஞ்சம் ரூபாயை இவரிடமிருந்து கேட்டார். அதை கொண்டு வா. நான் இவருக்கான சிகிச்சையை செய்வேன் என்று கூறினார். அவரது சகோதரரும் அந்த Chief –ற்கு தொகையை செலுத்தினார். அரசர் இப்ராஹீம் சாஹிபை அழைத்தார். இவர்கள் அவனிடம் சென்றதும் நீங்கள் என்ன வேடிக்கை காட்டிக் கொண்டிருக்கின்றீர்கள்? என்று அந்த Chief மிகவும் ஆத்திரத்துடன் கேட்டார்.

புதிய மதத்தை தழுவியுள்ளீர்கள். புதிய மார்க்கத்தை ஆரம்பித்துள்ளீர்கள். இவற்றையெல்லாம் உடனடியாக விட்டு விடுங்கள் என்று கூறினார். மேலும் தவ்பா செய்யுங்கள். அவ்வாறு செய்யாமல் இருந்தால் நாளை சூரியனை உங்களால் பார்க்க முடியாது. நாளைய நாள் உம்மீது உதயமாகாது என்று Chief கூறினார்.

அதற்கு இப்ராஹீம் சாஹிப் அவர்கள் மார்க்கத்தை உண்மை என்று புரிந்தே நான் ஏற்றுக் கொண்டேன். இதை என்னால் விட்டு விட முடியாது. மரணிப்பதைப் பொருத்த வரையில் வாழ்வும், மரணமும் அல்லாஹ்வின் கைகளில்தான் இருக்கின்றது என்று கூறினார்கள். அதற்கு இந்தப் பகுதியின் இறைவன் நான் ஆவேன். நான் விரும்புவதைச் செய்கின்றேன். நான் என்ன தீர்ப்பை வழங்க இருக்கின்றேன்

என்பதை நீங்கள் நன்கு தெரிந்திருக்கின்றீர்கள். எவரைப் பற்றி நாளைக்குள் அவர் இறந்து விடுவார் என்று நான் கூறுவேனோ அவர் கண்டிப்பாக இறந்து விடுவார் என்று Chief கூறினார். இப்ராஹீம் சாஹிப் அவர்கள் நல்லது, உங்களது வழக்கத்திற்கேற்ப மக்களுக்கு இவ்வாறு கூறிக் கொண்டிருப்பீர்கள்.

ஆனால், உங்களைப் பற்றி நான் எதுவும் கூறப்போவதில்லை. ஆனால் எனது மார்க்கத்தை நான் கை விட மாட்டேன். ஏனென்றால் இதுவே உண்மை ஆகும். இதுவே உண்மையான இஸ்லாம் ஆகும் என்று கூறினார்கள். இதைக் கேட்டு Chief –ற்கு மேலும் கோபம் வந்தது. தமது மக்களிடம் இவரை அறையில் அடைத்து வையுங்கள் என்று அவர் கூறினார். அவர்கள் அவரைக் கொண்டு சென்று கொண்டிருந்தபோது இப்ராஹீம் சாஹிப் அந்த மக்களைப் பார்த்து நீங்கள் எனக்கு மத்தியில் வர வேண்டாம். இந்த விவகாரத்தை விட்டு விடுங்கள். என்னைப் போக விடுங்கள் என்று கூறினார்கள். மக்களும் பேராசை உள்ளவர்களாக இருக்கின்றனர். அம்மக்கள் சிறிது தொகையை இவரிடமிருந்து எடுத்துக் கொண்டு இவரை விட்டு விட்டனர்.

அடுத்த நாளே இப்ராஹீம் சாஹிப் மீது அந்த அரசர் சூரியனை உதிக்க வைப்பது ஒருபுறம் இருக்கட்டும். அடுத்த நாளே அந்த அரசருக்கு பக்கவாதம் ஏற்பட்டு விட்டதாக தகவல் கிடைத்தது. அவருக்கு அசையக் கூட முடியவில்லை. இரண்டு நாட்கள் கழிந்ததும் அவர் மரணமடைந்தார்.

இதை பார்த்து இவர்களின் எதிரியாக இருந்த இவரது மூத்த சகோதரர் தமது குடும்பத்தினரிடம் எங்களுக்குள் சமாதானம் செய்து வையுங்கள். நான் எவரிடமும் சண்டையிட்டதில்லை என்று கூறினார். நாங்கள் எப்போதும் சமாதானத்தையே விரும்புகின்றோம். இஸ்லாத்தின் உண்மையான தூதுச் செய்தியும் இதுவேயாகும். Chief மரணமடைந்த இந்த அடையாளத்தைப் பார்த்து அந்த பகுதியில் பெரும் தாக்கம் ஏற்பட்டது. இது பற்றிய பெரிய சர்ச்சை நடைபெற்றது. உண்மை நிரூபணமானது. இவ்விஷயங்கள் அல்லாஹ்வின் அருளால் இன்றும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு ஆதரவாக இருந்து வருகின்றன. ஆதாரமாகத் திகழ்கின்றன.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: பாருங்கள். நான் இறைவன் மீது ஆணையிட்டுக் கூறுகின்றேன். என்னை மெய்ப்பிக்கின்ற வகையிலுள்ள ஆயிரக்கணக்கான அடையாளங்கள் வெளிப்பட்டுள்ளன. வெளிப்பட்டுக் கொண்டிருக்கின்றன. வருங்காலத்திலும் அவை வெளிப்படும் (அவை நின்றுவிடவில்லை).

ஹுஸூர் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: வருங்காலத்திலும் அவை வெளிப்படும். இது மனிதனின் திட்டமாக இருந்திருந்தால் அதற்கு இந்த அளவு ஆதரவும் உதவியும் ஒருபோதும் கிடைத்திருக்காது.

(ஹகீகத்துல் வஹி. ரூஹானீ கஸாயின் தொகுதி 22 பக்கம் 48)

இது அல்லாஹ்வின் திட்டமாகும். அதன் காரணமாகவே அதற்கு உதவி கிடைக்கின்றது.

ஒரு சந்தர்ப்பத்தில் சீர்த்திருத்தவாதி மற்றும் வாக்களிக்கப்பட்ட மஸீஹின் தேவை குறித்து ஹுஸூர் (அலை) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: எவ்வாறு ஒவ்வொரு விளைச்சலையும் அறுவடை செய்வதற்கான நேரம் வருகின்றதோ அவ்வாறே இப்போது குழப்பங்களை அகற்றுவதற்கான நேரம் வந்து விட்டது. (உலகில் பரவியுள்ள குழப்பங்கள், தீமைகள் ஆகியவற்றை அகற்றுவதற்கான நேரம் வந்து விட்டது.)

அவர்கள் கூறுகின்றார்கள்: உண்மையாளரை இழிவுபடுத்துவதிலும் அவருடன் அவமரியாதையாக நடந்து கொள்வதிலும் அதன் உச்சத்தை இவர்கள் அடைந்து விட்டனர். ஈ மற்றும் குளவிக்கு இருக்கும் மதிப்பு கூட பெருமானார் (ஸல்) அவர்களுக்கு வழங்கப்படவில்லை. (நஊதுபில்லாஹ்) வண்டிற்குக் கூட மனிதன் பயப்படுகின்றான். எறும்புகளிடமிருந்தும் கூட அவன் ஆபத்தை உணர்கின்றான்.

ஆனால் ஹஸ்ரத் நபி கரீம் (ஸல்) அவர்களை தீயவர் என்று கூறுவதற்கு எவரும் தயங்குவதில்லை. كَذَّبُوا بِآيَاتِنَا அவர்கள் எமது அடையாளங்கள் பொய்ப்படுத்தினர் என்பதை மெய்ப்பிப்பவர்களாக இவர்கள் இருக்கின்றனர். எவ்வளவு திறக்க முடியுமோ அந்த அளவு இவர்கள் தமது வாயைத் திறந்தனர். வாய் கிழிய ஏச்சுப்பேச்சுகளை இவர்கள் பேசினர். இறைவன் இவர்களை அகற்றுவதற்கான அந்த நேரம் உண்மையிலேயே இப்போது வந்து விட்டது. அத்தகைய தருணத்தில் அவன் எப்போதும் ஒரு மனிதரை பிறக்க வைக்கின்றான்.

அந்த மனிதர் அவனது மகத்துவம் மற்றும் கம்பீரத்திற்காக மிகவும் எழுச்சி உடையவராக இருக்கின்றார். அத்தகைய மனிதருக்கு அந்தரங்க உதவியின் ஆதரவு இருக்கின்றது. உண்மையில் எல்லாவற்றையும் சுயமே அல்லாஹ்தான் செய்கின்றான். ஆனால், அவன் ஒருவரை பிறக்கச் செய்வது அவனது நடைமுறைய நிறைவேற்றுவதாக இருக்கின்றது. وَلَنْ تَجِدَ لِسُنَّتِ اللّٰهِ تَبْدِيْلًا (அல்லாஹ்வின் நடைமுறையில் நீர் எந்த மாற்றத்தையும் காணமாட்டீர்).

தனது நடைமுறைக்கு ஏற்ப அல்லாஹ் என்னை அனுப்பிய அந்த நேரம் வந்து விட்டது என்று அவர்கள் கூறுகின்றார்கள். அன்னார் கூறுகின்றார்கள்:

இறைவனின் இயற்கை சட்டத்தின் மீது பார்வையை செலுத்தும்போது விஷயம் எல்லையைத் தாண்டிச் செல்கின்றபோது வானத்தில் ஆயத்தம் செய்யப்படுகின்றது என்பது தெரிய வருகின்றது. ஆயத்தம் செய்வதற்கான நேரம் வந்து விட்டது என்பதே இதன் அடையாளமாக இருக்கின்றது. உண்மையான நபி முஜத்தித் (சீர்த்திருத்தவாதி) மற்றும் தூதரின் பெரும் அடையாளம் இதுவேயாகும். அப்போது அவர்கள் குறித்த நேரத்தில் வருகின்றனர். தேவையிருக்கின்ற சமயத்தில் வருகின்றனர். வானத்தில் ஏதாவது ஆயத்தம் செய்யப்படுவதற்கான தருணம் இதுவல்ல என்று மக்களால் ஆணையிட்டுக் கூற முடியுமா?

அந்த காலத்தில் மட்டுமல்ல. இன்றும் கூட மக்கள் ஒரு சீர்திருத்தவாதியின் தேவை எங்களுக்கு இருக்கின்றது என்றே கூறுகின்றனர். மாறாக, பாகிஸ்தானில் சுயமே மவ்லவிகளே இதை கூறுகின்றனர். ஆனால், வாக்களிக்கப்பட்ட மஸீஹை மறுக்கின்றனர்.

அன்னார் கூறுகின்றார்கள்: நினைவில் வையுங்கள். எல்லாவற்றையும் சுயமே அல்லாஹ்வே செய்கின்றான். நாமும் நமது ஜமாஅத்திலுள்ள அனைவரும் அறைகளில் அமர்ந்து விட்டாலும் கூட பணி நடந்து விடும். மேலும், தஜ்ஜாலுக்கு வீழ்ச்சி ஏற்பட்டு விடும். تِلْكَ الْاَيَّامُ نُدَاوِلُهَا بَيْنَ النَّاسِ (இந்த நாட்கள் மக்களிடம் திரும்பத் திரும்ப வருகின்றன) தஜ்ஜால் உச்சத்தில் இருப்பது, நாட்கள் இப்படித்தான் மாறிக் கொண்டிருக்கின்றன என்பதை உணர்த்துகின்றது.

அன்னார் கூறுகின்றார்கள்: அவன் உச்சத்தில் இருப்பது அவனது வீழ்ச்சியின் நேரம் அருகில் இருக்கின்றது என்பதை தெரிவிக்கின்றது. ஒருவர் உச்சத்தை அடைந்து விட்டால், மேலும் அவன் நான் எல்லா ஆற்றல்களுக்கும் எஜமானனாக ஆகி விட்டேன். எல்லாம் எனது கைகளில் வந்து விட்டது என்று தன்னைப் பற்றி கருத ஆரம்பித்து விட்டால் உச்சத்திற்கு சென்ற பிறகு அங்கிருந்து அவரது வீழ்ச்சி ஆரம்பமாகி விடுகின்றது.

இவ்வாறே இந்த சக்திகளின் வீழ்ச்சியும் ஆரம்பமாகி விட்டது. இஸ்லாத்திற்கு எதிரான சக்திகள் அல்லது எவர்கள் அஹ்மதியத்திற்கு எதிராக அல்லது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு எதிராகச் செயல்படுகின்றனரோ அவர்களது வீழ்ச்சி ஆரம்பமாகி விட்டது.

அன்னார் கூறுகின்றார்கள்: அவனது உயர்வு அவன் கீழே வரப் போகின்றான் என்பதை வெளிப்படுத்துகின்றது. அவன் குடியேறுவது அவனது அழிவின் அடையாளமாகும். எனினும் குளிர்ந்த காற்று வீச ஆரம்பித்திருக்கின்றது. அல்லாஹ்வின் பணிகள் மெதுவாகத்தான் நடக்கின்றன.

சரிதான். அடையாளங்கள் தெரிவது ஆரம்பமாகி விட்டது. அல்லாஹ்வின் பணிகள் மெதுவாகத்தான் நடக்கின்றன. அவை நிறைவேறும் – இன்ஷா அல்லாஹ்.

ஹுஸூர் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: நம்மிடம் எந்தவோர் அடையாளமும் இல்லாமல் இருந்தாலும் கூட நாம் காலத்தின் நிலைமைகள் மீது பார்வையைச் செலுத்தியவாறு மஸீஹ் இதுவரை சிலுவையை முறிப்பதற்கு ஏன் வரவில்லை? என்று அவரை தேடிப் பைத்தியக்காரர்களைப் போன்று திரிவது முஸ்லிம்கள் மீது கடமையாக இருக்கின்றது. அவர்களுக்கிடையில் நடைபெறும் சண்டைகளில் தீர்த்து வைப்பதற்கு அவரை அவர்கள் அழைத்திருக்கக் கூடாது.

இஸ்லாத்தின் மீது தன்மான உணர்வு இருந்திருந்தால் இஸ்லாத்தை தற்காத்து கொள்வதற்காக மஸீஹை அவர்கள் அழைத்திருக்க வேண்டும். தங்களுக்கிடையில் நடக்கின்ற சண்டைகளைத் தீர்த்து வைப்பதற்காக அவரை அழைத்திருக்கக் கூடாது.

அன்னார் கூறுகின்றார்கள்: "அவரது பணி சிலுவையை முறிப்பதாகும். அதுதான் காலத்திற்கு தேவைப்படுகின்றது." தொடர்ந்து கூறுகின்றார்கள்: நாத்திகம் எல்லா இடங்களிலும் பரவி விட்டது. அதை மறுப்பதற்கே நான் வந்துள்ளேன்"

(மல்ஃபூஸாத் தொகுதி 7 பக்கம் 28; 1985 ஆம் ஆண்டு பதிப்பு – இங்கிலாந்தில் அச்சிடப்பட்டது)

மேலும் இதனை விளைக்கியவாறு ஓரிடத்தில் அன்னார் இவ்வாறு கூறுகின்றார்கள்:

இதனால்தான் அவரது பெயர் வாக்களிக்கப்பட்ட மஸீஹாக இருக்கின்றது. முல்லாக்களின் கண்களுக்கு முன்னால் மனித இனத்தின் நன்மை மற்றும் வளர்ச்சி ஆகியவை இருந்திருந்தால் அதை அவர்கள் கருத்தில் கொண்டிருந்தால் நம்மிடம் நடந்து கொள்வது போன்று அவர்கள் ஒருபோதும் நடந்து கொண்டிருக்க மாட்டார்கள். அவர்கள் நமக்கு எதிராக ஃபத்வாக்களை எழுதி எதை உருவாக்கியுள்ளார்கள் என்பதைப் பற்றி அவர்கள் சிந்திக்க வேண்டும்.

எதைப் பற்றி இறைவன் ஆகுக என்று கூறுகின்றானோ அது ஆகக் கூடாது என்று எவரால் கூற முடியும்? ஃபத்வாக்களை எழுதியதனால் என்ன பலன் கிடைத்தது? ஜமாஅத் அவ்வாறே முன்னேறிச் சென்று கொண்டிருக்கின்றது. இறைவனே ஒன்றைப் பற்றி அது ஆகி விட வேண்டும் என்று தீர்மானித்து விட்டால் அது ஆகி விடுகின்றது. பிறகு யாரும் அதை தடுக்க முடியாது.

அன்னார் கூறுகின்றார்கள்: நமது எதிரிகளும் கூட நமது தொண்டர்களாகவும் ஊழியர்களாகவும் இருக்கின்றனர். ஏதாவதொரு வகையில் நம்மைப் பற்றிய விஷயத்தை கிழக்கிலும் மேற்கிலும் இவர்கள் சென்று சேர வைக்கின்றனர்.

(மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 398; 1985 ஆம் ஆண்டு பதிப்பு – இங்கிலாந்தில் அச்சிடப்பட்டது)

எதிர்ப்புகளின் மூலமாக அஹ்மதிய்யத் அதாவது, உண்மை இஸ்லாத்தின் தூதுச் செய்தியை இவர்கள் மற்றவர்கள் வரை கொண்டு சேர்க்கின்றனர். ஏனென்றால் இவ்வாறும் மக்களுக்கு கவனம் உருவாகின்றது. பல மக்களும் கடிதங்கள் எழுதுகின்றனர். மேலும் நம்மைத் தொடர்பு கொள்கின்றனர்.

இந்த மவ்லவி உங்களை எதிர்ப்பதன் காரணமாகவும் இந்த இடத்தில் உங்களுக்கு எதிராக விஷயங்கள் பேசப்பட்டதன் காரணமாகவும் எங்களுக்கு இதைப் பற்றி அறிய வேண்டும் என்ற தேட்டம் ஏற்பட்டது. நாங்கள் இது பற்றி ஆய்வு செய்ய ஆரம்பித்தோம் என்று கூறுகின்றனர்.

இப்போது இணையதளம் மூலமாக எல்லா இடங்களிலும் ஜமாஅத்தின் நூல்கள் இருக்கின்றன. பல விஷயங்களும் கிடைக்கின்றன. அதன் மூலம் பலவற்றையும் நாம் ஒப்பிட்டுப் பார்க்க முடியும். எனவே, நன்றாக ஆராய்ந்து பார்த்த பிறகு நாங்கள் ஜமாஅத்தில் இணைய விரும்புகின்றோம் என்று அவர்கள் கூறுகின்றனர். எதிரிகளின் எதிர்ப்பும் கூட தப்லீகிற்கான வழியாக ஆகிக் கொண்டிருக்கின்றது. நாங்கள் இஸ்லாத்தின் போதனைகளுக்கு ஏற்ப செயல்படுகின்றோம்.

முதலிலேயே இந்த அளவு அதிகமாக பிரிவுகள் இருக்கின்றன. பிறகு ஒரு புதிய பிரிவை ஏற்படுத்த வேண்டிய தேவை என்ன? அவர்களின் ஜமாஅத்தில் இணைய வேண்டிய தேவை என்ன? என்ற ஆட்சேபனைக்குப் பதில் கூறியவாறு இவ்வாறு கூறுகின்றார்கள்.

அன்னார் கூறுகின்றார்கள்: நமது அஹ்மதிகள் கூட ஆட்சேபனை செய்பவர்களின் இந்த கூற்றுக்களைக் கேட்டு விட்டு அமைதியாக இருந்து விடுகின்றனர். (இன்னும் கூட என்ன பதில் கூற வேண்டும் என்று தெரியாமல் இவ்வாறு அமைதியாக இருக்கின்ற சிலர் இருக்கின்றனர்.)

அன்னார் கூறுகின்றனார்கள்: பல மக்களும் இந்த இயக்கத்தின் தேவை என்ன? நாங்கள் தொழவில்லையா? நோன்பு பிடிக்கவில்லையா? என்று கேட்டு இவ்வாறு அவர்கள் ஏமாற்றுகின்றனர். அத்தகைய விஷயங்களைக் கேட்டு அது பற்றித் தெரியாமல் இருக்கின்ற மக்கள் ஏமாந்து விடுகின்றனர் என்பதில் எவ்வித வியப்பும் இல்லை. அவர்களுடன் சேர்ந்து இவர்களும் நாம் தொழுகின்றோம், நோன்பு வைக்கின்றோம். திரும்பத் திரும்ப சில திக்ருகளைக் கூறுகின்றோம்.

பிறகு ஏன் நமக்கிடையில் இந்த பிளவு ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது? என்று அவர்கள் கேட்கின்றனர். (புதிய பிரிவை ஏற்படுத்தி ஏன் பிளவை ஏற்படுத்த வேண்டும்? என்று கேட்கின்றனர். உங்களுடன் வந்து சேர்வதற்கான தேவை என்ன வந்து விட்டது? என்று கேட்கின்றனர். குழப்பத்தை ஏன் ஏற்படுத்த வேண்டும்? என்று கேட்கின்றனர்.)

அன்னார் கூறுகின்றார்கள்: நினைவில் கொள்ளுங்கள். அத்தகைய விஷயங்களைக் குறைவான புரியும் திறன் மற்றும் ஞானம் இல்லாததன் காரணமாகவே அவர்கள் பேசுகின்றனர். இந்தப் பிளவை ஏற்படுத்துவது எனது பணியல்ல. இந்த பிளவு ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது என்றால் அல்லாஹ்தான் அதை ஏற்படுத்தியுள்ளான். அவனே இந்த இயக்கத்தை நிலைநாட்டியுள்ளான்.

நான் இந்த இயக்கத்தை நிறுவவில்லை. மாறாக, அல்லாஹ்தான் இதனை நிலைநாட்டியுள்ளான். ஏனென்றால் ஈமானின் நிலைமை பலவீனமடைந்து ஈமானிய ஆற்றல் முற்றிலுமே இல்லாத நிலைமை வரை சென்று விட்டது. உண்மையான ஈமானின் ஆன்மாவை ஊத இறைவன் விரும்புகின்றான். இந்த இயக்கத்தின் மூலமாக அவன் அதைச் செய்ய விரும்புகின்றான். அத்தகைய நிலைமையில் அம்மக்களின் ஆட்சேபனை தேவையற்றதும் பொருத்தமற்ற வீணான ஆட்சேபனையாக இருக்கின்றது.

எனவே, நினைவில் கொள்ளுங்கள். அதுபோன்ற சந்தேகம் ஒருபோதும் எவரது உள்ளத்திலும் வரவே கூடாது. முழுமையாகக் கவனமாகச் சிந்தித்துப் பார்த்தால் இந்த சந்தேகம் எழவே முடியாது. கவனமாகச் சிந்திக்காததன் காரணமாகத்தான் சந்தேகம் வருகின்றது. அவர்கள் வெளிப்படையான நிலைமைகளைப் பார்த்து விட்டு மற்ற முஸ்லிம்களும் இருக்கின்றனர் என்று கூறி விடுகின்றனர். இது போன்ற சந்தேகங்களால் மனிதன் விரைவில் அழிந்து விடுகின்றான்.

அவர்கள் கூறுகின்றார்கள்: இவ்வகையைச் சார்ந்த மக்களின் சில கடிதங்களை நான் பார்த்திருக்கின்றேன். வெளிப்படையாகப் பார்க்கும் போது அவர்கள் நமது ஜமாஅத்தில் பைஅத் செய்து இணைந்திருக்கின்றனர். அவர்கள் கூறுகின்றனர். ஏனைய முஸ்லிம்கள் தொழுகின்றனர். கலிமா கூறுகின்றனர். நோன்பு வைக்கின்றனர். நல்ல பணிகளைச் செய்கின்றனர். நல்லவர்களாக தெரிகின்றனர். பிறகு இந்த புதிய இயக்கத்தின் தேவை என்ன வந்து விட்டது? என்று எங்களிடம் கேட்கப்படுகின்றது என்று கூறுகின்றனர்.

இந்த மக்கள் நமது ஜமாஅத்தில் இணைந்திருந்தும் கூட அத்தகைய ஆட்சேபனைகளையும் சந்தேகத்தை ஏற்படுத்துகின்ற விஷயங்களையும் கேட்டு விட்டு எங்களுக்கு இந்த கேள்விக்குப் பதில் கூற முடியவில்லை என்று எனக்கு எழுதுகின்றனர். அத்தகைய கடிதங்களைப் படித்து விட்டு அத்தகைய மக்கள் பற்றி எனக்கு வருத்தம் ஏற்படுகின்றது. அவர்கள் மீது கருணை ஏற்படுகின்றது. அவர்கள் நமது அசல் நோக்கத்தையும் குறிக்கோள்களையும் புரிந்து கொள்ளவில்லை.

சடங்கு என்ற ரீதியில் இம்மக்கள் நம்மை போன்றே இஸ்லாமிய வழிமுறைகளைப் பேணுகின்றனர் என்பதையும் இறைவன் கூறியுள்ள கடமைகளை அவர்கள் நிறைவேற்றுகின்றனர் என்பதையும் மட்டும் அவர்கள் பார்க்கின்றனர். ஆனால் உண்மையின் ஆன்மா அவர்களிடம் இருப்பதில்லை. கடமை என்ற அளவில் வெளிப்படையாக மட்டும் இவற்றை செய்தால் போதாது.

மாறாக, உண்மையான முறையில் இறைவணக்கத்தையும் மற்ற கடமைகளையும் நிறைவேற்ற வேண்டும். எனவேதான் இந்த விஷயங்களும் சந்தேகத்தை ஏற்படுத்துகின்ற கூற்றுகளும் சூனியம் போன்று அவர்களிடம் அதன் விளைவைக் காட்டுகின்றன. அந்தத் தருணத்தில் உண்மையான ஈமானை நாம் உருவாக்க வேண்டும் என்பதை பற்றி அவர்கள் சிந்திப்பதில்லை. அது மனிதனைப் பாவத்தின் மரணத்திலிருந்து காப்பாற்றுகின்றது. இந்த சடங்குகளைப் பின்பற்றி நடக்கின்ற மக்களிடம் அந்த விஷயம் இருப்பதில்லை.

அவர்களது பார்வை வெளிப்படையானவற்றின் மீதே இருக்கின்றது. உண்மையின் பக்கம் அவர்களின் பார்வை இருப்பதில்லை. அவர்களின் கையில் தோல் இருக்கின்றது. ஆனால் அதில் சத்து இருப்பதில்லை.

(மல்ஃபூஸாத் தொகுதி 6 பக்கம் 237–239; 1985 ஆம் ஆண்டு பதிப்பு – இங்கிலாந்தில் அச்சிடப்பட்டது)

எனவே, வெளிப்படையான செயல்களில் முஸ்லிம்களும் ஈடுபடுகின்றனர். ஆனால் அவற்றின் ஆன்மா அவர்களிடம் இல்லை. தக்வா அவர்களிடம் இல்லை.

அன்னார் கூறுகின்றார்கள்: முஸ்லிம்கள் என்று தங்களைக் கூறிக் கொள்பவர்களின் செயல்கள் பொருத்தமான நற்செயல்களாக இருந்தால், பிறகு அதன் தூய விளைவுகள் ஏன் உருவாகுவதில்லை?

இந்த விஷயத்தை விளக்கியவாறு அன்னார் கூறுகின்றார்கள்:

நம்மிடம் இஸ்லாத்திற்கு மாற்றமான எந்த விஷயம் இருக்கின்றது? என்பதை இம்மக்கள் (அதாவது முஸ்லிம்களில் சிலர்) புரியாமல் இருக்கின்றனர். நாம் லாயிலாஹ இல்லல்லாஹ் என்று கூறுகின்றோம். தொழுகைகளை நிறைவேற்றுகின்றோம். நோன்பின் நாட்களில் நோன்பும் நோற்கின்றோம். ஸக்காத்தும் கொடுக்கின்றோம். அவ்வாறே நாங்களும் செய்கின்றோம் என்று அவர்கள் கூறுகின்றனர். இஸ்லாத்தின் உண்மைக்கு மாறுபட்ட எந்தச் செயலையும் நாங்கள் செய்யவில்லை என்கின்றனர்.

ஆனால், அவர்களது செயல்கள் பொருத்தமான நற்செயல்களாக இல்லை என்று நான் கூறுகின்றேன். மாறாக, அது சத்து இல்லாத தோல் மட்டும் இருக்கின்ற பழமாக இருக்கின்றது. அது அல்லாமல் இன்று பொருத்தமான நற்செயல்களாக இருந்தால் பிறகு அவற்றின் தூய விளைவுகள் ஏன் உருவாகாமல் இருக்கின்றது?

எல்லா வகையான குழப்பம் மற்றும் கலப்படத்திலிருந்து அந்த செயல்கள் தூய்மையாக இருக்கும்போதுதான் அவை பொருத்தமான நற்செயல்களாக இருக்க முடியும். ஆனால், அவர்களிடம் இந்த விஷயம் எங்கு இருக்கின்றது, ஒருவர் நம்பிக்கை கொண்டவராகவும் இறையச்சமுள்ளவராகவும் இருந்து பொருத்தமான நற்செயல்களைச் செய்பவராகவும் இருந்து உண்மையின் எதிரியாகவும் அவர் இருப்பார் என்பதன் மீது ஒருபோதும் என்னால் உறுதி கொள்ள முடியாது. இந்த மக்கள் நம்மைச் சுதந்திரமாக செயல்படுபவர்கள் என்றும் நாத்திகர்கள் என்றும் கூறுகின்றனர். ஆனால் இறைவனுக்கு அவர்கள் அஞ்சுவதில்லை.

அல்லாஹ் என்னைத் தூதராக நியமித்து அனுப்பியுள்ளான் என்று நான் அல்லாஹ்வின் மீது ஆணையிட்டுக் கூறியுள்ளேன். அவர்களது உள்ளத்தில் அல்லாஹ்வின் மகத்துவம் சிறிதளவு இருந்திருந்தால் அவர்கள் என்னை மறுத்திருக்க மாட்டார்கள். நாம் இறைவனின் பெயரைக் குறைத்து விடக் கூடியவர்களாக ஆகிவிடக் கூடாதே என்று அவர்கள் அஞ்சியிருப்பர்.

அவர்களிடம் அல்லாஹ்வின் மீது உண்மையான மற்றும் அசல் ஈமான் இருக்கும்போதுதான் இது நடக்க முடியும். மேலும் அவர்கள் தண்டனை கிடைக்கும் நாளுக்கு அஞ்ச வேண்டும். மேலும் நீங்கள் அறியாததை நீங்கள் பின்பற்றிச் செல்ல வேண்டாம் என்பதற்கு ஏற்ப அவர்கள் செயல்பட வேண்டும்.

(மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 343; 1985 ஆம் ஆண்டு பதிப்பு – இங்கிலாந்தில் அச்சிடப்பட்டது)

உட்புற மற்றும் வெளிப்புற குழப்பங்களின் தாக்குதல்களிலிருந்து இஸ்லாத்தை பாதுகாப்பது தான் வாக்களிக்கப்பட்ட மஸீஹின் வருகையின் நோக்கமாகும் என்பதை எடுத்துக் கூறியவாறு ஹுஸூர் (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்: பெருமானார் (ஸல்) அவர்கள் இறுதிக் காலம் தொடர்பாக அந்த நேரத்தில் இரு வகையான குழப்பங்கள் ஏற்படும் என்று தெரிவித்திருந்தார்கள். ஒன்று, உட்புற குழப்பங்கள்; மற்றொன்று, வெளிப்புற குழப்பங்களாகும்.

உட்புற குழப்பம் என்பது முஸ்லிம்கள் உண்மையான நேர்வழியில் நிலைத்திருக்க மாட்டார்கள் என்பதாகும். ஷய்த்தானின் செயல்கள் மற்றும் அவனது ஊடுருவலுக்கு கீழே அவர்கள் வந்து விடுவர். அவர்களிடம் எந்தவொரு பொருத்தமான நற்செயலும் இருக்காது. சூதாட்டம், விபச்சாரம், மது அருந்துதல் மற்றும் எல்லா விதமான குழப்பங்கள் மற்றும் தீமைகளில் ஈடுபட்டு அல்லாஹ் ஏற்படுத்தி இருந்த வரம்புகளை விட்டும் அவர்கள் வெளியேறி விடுவர்.

இறைவன் தடுத்தவற்றிலிருந்து விலகியிருப்பதைச் சிறிதும் பொருட்படுத்தாமல் அவர்கள் இருப்பர். தொழுகையையும் நோன்பையும் அவர்கள் கை விட்டு விடுவர். இறைக் கட்டளைகளை அவமதிக்கின்ற நிலை இருக்கும். திருக்குர்ஆனின் கட்டளைகளை எள்ளி நகையாடி அவற்றை பரிகாசம் செய்கின்ற நிலை இருக்கும்.

இவை உட்புற குழப்பங்களாகும். அதாவது முஸ்லிம்களின் செயல் அளவிலான நிலைமையில் சீர்குலைவு ஏற்பட்டு விடும். பெரும்பாலும் முஸ்லிம்களின் நிலை உலகில் இவ்வாறுதான் இருந்து வருகின்றது. அவர்களில் பரஸ்பரம் ஒருவர் மற்றவர் மீது எவ்வாறு அநீதி இழைக்கின்றனர் என்பதை நாம் பார்க்கின்றோம்.

வெளிப்புற குழப்பம் என்னவென்றால், பெருமானார் (ஸல்) அவர்களின் தூய இருப்பின் மீது பொய்யான விஷயங்கள் புனைந்து கூறப்படும். இந்த விஷயமும் இன்றைய நாட்களில் அதிகமாக நடக்கின்றன.

எல்லா வகையான உள்ளத்தைப் புண்படுத்துகின்ற தாக்குதல்கள் மூலமாக இஸ்லாத்தை இழிவுபடுத்துவதற்கும் அதை அழிப்பதற்கும் முயற்சிகள் செய்யப்படும். மஸீஹ் இறைவனாக இருக்கின்றார் என்பதை நம்ப வைப்பதற்கும் அவரது சாபத்திற்குரிய சிலுவை மரணம் மீது நம்பிக்கை கொள்ள வைப்பதற்கு எல்லா விதமான தந்திரங்களும் சூழ்ச்சிகளும் கையாளப்படும்.

சுருக்கமாக, இந்த இரு வகையான உட்புற மற்றும் வெளிப்புற குழப்பங்களைச் சீர்திருத்துவதற்காக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மூலமாக இதற்காக ஒரு நபர் அவர்களது உம்மத்திலிருந்து எழுப்பப்படுவார். அவர் வெளிப்புறக் குழப்பங்கள் அதாவது சிலுவை மார்க்கத்தின் குழப்பங்களை அகற்றுபவராக இருப்பார். இந்த வகையில் அவர் மர்யமின் மகனான ஈஸாவாக இருப்பார்.

உட்புறப் பிளவுகளையும் தவறான வழிகளையும் அகற்றி நேர்வழியின் உண்மையான பாதையை அவர் நிலைநாட்டுவார். இதனால் அவர் மஹ்தி என்று அழைக்கப்படுவார் என்று பெருமானார் (ஸல்) அவர்கள் நற்செய்தி கூறியுள்ளார்கள். இந்த நற்செய்தியின் பக்கமே وَآخَرِينَ مِنْهُمْ என்ற வசனத்திலும் சைகையாக சுட்டிக் காட்டப்பட்டிருக்கின்றது.

(மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 444–445; 1985 ஆம் ஆண்டு பதிப்பு – இங்கிலாந்தில் அச்சிடப்பட்டது)

நாம் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை ஏற்றுக் கொண்டிருக்கின்றோம். அல்லாஹ்வுடன்

நமக்கு இருக்கும் தொடர்பும் நமது தக்வாவின் தரமும் மற்ற முஸ்லிம்களை விட உயர்ந்த நிலையில் இருக்க வேண்டும். அவர்கள் பொதுவாக படம்பிடித்துக் காட்டியுள்ள அந்த விஷயங்கள் நம்மிடம் இருக்கக் கூடாது. நமது செயலளவிலான நிலைமை மற்றவர்களை விடச் சிறந்ததாக இருக்க வேண்டும். நமது செயல்கள் இறைவனின் திருப்தியைப் பெறும் வகையில் நற்செயல்களாக இருக்க வேண்டும்.

இந்த விஷயத்தை விளக்கியவாறு அவர்கள் கூறுகின்றார்கள்: மனிதன் பைஅத் செய்து விட்டு இந்த இயக்கம் உண்மையானது என்பதை மட்டும் ஏற்றுக் கொள்வது போதுமானதல்ல. இவற்றை ஏற்றுக் கொள்வதனால் மட்டும் இறைவன் மகிழ்ச்சியடைந்து விடுவதில்லை. இந்த இயக்கத்தில் இணைந்திருப்பதனால் நல்லவராக ஆகுவதற்கு முயற்சி செய்யுங்கள். இறையச்சம் உள்ளவராக ஆகுங்கள்.

ஒவ்வொரு தீமையில் இருந்தும் விலகியிருங்கள். இந்த சமயத்தை துஆக்கள் செய்தவாறு கழியுங்கள். இரவு பகலாக இறைவனிடம் மன்றாடுவதில் ஈடுபடுங்கள். சோதனையின் சமயம் வரும்போது இறைவனின் கோபமும் அதிகமாக வெளிப்படுகின்றது. அத்தகைய தருணத்தில் துஆக்கள் செய்வது, மன்றாடுவது மற்றும் ஸதகா வழங்குவது ஆகியவற்றை செய்யுங்கள். நாவை மென்மையாக வைத்திருங்கள். இஸ்திஃபார் செய்வதை உங்களது அன்றாட வழக்கமாக ஆக்கிக் கொள்ளுங்கள். தொழுகைகளில் துஆக்கள் செய்யுங்கள்.

உழைக்கின்ற நிலையில் எவரும் மரணிப்பதில்லை என்ற புகழ்பெற்ற ஒரு கூற்று இருக்கின்றது. வெறுமனே நம்பிக்கை கொள்வது மனிதனுக்கு பயன் தராது. மனிதன் நம்பிக்கை கொண்ட பிறகு அதனை முதுகுக்குப் பின்னால் எறிந்து விட்டால் பிறகு அதனாலும் எந்த பயனும் ஏற்படாது. இதற்கு பிறகு பைஅத் செய்ததனால் எந்த பயனும் ஏற்படவில்லை என்று புகார் கூறுவது வீணான செயலாகும். அல்லாஹ் வெறுமனே வார்த்தைகளால் மட்டும் திருப்தி அடைந்து விட மாட்டான்.

ஒவ்வொரு பொருத்தமான நற்செயலையும் புகழ்ந்து கூறியவாறு பொருத்தமான நற்செயல்கள் என்றால் என்ன? என்பது பற்றி ஹுஸூர் (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்: அல்லாஹ் திருக்குர்ஆனில் நன்னம்பிக்கையுடன் நற்செயல்களையும் வைத்துள்ளான். எதில் ஓர் அணுவளவு கூட குழப்பம் இருக்காதோ அதனையே அமலே சாலிஹ் அதாவது பொருத்தமான நற்செயல் என்று நாம் கூறுகின்றோம். நினைவில் கொள்ளுங்கள். மனிதனின் செயல்கள் மீது எப்போதும் திருடர்கள் தாக்குதல் நடத்துகின்றனர். அவ்வாறு அவை திருடப்படுகின்றன?

வெளி வேஷம் அதாவது பிறருக்குக் காட்டுவதற்கான மனிதன் ஒரு செயலைச் செய்வது, அந்த செயலைச் செய்து விட்டு சுயமே அவன் மகிழ்ச்சியடைவது, பல வகையான தீய செயல்கள் மற்றும் அவனிடமிருந்து நிகழ்கின்ற பாவங்கள் ஆகியவற்றால் செயல்கள் பொய்யானதாக ஆகி விடுகின்றது.

தொடர்ந்து கூறுகின்றார்கள்: பொருத்தமான நற்செயல் எதுவென்றால் அதில் அநீதியிழைப்பது, நன்மை செய்து விட்டு அதில் சுயமே தானே திருப்தியடைந்து விடுவது, வெளி வேஷம், கர்வம் மற்றும் மனிதனின் உரிமைகளைப் பறிப்பது ஆகியவை தொடர்பான எண்ணமே இருக்காது. எவ்வாறு நற்செயல்களைச் செய்வதன் மூலமாக மனிதன் மறுமையில் தப்பி விடுகின்றானோ அவ்வாறே உலகிலும் அவன் தப்பி விடுகின்றான்.

அதாவது மறுமையிலும் நல்ல செயல்களின் காரணமாகத்தான் நாம் நம்மை காப்பாற்றிக் கொள்வதற்கான வழிவகைகள் உருவாகும். நற்செயல்கள் நம்மிடம் இருந்தால் அல்லாஹ் நம்மிடம் திருப்தியடைவான். தனது அருட்கொடைகளை வழங்குவான். இவ்வாறு உலகிலும் நாம் நற்செயல்களைச் செய்பவர்களாக இருந்தால் பல வகையான உலக கவலைகளில் இருந்தும் துன்பங்களிலிருந்தும் மனிதன் தன்னை காப்பாற்றிக் கொள்கின்றான்.

ஹுஸூர் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

முழு வீட்டிலும் பொருத்தமான நற்செயலைச் செய்பவர் ஒருவர் இருந்தாலும் கூட அதனால் முழு வீடும் பாதுகாக்கப்படுகின்றது. எதுவரை உங்களிடம் பொருத்தமான நற்செயல் இருக்காதோ அதுவரை நம்பிக்கை கொள்வது எந்தப் பயனையும் தராது. ஒரு மருத்துவர் ஒரு மருந்துச் சீட்டை எழுதிக் கொடுத்தால் அதன் பொருள் அதில் என்ன மருந்து எழுதப்பட்டிருக்கின்றதோ அதை வாங்கி அருந்துவதாகும். அதனை அவர் பயன்படுத்த வேண்டும். மருந்துச் சீட்டை மட்டும் வாங்கி எங்காவது வைத்து விட்டுச் சென்று விட்டால் அதனால் என்ன பயன் ஏற்படும்?

இப்போது நீங்கள் தவ்பா செய்துள்ளீர்கள் என்றால் வருங்காலத்தில் இந்த தவ்பாவின் மூலமாக உங்களை எந்த அளவு நீங்கள் சுத்தப்படுத்தியுள்ளீர்கள் என்பதை இறைவன் பார்க்க விரும்புகின்றான். இப்போது தக்வாவின் மூலமாக உங்களை இறைவன் பிரித்தறிந்து கொள்ள விரும்புகின்ற காலமாக இது இருக்கின்றது. பல மக்களும் இறைவன் மீது புகார் கூறுகின்றனர். தமது ஆன்மாவை அவர்கள் பார்ப்பதில்லை. மனிதனின் ஆன்மாவில் அநீதியிழைத்தல் இருக்கின்றது. அது அல்லாமல் இறைவன் கருணை காட்டுபவனாகவும் பரிவுடன் நடந்து கொள்பவனாகவும் இருக்கின்றான்.

அவர்கள் கூறுகின்றார்கள்: சில மனிதர்களுக்குப் பாவம் பற்றித் தெரிந்திருக்கும். சிலருக்குப் பாவம் பற்றி எதுவும் தெரியாமல் கூட இருக்கும். எனவேதான், அல்லாஹ் நிரந்தரமாக இஸ்திஃபார் செய்வதைக் கட்டாயமாகப் பேண வேண்டும் என்று கூறியுள்ளான். இஸ்திஃபார் செய்து கொண்டேயிருக்க வேண்டும்.

மனிதன் ஒவ்வொரு பாவத்திற்காகவும் அவை வெளிப்படையான பாவமாக அல்லது அந்தரங்க பாவமாக இருந்தாலும், அதைப் பற்றிய அறிவு அவனுக்கு இருந்தாலும் இல்லா விட்டாலும் கை, கால்கள், நாவு, காது மற்றும் கண்களின் எல்லா வகையான பாவங்களிலிருந்தும் பாவமன்னிப்புத் தேடியவாறு இஸ்திஃபார் செய்து கொண்டே இருக்க வேண்டும். உடலின் எந்த உறுப்பின் மூலமாகவும்

பாவம் நிகழ்ந்து விடாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். உடலின் ஒவ்வொரு பகுதியும் பாவத்திலிருந்து தவிர்ந்திருப்பதற்கு இஸ்திக்ஃபார் செய்து வர வேண்டும். இன்றைய நாட்களில் ஆதம் (அலை) அவர்கள் செய்த துஆவை ஓத வேண்டும். (அது எந்த துஆ?)

رَبَّنَا ظَلَمْنَآ اَنْفُسَنَا وَاِنْ لَّمْ تَغْفِرْ لَنَا وَتَرْحَمْنَا لَنَكُوْنَنَّ مِنَ الْخٰسِرِيْنَ

இந்த துஆவானது ஆரம்பத்திலேயே ஏற்றுக் கொள்ளப்பட்டு விட்டது. கவனமற்ற நிலையில் வாழ்க்கையைக் கழித்து விடாதீர்கள். எவர்கள் கவனமற்ற நிலையில் வாழ்வைக் கழிக்காமல் இருக்கின்றனரோ அவர்கள் அவர்களது சக்திக்கு அப்பாற்பட்ட ஒரு துன்பத்தில் ஆழ்ந்து விடுவார் என்று ஒருபோதும் நாம் எதிர்பார்க்க முடியாது. எந்தவொரு துன்பமும் இறைவனின் அனுமதி இல்லாமல் வருவதில்லை.

இது பற்றி எனக்கு இந்த துஆ இல்ஹாம் ஆக வந்திருக்கின்றது.

رَبِّ كُلُّ شَيْءٍ خَادِمُكَ رَبِّ فَاحْفَظْنِيْ وَانْصُرْنِيْ وَارْحَمْنِيْ

அன்னார் கூறுகின்றார்கள்: எல்லாம் அவனது கைகளில் இருக்கின்றது என்பதே நமது ஈமான் ஆகும். அவற்றை அவன் காரணிகள் மூலமாக செய்தாலும் அல்லது காரணிகள் எதுவும் இல்லாமல் செய்தாலும் சரியே.

(மல்ஃபூஸாத் தொகுதி 4 பக்கம் 274–276; 1985 ஆம் ஆண்டு பதிப்பு – இங்கிலாந்தில் அச்சிடப்பட்டது)

ஏதாவது ஓர் ஊடகத்தை அல்லது வழியை அல்லாஹ் ஏற்படுத்தினாலும் ஏற்படுத்தா விட்டாலும் அனைத்துமே அல்லாஹ்வின் கைகளில்தான் இருக்கின்றது.

இந்த இரண்டு துஆக்களைச் செய்வதன் பக்கமும் கவனம் செலுத்துங்கள். ஒவ்வோர் அஹ்மதியும் நம்மில் ஒவ்வொருவரும் இதனை ஆய்வு செய்ய வேண்டும். அதாவது நாம் வாக்களிக்கப்பட்ட மஸீஹை ஏற்றுக் கொண்டிருக்கின்றோம் என்றால் பிறகு அவர்கள் ஏற்றுக் கொண்டதற்கான உரிமையையும் பைஅத்திற்கான உரிமையையும் செலுத்துபவர்களாக நாம் இருக்கின்றோமா? என்பதை நாம் ஆய்வு செய்து பார்க்க வேண்டும்.

பெரும்பாலும் ஆய்வு செய்து பார்க்கும்போது இந்த விஷயம் நமக்கு முன்னால் வருவதை நான் பார்த்துள்ளேன். அதாவது நம்மில் பலரும் தொழுகைகளைக் கூட முழுமையாக நிறைவேற்றுபவர்களாக இருப்பதில்லை. தொழுகைகளின் பக்கம் கவனமே இருப்பதில்லை.

சிலருக்கு இஸ்திக்ஃபார் செய்வதன் பக்கம் முற்றிலுமாக கவனமில்லாமல் இருக்கின்றது. பரஸ்பரம் நமக்கிடையில் ஒருவர் மற்றவரது உரிமையைச் செலுத்துவதன் பக்கம் கவனம் இருப்பதில்லை. இவை நமது நிலைமைகளாக இருந்தால் நாம் பொருத்தமான நற்செயல்களைச் செய்பவர்களாக இருக்கின்றோம் என்று நம்மைப் பற்றி எவ்வாறு கூற முடியும்? மேலும் நாம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் பைஅத் செய்த்ததற்கான உரிமையைச் செலுத்துபவர்களாக இருக்கின்றோம் என்று எவ்வாறு நாம் கூற முடியும்? மற்றவர்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை ஏற்றுக் கொள்ளாமல் பாவிகளாக ஆகுகின்றனர். நாம் அவர்களை ஏற்றுக் கொண்டு பிறகு நம்மிடம் மாற்றத்தை ஏற்படுத்தாமல், ஓர் உடன்படிக்கையை செய்து விட்டு அதனை நிறைவேற்றாமல் இருந்து பாவிகளாக ஆகுகின்றோம்.

எனவே, மிகவும் கவலையுடன் நம்மில் ஒவ்வொருவரும் நம்மை ஆய்வு செய்து பார்க்க வேண்டிய தேவை இருக்கின்றது. எனவே, சடங்கு என்ற ரீதியில் மஸீஹ் மவ்வூது தினத்தை கொண்டாடுபவர்களாக நாம் இல்லாமல் அன்னாரை ஏற்றுக் கொண்டதற்கான உரிமையைச் செலுத்துபவர்களாக அல்லாஹ் நம்மை ஆக்குவானாக.

எல்லா விதமான உட்புற மற்றும் வெளிப்புற குழப்பங்களிலிருந்து தவிர்ந்திருப்பவர்களாக நாம் ஆவோமாக. அல்லாஹ் எப்போதும் நம்மை அவனது அடைக்கலத்தின்கீழ் வைப்பானாக. மேலும் ஒவ்வொரு சோதனையிலிருந்தும் துன்பத்திலிருந்தும் அவன் நம்மை காப்பாற்றுவானாக.

இன்று இந்த அறிவிப்பும் இருக்கின்றது. இது ஒரு மகிழ்ச்சி தரக்கூடிய செய்தியாகும். காதியானிலிருந்து வெளிவந்து கொண்டிருந்த அல் ஹகம் பத்திரிகை மீண்டும் 1934 –ல் வெளியிடப்பட்டது. பிறகு மீண்டும் அது நிறுத்தப்பட்டு விட்டது. இன்று ஆங்கில மொழியில் அது இங்கிருந்து மீண்டும் ஆரம்பிக்கப்படுகின்றது.

இது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் காலத்தில் வெளிவந்த முதல் பத்திரிகையாக இருந்தது. இது பிரிண்டில் குறைந்த எண்ணிக்கையில் வெளியிடப்படும். ஆனால் Internet -ல் அது Available ஆக இருக்கும். குத்பாவிற்குப் பிறகு இந்த Website –ல் அது உங்களுக்கு கிடைக்கும். **www.alhaqam.org**

இவ்வாறே Mobile Phone மற்றும் Tablets போன்றவற்றிற்கு Alhakam என்ற பெயரில் App –ம் கிடைக்கும். அதை Download செய்து பத்திரிகையை எளிதாக படிக்க முடியும். இந்த App புகழ்பெற்ற Mobile Phone System ஆன Apple மற்றும் Android –ல் Download செய்யும் வகையில் குத்பாவிற்குப் பிறகு உடனயாக உங்களுக்குக் கிடைத்து விடும்.

இந்த இதழிலுள்ள பக்கங்கள் மஸீஹ் மவ்வூது தினம் தொடர்பாக சிறப்பிதழாக வெளியிடப்படுகின்றது. இனி ஒவ்வொரு ஜுமுஆவிலும் புதிய இதழின் பதிப்பு Upload செய்யப்படும். பிரிண்டில் மிகக் குறைவான எண்ணிக்கையில் தான் இது வெளியிடப்படும்.

எந்நிலையிலும் மக்கள் இதிலிருந்து பலன் பெற முடியும். இம்முறை இது தொடர்ந்து நடந்து வருகின்ற ஒரு பத்திரிகையாக நீடித்திருக்கும்படி அல்லாஹ் செய்வானாக. இது ஆங்கில மொழியில் வெளியிடப்படுவதால் ஆங்கிலம் தெரிந்தவர்கள் இதிலிருந்து அதிகமதிகமாக பலன்பெற வேண்டும்.

2018 ஆம் ஆண்டு நடைபெற்ற காதியான் ஆண்டு மாநாட்டில் நிகழ்த்தப்பட்ட உரை

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் வாழ்க்கை – குடும்ப வாழ்வை மேம்படுத்துவது தொடர்பான சம்பவங்களின் ஒளியில்

மவ்லவி முனீர் அஹ்மது காதிம் (அடிஸ்னல் நாஸிர் இஸ்லாஹ் வ இர்ஷாத், தென் இந்தியா, காதியான்)
தமிழாக்கம்: மவ்லவி அபுல் ஹஸன் ஆபித்

மதிப்பிற்குரிய அவைத் தலைவர் அவர்களே! மற்றும் கூடியிருக்கும் கண்ணியத்திற்குரியவர்களே! என்னுடைய உரையின் தலைப்பு ''**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் வாழ்க்கை – குடும்ப வாழ்வை மேம்படுத்துவது தொடர்பாக சம்பவங்களின் ஒளியில்**'' என்பதாகும்.

ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களிம் ஒருமுறை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்க்கை தொடர்பாக ஏதாவது கூறுங்கள் என ஒருவர் கேட்டார். அன்னார் كَانَ خُلُقُهُ الْقُرْآن எனக் கூறினார்கள். அதாவது அன்னாருடைய தூய வாழ்க்கையைப் பற்றி அறிய வேண்டுமென்றால் திருக்குர்ஆனைப் படியுங்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்க்கை திருக்குர்ஆனுக்கேற்பவே இருந்தது.

(முஸ்தக்ரக் ஹாகிம், தொகுதி 2 பக்கம் 392)

அதே போன்று ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் வாழ்க்கையை அறிய வேண்டுமென்றால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தூய வாழ்க்கையை ஆய்வு செய்யவும். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் வாழ்க்கை அன்னாரின் எஜமானரான ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்க்கையின் நிழலாகவே காணப்படும்.

அன்னார் (அலை) அவர்கள் ஒரு சந்தர்ப்பத்தில் கூறினார்கள்:

''من فرق بینی وبین المصطفیٰ ما عرفنی ومارای'' எவர் எனக்கும் என்னுடைய எஜமானராகிய ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கும் இடையில் வேறுபாடு கொள்வாரோ அவர் என்னை அறிந்து கொள்ளவும் இல்லை. மேலும் என்னுடைய உண்மை நிலையை அடையாளம் கண்டு கொள்ளவுமில்லை. உம்மத்தைச் சார்ந்த சான்றோர்களும் இமாம் மஹ்தி அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் நிழலாகவே இருப்பார் எனக் கூறியுள்ளார்கள்.

ஆகவே ஹஸ்ரத் ஷாஹ் வலியுல்லாஹ் சாஹிப் முஹத்திஸ் தஹ்லவி 'கைருல் கபீர்' என்ற தன்னுடைய புத்தகத்தில் இவ்வாறு கூறுகிறார்கள்:

''حق له ان ینعکس فیه انوار سید المرسلین صلی الله علیه وسلم ویزعم العامة انه اذا نزل الی الارض کان واحد من الامة کلا بل هو شرح الاسم الجامع المحمدی ونسخة منتسخة منه فشتان بینه وبین الامة'' (அல் கைருல் கபீர் பக்கம் 72)

முஹம்மதிய உம்மத்தில் தோன்றவுள்ள மஸீஹ் அவர்கள் நபிமார்களுக்கெல்லாம் தலைவராகத் திகழ்கின்ற ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் ஒளிகளின் பிரதிபிம்பமாக விளங்குவது அன்னாரின் உரிமையாகும். மக்கள் மஸீஹ் மவ்வூது தோன்றும்போது அவர் ஓர் உம்மத்தியாக தோன்றுவார்கள் என எண்ணுகிறார்கள். அவ்வாறு ஒருபோதும் இல்லை. மாறாக அவர் அனைத்துப் பெயர்களையும் தன்னகத்தே கொண்டுள்ள முஹம்மதின் கொள்கையை முழுமையான முறையில் பரப்புவார். மேலும் அன்னார் (ஸல்) அவர்களின் நகலாக இருப்பார். அவருக்கும் சாதாரண ஓர் உம்மத்திக்கும் இடையே மிகப்பெரிய வேறுபாடு உள்ளது. இதன் அடிப்படையில் குடும்ப வாழ்வு தொடர்பாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் வாழ்வு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்க்கையின் நிழலாகும்.

திருக்குர்ஆனில் عَاشِرُوْهُنَّ بِالْمَعْرُوْف அதாவது நீங்கள் உங்கள் மனைவிகளுடன் நல்ல முறையில் நடந்து கொள்ளுங்கள் என்ற போதனை இருக்குமேயானால் பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் خیرکم خیرکم لاهله وانا خیرکم لاهلی உங்களில் யார் தன் மனைவியிடத்தில் சிறந்தவரோ அவரே சிறந்தவராவார். மேலும் நான் என் மனைவிகளிடத்தில் சிறந்தவனாவேன் என கூறியுள்ளார்கள்.

இதன் அடிப்படையில் நாம் ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி மஸீஹ் மவ்வூது மஹ்தி மஃஹூத் (அலை) அவர்களின் குடும்ப வாழ்க்கையைப் பார்க்கும்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அழகிய முன்மாதிரியை ஒத்தவாறு உள்ளது.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:

''கண்ணியத்திற்குரிய, பின்பற்றத்தகுந்த என்னுடைய தலைவராகிய முஹம்மது (ஸல்) அவர்களின் நிலையான ஆன்மீகம், முழுமையான மேம்பாடு மற்றும் தேர்ச்சிக்கான ஆதாரமாக இறைவன் எனக்கு இதை வழங்கியுள்ளான். அதாவது நான் அன்னாரைப் பின்பற்றிய காரணத்தினாலும், அன்னாரின் மீது கொண்ட நேசத்தினாலும் வானத்தின் அடையாளங்கள் என்மீது இறங்கியவாறும், உள்ளம் திட நம்பிக்கையின் ஒளியில் நிரம்பியவாறும் காண்கிறேன். மேலும் எந்த அளவுக்கு நான் மறைவான அடையாளங்களைக் காண்கிறேன் என்றால் அந்த ஒளிகளின் மூலமாக நான் என்னுடைய இறைவனையே காண்கிறேன்.''

கமருல் அன்பியா ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் M.A. (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: ஒவ்வொரு சிறிய விஷயத்திலும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் பின்பற்றுவார்கள்.

(சீரத்துல் மஹ்தி தொகதி 2 பக்கம் 492)

ஒருவருடைய குடும்ப வாழ்க்கை தொடர்பாக அன்னாரின் நெருங்கிய உறவினர்கள் சிறந்த முறையில் சாட்சி பகர முடியும். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் மைத்துனர் ஹஸ்ரத் டாக்டர் மீர் முஹம்மது இஸ்மாயீல் சாஹிப் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: ''எனக்கு நினைவு தெரிந்த நாள்

முதல் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஹஸ்ரத் உம்முல் முஃமினீன் அவர்களிடம் ஒருபோதும் வெறுப்பைக் காட்டியதாக பார்த்ததுமில்லை; கேட்டதுமில்லை. மாறாக, ஒரு முன்னுதாரண தம்பதிகளில் இருக்க வேண்டிய விஷயங்களையே பார்த்துள்ளேன்.''

(சீரத் ஹஸ்ரத் நுஸ்ரத் ஜஹான் பேகம், பக்கம் 231)

மாயி இமாம் பீபீ சாஹிபா தன்னுடைய கணவரான ஹஸ்ரத் டேக்கேதார் முஹம்மது அக்பர் சாஹிப் அவர்களின் மரணத்திற்குப் பிறகு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் வீட்டில் வசித்து வந்தார்கள்.

அவர்கள் கூறுகிறார்கள்: ''உம்முல் முஃமினீன் அவர்கள் ஒருபோதும் எந்த விஷயத்திலும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் கோபித்ததாக நாங்கள் கண்டதில்லை. அவர்கள் எப்போதும் ஹஸ்ரத் சாஹிப் அவர்களுக்கு மரியாதை செலுத்தி வந்தார்கள். மேலும் அன்னாரை மகிழ்ச்சியுடன் வைத்திருந்தார்கள்.''

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறுகிறார்கள்:

''انما الدنیا متاع ولیس من متاع
الدنیا شئی افضل من المرءۃ الصالحۃ''

''உலகம் அழகு நிறைந்த பொருளாகும். மேலும் நல்ல பெண்மணியைத் தவிர மேலான அழகு பொருள் வேறு எதுவும் இல்லை.'' (இப்னுமாஜா அப்வாபுன் நிக்காஹ்)

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தங்களுடைய மனைவியிடம் எவ்வாறு நல்ல முறையில் நடந்து கொண்டார்களோ அதே அளவு ஹஸ்ரத் உம்முல் முஃமினீன் அவர்களுக்கும் அன்னாரின் வாதத்தின் மீது நம்பிக்கை இருந்தது. பெண்கள் சுயமே கடும் வேதனையை அனுபவிக்க வேண்டும் என விரும்ப மாட்டார்கள். ஹஸ்ரத் உம்முல் முஃமினீன் (ரலி) அவர்கள் முஹம்மதி பேகம் தொடர்பான ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் முன்னறிவிப்பு நிறைவேற வேண்டுமென்றும், முஹம்மதி பேகத்துடன் அன்னாரின் திருமணம் நடக்க வேண்டும் என்றும் மனமார விரும்பினார்கள்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கும் ஹஸ்ரத் அம்மாஜான் (ரலி) அவர்களுடன் ஒரு குறிப்பிடத்தக்க அன்பு இருந்தது. அன்னார் ஹதீஸில் கூறியதுபோல் உங்களில் நான் மனைவியுடன் சிறந்த முறையில் நடந்து கொள்பவனாவேன் என்பதற்கிணங்கவே இருந்தது.

ஹஸ்ரத் அம்மாஜான் (ரலி) அவர்களின் இந்த அன்பின் காரணமாகவும் மேலும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் கூற்றாகிய 'எவர் தன் மனைவி மற்றும் அவளுடைய உறவினர்களுடன் நல்ல முறையில் நடந்து கொள்ளவில்லையோ அவர் என் ஜமாஅத்தைச் சார்ந்தவரல்ல' என்பதற்கேற்பவும் சஹாபா ரிஸ்வானுல்லாஹி அஜ்மயீன்களும் தங்கள் வீடுகளில் தங்கள் மனைவிகளுடன் நல்ல முறையில் நடந்து கொள்வதன் பக்கம் குறிப்பாக கவனம் செலுத்தினார்கள்.

ஒருமுறை ஹஸ்ரத் முஃப்தி முஹம்மது சாதிக் சாஹிப் (ரலி) அவர்களுக்கு தங்கள் மனைவியுடன் வீட்டு விவகாரங்களில் கருத்து வேறுபாடு ஏற்பட்டதன் காரணத்தால் தன் மனைவி மீது கோபமாக இருந்தார்கள். முஃப்தி சாஹிப் அவர்களின் மனைவி இந்த கோபம் குறித்து ஹஸ்ரத் அப்துல் கரீம் சியால்கோட்டி (ரலி) அவர்களின் மனைவியிடம் கூறினார்கள். அப்துல் கரீம் சாஹிப் அவர்கள் விஷயத்தைப் புரிந்து கொள்ளக் கூடியவராக இருந்தார்கள். மேலும் அன்னாரின் இயல்பில் நகைச்சுவை உணர்வும் இருந்தது. அன்னார் தன் மனைவியிடமிருந்து இதை கேட்டவுடன் ஹஸ்ரத் முஃப்தி சாஹிபிடம் கூறினார்கள்: முஃப்தி சாஹிப் அவர்களே! எவ்வாறு இருந்தபோதிலும் உங்கள் மனைவியை சமாதானப்படுத்துங்கள். இன்றைய நாட்களில் ராணியின் ஆட்சிதான் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்பதை நீங்கள் அறிவதில்லையா?

ஹஸ்ரத் அப்துல் கரீம் சாஹிப் சியால்கோட்டி (ரலி) அவர்கள் இவ்வாறு கூறி இங்கு இந்தியாவில் விக்டோரியா ராணி என்ற ஒரு பெண்மணியின் ஆட்சி நடக்கின்றது. அங்கு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் வீட்டு விவகாரங்களில் ஹஸ்ரத் அம்மா ஜான் அவர்களின் பேச்சைக் கேட்டு நடப்பார்கள். ஹஸ்ரத் முஃப்தி சாஹிபுடம் ஹஸ்ரத் மவ்லவி அப்துல் கரீம் சாஹிப் அவர்களின் இந்த ஞானம் நிறைந்த மற்றும் நகைச்சுவையான அறிவுரையைப் புரிந்து கொண்டு தன் மனைவியைச் சமாதானப்படுத்தினார்கள். இதன் மூலம் வீட்டில் மகிழ்ச்சிக்கான சூழல் உருவானது.

(திக்ரே ஹபீப் – ஹஸ்ரத் முஃப்தி முஹம்மது சாதிக் சாஹிப் (ரலி) அவர்கள் எழுதியது)

கண்ணியத்திற்குரியவர்களே! இந்த சந்தர்ப்பத்தில் இவ்விஷயத்தை நினைவில் கொள்ள வேண்டும். எம்பெருமானார் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் காலத்திலும் அன்னார் பெண்களுக்கு எந்த அளவுக்கு ஆகுமான சுதந்திரத்தை வழங்கி இருந்தார்கள் என்றால் அந்தக் கால பின்னணியில் சில நபித்தோழர்கள் அதை ஆகுமானதாகக் கருதவில்லை. மேலும் அவர்கள், தற்போது பெண்கள் நம்முடன் தோளோடு தோள் சேர்த்து நிற்கக்கூடிய காலம் வந்து விட்டது என வெளிப்படையாகக் கூறி வந்தார்கள். ஆனால் பெண்கள் ஆண்களின் சமூகத்தில் கலந்து கொள்வதற்கும் பேசுவதற்கும் தைரியமில்லாத ஒரு காலமும் இருந்தது.

தன்னுடைய எஜமானர் மற்றும் பின்பற்றத்தகுந்தவரின் முன்மாதிரியின் அடிப்படையில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களும், எப்படிப்பட்ட அருளுக்குரிய முன்மாதிரியை வெளிப்படுத்தினார்கள் என்றால் அதை சஹாபாக்கள் ராணியின் ஆட்சியுடன் ஒப்பிட்டுக் கூறி வந்தார்கள்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்களுடன் நடந்து கொண்ட முறை இக்காலத்தின் நடைமுறை மற்றும் சூழ்நிலைக்கு நேர் மாற்றமாக இருந்தது. மவ்லவி அப்துல் கரீம் சாஹிப் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: மக்கள் மத்தியில் இயல்பிலேயே எளிமையாக இருக்கின்ற மனிதர்கள், செயற்கையான ஆச்சாரத்தை தேர்ந்தெடுப்பதற்கான ஆற்றல் இல்லை

என்பதை நன்கறிந்த வீட்டு வேலை செய்கின்ற பெண்கள் இந்த விஷயத்தை மிகவும் வியப்புடன் பார்க்கின்றார்கள். உலகிலும் தன்னுடைய அக்கம் பக்கத்தில் நடக்கின்ற பொதுவான நடைமுறைக்கு நேர்மாற்றமாக இருப்பதைக் கண்டு மிகவும் வியப்பாக அந்த பெண்கள் ‘‘மிர்ஸா சாஹிப் தன்னுடைய மனைவியின் பேச்சை ரொம்பவே கேட்கின்றார்’’ என்று பலமுறை கூறியதை நான் கேட்டுள்ளேன்.

மனைவியுடன் நல்ல முறையில் நடந்து கொள்வது தொடர்பாக அறிவுரை செய்தவாறு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: ‘‘ஆணாக இருந்து கொண்டு பெண்ணுடன் சண்டை போடுவதை மிகவும் வெட்கங்கெட்ட செயலாக நாம் கருதுகிறோம். இறைவன் நம்மை ஆணாகப் படைத்துள்ளான் என்றால் இது உண்மையில் நம் மீது அருள்களை முழுமைப்படுத்துவதாகும். பெண்களுடன் மென்மையுடனும் பரிவுடனும் நடந்து கொள்வதே அதற்குரிய நன்றி செலுத்துதல் ஆகும்.’’

(ஹஸ்ரத் ஷேக் யஃகூப் அலீ இர்ஃபானீ (ரலி) அவர்கள் எழுதிய ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் வாழ்க்கை, பக்கம் 45)

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்களின் உள்ளம் மகிழும் வண்ணம் எவ்வாறு நடந்து கொண்டார்கள் என்பது தொடர்பாக ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்கள் கூறிய ஒரு சம்பவத்தைக் கேளுங்கள்.

‘‘நான் முதன் முதலில் டெல்லியிலிருந்து வந்தபோது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மண்ட வெல்லத்தினால் செய்த இனிப்பு சாதத்தை மிகவும் விரும்புவார்கள் என்பதை அறிந்தேன். ஆகையால் மிகவும் ஆர்வத்துடன் இனிப்பு சாதம் செய்வதற்கான ஏற்பாடுகள் செய்தவாறு கொஞ்சம் அரிசி வாங்கி அதில் நான்கு மடங்கு வெல்லத்தைக் கலந்தேன். அது வெல்லப்பாகாக ஆகி விட்டது. சட்டியை அடுப்பிலிருந்து இறக்கி பாத்திரத்தில் சாதத்தை எடுத்து வைக்கும்போது அதை நான் நான் மிகவும் வருத்தம் அடைந்தவாறு சாப்பாட்டிற்கான நேரம் வந்து விட்டதே என்ற வியப்பில் இருக்கும்போது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் வந்து விட்டார்கள்.

துக்கம் மற்றும் கவலையினால் அழுகின்ற நிலையிலுள்ள என் முகத்தைப் பார்த்து சிரித்தவாறு சாதம் நன்றாக சமைக்கவில்லை என்ற வருத்தமா எனக் கேட்டவாறு, இது மிகவும் நன்றாக உள்ளதே! என்னுடைய விருப்பத்திற்கேற்றவாறு சமைக்கப்பட்டுள்ளதே எனக் கூறினார்கள். இதுபோல் அதிகமாக வெல்லம் கலந்த உணவு தான் எனக்கு பிடிக்கும். இது மிகவும் நன்றாக உள்ளது என்று கூறியவாறே மிகவும் மகிழ்ச்சியுடன் உண்டார்கள்.’’ ஹஸ்ரத் உம்முல் முஃமினீன் அவர்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் என்னை மகிழ்விப்பதற்காக இவ்வாறு கூறியதும் என்னுடைய உள்ளமும் மகிழ்ச்சி அடைந்தது எனக் கூறினார்கள்.

(ஹஸ்ரத் நுஸ்ரத் ஜஹான் சாஹிபா வாழ்க்கை, பக்கம் 225, 226)

கண்ணியத்திற்குரியவர்களே! நம்மில் எத்தனை பேருக்கு இந்த சம்பவம் ஒரு படிப்பினைக்குரியதாக இருக்கின்றது. எவ்வாறாக நாம் சில சமயங்களில் உணவில் உப்பு சற்று அதிகமானாலும், குறைந்தாலும் மனைவிமார்களை கடிந்து கொள்கிறோம். எம்பெருமானார் (ஸல்) அவர்கள் தொடர்பாக ஹதீஸில் இவ்வாறு வருகிறது:

அதாவது எம்பெருமானார் (ஸல்) அவர்கள் ஒருபோதும் எந்த உணவையும் குறை கூறியதில்லை. மாறாக உணவையும் உணவு சமைத்தவர்களையும் எப்போதும் புகழ்ந்தவாறும் மனதிற்கு ஆறுதல் கூறிக் கொண்டும் இருப்பார்கள்.

ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை மிக்க நல்ல முறையில் கவனித்து வந்தார்கள். ஆனால் அதிகமான விருந்தினர்களின் வருகையின் காரணமாக சில சமயங்களில் அன்னார் விரும்பாத நிலையிலும் கவனிப்பதில் குறை ஏற்பட்டு விடுகிறது. இதை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை நேசிக்கின்ற சஹாபாக்களும் கூட உணர்ந்திருந்தார்கள். அதாவது ஹுஸூர் (அலை) அவர்களுக்கு நோயினாலும், கடின உழைப்பு மற்றும் வியர்வை வெளியேறுவதாலும் குறிப்பாக உணவின் பக்கம் கவனம் செலுத்துவது அவசியமாகும்.

அதுபோன்ற ஒரு சம்பவத்தை நினைவு கூர்ந்தவாறு ஹஸ்ரத் மவ்லவி அப்துல் கரீம் சாஹிப் (ரலி) அவர்கள் எழுதுகிறார்கள்: லாஹூரைச் சார்ந்த முன்ஷி அப்துல் ஹக் சாஹிப் அவர்கள் ஒரு சந்தர்ப்பதில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் கேட்டார்கள். உங்களுடைய பணி மிகவும் நுட்பமானது. உங்கள் தலை மீது கடினமான சுமையைச் சுமக்க வேண்டிய பொறுப்பு உள்ளது. நீங்கள் உடலிற்கான சலுகையை கவனத்தில் கொள்ள வேண்டும். மேலும் ஒரு பிரத்யேக சத்துள்ள உணவு கண்டிப்பாக உங்களுக்காக தினமும் ஏற்பாடு செய்யப்பட வேண்டும்.

அவர்களின் இந்த கூற்றுக்கு பதிலளித்தவாறு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள், ‘‘இது சரியான விஷயம் தான். நாமும் அவ்வப்போது இதை கூறியும் உள்ளோம். ஆனால் பெண்கள் தங்கள் பணியிலேயே தீவிரமாக இருப்பதனால் இவ்விஷயங்களில் மிகுதியாக அக்கறை செலுத்துவதில்லை’’ எனக் கூறினார்கள்.

முன்ஷி அப்துல் ஹக் சாஹிப் அதற்கு பதிலளித்தவாறு ஹஸ்ரத்! நீங்கள் அதட்டியும் திட்டியும் கூறுவதில்லை. மேலும் திகிலை ஏற்படுத்துவதில்லை. என்னுடைய நிலை என்னவென்றால் உணவிற்காக தனிப்பட்ட ஏற்பாட்டினை மேற்கொள்வேன். என்னுடைய கட்டளையை மீறுவது என்பது சாத்தியமற்றதாகும். அவ்வாறு நடந்தால் நாம் வேறு முறையைக் கையாள வேண்டியது வரும் எனக் கூறினார்கள். அன்பின் காரணமாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு இந்த விஷயம் பயனளிக்கக் கூடியதாக இருக்கும் என்று எண்ணி சிந்திக்காமலும் புரியாமலும் ஹஸ்ரத் மவ்லவி அப்துல் ஹக் சாஹிப் (ரலி) அவர்கள் அதை வழிமொழிந்தார்கள்.

மேலும் முன்ஷி சாஹிபின் இந்த கூற்று சரியானதாகும். ஹுஸூர் (அலை) அவர்களும் இவ்விஷயங்களை பலவந்தமாக

ஒப்புக் கொள்ள வைக்க வேண்டும் என்று வினவினார். அதற்கு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் சிரித்தவாறு, ''நம்முடைய நண்பர்கள் இப்படிப்பட்ட குணங்களிலிருந்து விலகி இருக்க வேண்டும்'' எனக் கூறினார்கள். நான் அச்சமயம் எவ்வளவு வெட்கத்திற்குள்ளானேன் என்பதை அல்லாஹ்வே அறிவான் என மவ்லவி அப்துல் கரீம் சாஹிப் (ரலி) அவர்கள் கூறினார்கள்.

(மவ்லானா அப்துல் கரீம் சாஹிப் (ரலி) எழுதிய ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் வாழ்க்கை பக்கம் 18, 19)

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கிஷ்தி நூஹ் என்ற தன் புத்தகத்தில் அறிவுரை கூறியவாறு கூறுகிறார்கள்:

''எவர் தன்னுடைய மனைவி மற்றும் அவளுடைய நெருங்கிய உறவினர்களுடன் நல்ல முறையில் நடந்து கொள்ள மாட்டாரோ அவர் என்னுடைய ஜமாஅத்தைச் சார்ந்தவரல்ல.''

இந்த அன்பின் செயல் வடிவிலான எடுத்துக்காட்டாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் சுயமே எவ்வாறு நடந்து கொண்டார்கள் என்பதை கீழ்வரும் சம்பவத்தின் மூலம் அறிந்து கொள்ளலாம். அன்னாரின் புதல்வியான ஹஸ்ரத் நவாப் முபாரகா பேகம் சாஹிபா (ரலி) அவர்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் எவ்விதம் தன்னுடைய மாமியாரின் உள்ளம் மகிழ நடந்து கொண்டார்கள். மேலும் தாய் மற்றும் மகளுக்கு இடையில் சமாதானத்தை ஏற்படுத்தினார்கள் என்ற சம்பவத்தை கூறுகிறார்கள்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் பார்வையில் ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்களுக்கு மிக்க மதிப்பும் மரியாதையும் இருந்தது. மேலும் மிக்க இரக்கத்துடனும் அக்கறையுடனும் கவனித்து வந்த அந்த வரைபடம் என் உள்ளத்தில் தற்போது வரை உள்ளது. ஆனால் ஒருமுறை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் அவசியம் எனக் கருதியவாறு ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்களுக்கு தர்பிய்யத் கொடுத்ததை நான் கண்டுள்ளேன். இந்த ஒரு சம்பவத்தைத் தவிர வேறு எந்த சம்பவத்தையும் ஒருபோதும் கண்டதில்லை. அதற்கான அவசியமும் வந்ததில்லை. ஏனென்றால் ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்கள் சுயமே ஒரு அழகிய முன்மாதிரியின் எடுத்துக்காட்டாகத் திகழ்ந்தார்கள். அந்த சம்பவத்தின் தெளிவான காட்சி நினைவுள்ளது.

(அந்த சம்பவமானது) கீழே அறையின் எதிரே பாட்டி அம்மா அமர்ந்திருந்தார்கள். அங்கு வேலை செய்யும் பெண் பணியாளிகள் எவருமே இவர் கூறுவதைக் கேட்கவில்லை. யாரோ ஏதோ கூறியதன் காரணமாக கருத்து வேறுபாடு ஏற்பட்டு பாட்டி அம்மா (ரலி) ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்களிடம் கோபித்துக் கொண்டார்கள். பாட்டி அம்மா (ரலி) அப்போது (இந்தப்) பெண் [பாட்டி அம்மா (ரலி) தன்னுடைய மகளான அம்மா ஜான் (ரலி) அவர்களை, பெண்ணே பெண்ணே என்று தான் அழைப்பார்கள்] என் மகள் தானே! என்னுடைய மதிப்பிற்குரியவள் என்னுடைய தலையின் கிரீடம் தானே என்றெல்லாம் கோபத்தில் கூறிக் கொண்டே இருந்தது எனக்கு நினைவில் உள்ளது. அவ்வாறே கூறிக் கொண்டிருக்கையில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்களின் தோள்களின் மீது அன்னாரின் அருளுக்குரிய கரத்தை வைத்தவாறு அம்மா ஜான் (ரலி) அவர்களை முன்னோக்கி அழைத்துச் சென்று கொண்டிருந்தார்கள். அம்மா ஜான் (ரலி) அவர்களின் கண்களில் இருந்து முத்துப்போல் கண்ணீர் துளிகள் வழிந்தோடிக் கொண்டிருந்த நிலையில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மௌனமாக அம்மா ஜான் (ரலி) அவர்களின் தோளில் கை வைத்தவாறே தலை குனிந்த நிலையில் பாட்டி அம்மா (ரலி) அவர்களின் பாதங்களில் கொண்டு சேர்த்தார்கள். பிறகு பாட்டி அம்மா (ரலி) அவர்கள் அம்மா ஜான் (ரலி) அவர்களை தன்னுடைய கரங்களினால் பிடித்து அரவணைத்தார்கள். அத்துடன் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் திரும்பிச் சென்று விட்டார்கள்.

சற்று சிந்தித்துப் பாருங்கள்! இன்றைய காலத்தில் உள்ள சந்ததிகளில் பெரும்பாலானவர்கள் தாய்மார்களின் அருமையை அறியாதவர்களாக இருக்கிறார்கள். அஹ்மதி பெண்கள் மற்றும் சகோதரிகளே! நான் கண்ட மற்றும் நினைவில் உள்ள இந்த வரைபடத்தை சற்று தன் கண் முன்னே கொண்டு வாருங்கள்.

மார்க்கத்தின் அரசராகத் திகழ்ந்தவர் தன்னுடைய இறைவன் புறமிருந்து கதீஜா என்னும் புனைப்பெயரைப் பெற்றவருமான அன்னார் விரும்பிய, அன்னாரின் உள்ளத்தில் எவர் தொடர்பாக மிகுந்த கண்ணியம் இருந்ததோ அப்படிப்பட்ட துணைவியரான அம்மா ஜான் (ரலி) அவர்களின் தாயாரின் சாதாரண அதிருப்தியைக் கேட்டு அதை பொறுத்துக் கொள்ள முடியாமல் சுயமே அன்னாரின் தாயின் காலடியில் அவரை விழ வைத்தார்கள். இதன் மூலம் (ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள்) உன்னுடைய அந்தஸ்து உயர்ந்தது தான். ஆனால் இவர் உன்னுடைய தாயார் ஆவார்கள். உம்முடைய தாயின் காலடியில் தான் சுவர்க்கம் உள்ளது.

اَللّٰھُمَّ صَلِّ عَلٰی مُحَمَّدٍ وَعَلٰی آلِ مُحَمَّدٍ وَعَلٰی عَبْدِکَ الْمَسِیْحِ الْمُوْعُوْدِ۔

(தஹ்ரீராத்தே முபாரக்கா பக்கம் 214, 215)

கண்ணியத்திற்குரியவர்களே! வீடுகளில் சில நேரத்தில் பிரயாணத்தை மேற்கொள்வதற்கான சந்தர்ப்பங்கள் வருகின்றன. அதுவும் நற்பண்புகளை வெளிப்படுத்தக்கூடிய சந்தர்ப்பமாக இருக்கின்றது. அப்படிப்பட்ட சந்தர்ப்பத்தில் அவசரத்தின் காரணமாக நாகரீகமில்லாத ஆண்களிடமிருந்து தாமதமாக்கி விட்டாய்; விரைவாக கிளம்பவும். எப்போதும் இதுவே உன்னுடைய பழக்கமாக இருக்கிறது என்ற இதுபோன்ற பேச்செல்லாம் கேட்க வேண்டியதிருக்கிறது.

ஆனால் நம்முடைய அன்பிற்குரிய ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தம்முடைய எஜமானரும் பின்பற்றக்கூடியவருமாகிய ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்களை முழுமையாக பின்பற்றியவாறு பிரயாணத்திற்கான எல்லா ஏற்பாடுகளையும் சுயமே செய்வார்கள். மேலும் வீட்டில் உள்ளவர்களுக்குக் காத்துக் கொண்டிருப்பார்கள். முதலில் அவர்களை வண்டியில் ஏற்றி விடுவார்கள். பிறகு எல்லா விதத்திலும் கவனித்துக் கொண்டிருப்பார்கள். இதுவே ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் பழக்கமாக இருந்தது.

ஹஸ்ரடத் முஃப்தி முஹம்மது சாதிக் சாஹிப் (ரலி) அவர்கள் 'திக்ரே ஹபீப்'' என்ற தன்னுடைய நூலில் இது தொடர்பாக இவ்வாறு கூறுகிறார்கள்:

''பிரயாணத்திற்கான சந்தர்ப்பம் வரும்போதெல்லாம் ஹுஸூர்(அலை) அவர்கள் தாமே சுயமே சென்று ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) மற்றும் உடனிருக்கும் பெண்களையும் இரயிலில் பெண்களுக்குரிய பெட்டியில் ஏற்றி விடுவார்கள். மேலும் எந்த இடத்தில் இறங்க வேண்டுமோ அந்த இடம் வந்ததும் பெண்கள் பெட்டியின் அருகில் சென்று தன் முன்னால் ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்களை இறக்கி விடுவார்கள். மேலும் பிரயாணத்தின் இடையிலும் தன்னுடன் இருக்கின்ற குத்தாம்கள் மூலம் ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்களின் நிலையை அறிந்து கொண்டே இருப்பார்கள். இதுவே அன்னாரின் நடைமுறையாக இருந்தது.''

ஒரு பிரயாணம் தொடர்பாக மிகவும் வியக்கத்தக்க சம்பவத்தை ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் எழுதியுள்ளார்கள்.

அன்னார் கூறுகிறார்கள்: ஒருமுறை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் பிரயாணத்தில் இருக்கும்போது இரயில் நிலையம் சென்றடைந்தார்கள். வண்டி வருவதற்குத் தாமதமானதால் அன்னார் (அலை) அவர்கள் தம் துணைவியார் ஹஸ்ரத் உம்முல் முஃமினீன் (ரலி) அவர்களுடன் இரயில் நிலையத்தில் நடந்து கொண்டிருந்தார்கள். இயல்பிலேயே உணர்ச்சிவசப்படக்கூடிய மவ்லவி அப்துல் கரீம் சாஹிப் சியால்கோட்டி (ரலி) அவர்கள் என்னிடம் வந்து நிறைய மக்களும் பிற மாற்று மதத்தவர்களும் இங்குமங்குமாகத் திரிகின்றார்கள். அதனால் ஹஸ்ரத் சாஹிபிடம் துணைவியாரை எங்கேயாவது தனிமையில் அமர வைக்குமாறு கூறுங்கள் எனக் கூறினார். நான் கூற முடியாது. நீங்கள் கூறிப் பாருங்கள் என மவ்லவி சாஹிப் கூறினார்கள்.

எதுவும் செய்ய முடியாத நிலையில் மவ்லவி அப்துல் கரீம் சாஹிப் (ரலி) அவர்கள் சுயமே ஹஸ்ரத் சாஹிப் (அலை) அவர்களுக்கு அருகில் சென்று ஹுஸூர் மக்கள் அதிகமாக இருக்கின்றார்கள். துணைவியாரைத் தனியாக ஓரிடத்தில் அமர வைக்கவும் எனக் கூறினார்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள், சென்று விடுங்கள். இதுபோன்ற பர்தாவை நான் ஆமோதிப்பதில்லை எனக் கூறினார்கள்.

மவ்லவி (நூருத்தீன்) சாஹிப் கூறுகின்றார்கள்: அதன் பிறகு மவ்லவி அப்துல் கரீம் சாஹிப் (ரலி) அவர்கள் தலைகுனிந்தவாறே என் பக்கம் வந்தார்கள். மவ்லவி சாஹிப் பதில் கிடைத்து விட்டதா? என நான் கேட்டேன். (சீரத்துல் மஹ்தி பாகம் 2 பக்கம் 55)

கணவன் மனைவிக்கிடையில் மனக்கசப்பு ஏற்படுவதற்கான காரணம் அவர்களுக்கிடையே உள்ள குணநலன்களை அறியாததுதான். கணவன் தன் மனைவியின் மனோநிலை தன் மனோநிலைக்கேற்ப இருக்க வேண்டும் என விரும்புவார். கணவனின் மனோநிலையை மாற்ற வேண்டும் என மனைவி விரும்புவாள். இது தொடர்பாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் எவ்வாறு தன் மனைவிக்காக தன்னுடைய பழக்கத்தை மாற்றிக் கொண்டார்கள் என்றால், அன்னாருக்கு இருளில் உறங்கக்கூடிய பழக்கம் இருந்தது. அன்னாரின் மனைவிக்காக வெளிச்சத்தில் உறங்கும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொண்ட ஈமானை வலுவூட்டக்கூடிய சம்பவத்தைக் கேளுங்கள்.

ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: அம்மா ஜான் (ரலி) அவர்களுக்கு வெளிச்சத்தில் தூங்கக் கூடிய பழக்கம் இருந்தது. வெளிச்சமில்லாமல் அன்னார் ஒருபோதும் தூங்க மாட்டார்கள். மறுபக்கம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு இருளில் தூங்கக்கூடிய பழக்கம் இருந்தது. அம்மா ஜான் (ரலி) அவர்களின் காரணத்தால் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் விளக்கை ஏற்றியே வைத்திருப்பார்கள். அம்மா ஜான் (ரலி) உறங்கி விட்டால் விளக்கின் வெளிச்சத்தை குறைத்து விடுவார்கள்.

ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: நான் (உறக்கத்தில்) திரும்பும்போது இருட்டாக இருந்தால் விளக்கை ஏற்றுமாறு கூறினால் ஹுஸூர் வெளிச்சத்தை அதிகப்படுத்துவார்கள். இறுதியில் ஹுஸூர் (அலை) அவர்களுக்கு வெளிச்சத்தில் உறங்குவதற்கான பழக்கம் ஏற்பட்டு விட்டது. மேலும் அன்னார் (ஸல்) அவர்கள் அம்மா ஜான் (ரலி) அவர்களுக்காக முழு வீட்டையும் வெளிச்சமாக ஆக்கி விட்டார்கள்.

இது தொடர்பாக ஒருமுறை ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்கள், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் இவ்வாறு கேட்டார்கள்: வெளிச்சத்தில் உறக்கமே வராத ஹஸ்ரத் சாஹிப் (அலை) அவர்களின் அந்தக் காலம் நினைவில் இருக்கிறதா? ஆனால் தற்போது மூலை முடுக்குகளிலெல்லாம் வெளிச்சம் இருந்தால்தான் உறக்கமே வருகிறது.

(சீரத் ஹஸ்ரத் நுஸ்ரத் ஜஹான் பேகம் (ரலி) பக்கம் 415)

கண்ணியத்திற்குரியவர்களே! இஸ்லாமிய சமூகத்தை அழகாக்குவதும் இல்லங்களை சுவர்க்கத்தின் காட்சியாக உருவாக்குவதற்கான பொறுப்பும் ஆண், பெண் இருவர் மீதும் உள்ளது. சிறு சிறு விஷயங்களுக்காக உள்ளத்தில் வன்மத்தை வளர்த்துக் கொள்வது, சாதாரண விஷயங்களை எல்லாம் பெரிதுபடுத்தி வீட்டின் சூழலை களங்கப்படுத்துவது அறிவீனமான செயல் ஆகும். திருமணம் ஒரு தூய பந்தமாகும். அது அன்பு, நேசம், பரஸ்பர அமைதி மற்றும் மன நிறைவைக் கொண்டு நிலைநாட்டப்படுகிறது.

இது தொடர்பாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் வழிகாட்டுதல் கவனிக்கத்தக்கதாகும். அன்னார் கூறுகிறார்கள்: என்னுடைய பார்வையில் இந்த அருள் எல்லா அனைத்து அருள்களிலும் அடிப்படையானதாகும். முஃமின் (இறை நம்பிக்கையாளன்) தக்வாவின் (இறையச்சத்தின்) உயர் படித்தரத்தைப் பெறு விரும்புவது மட்டுமல்லாமல் அதற்காக பேராசையும் கொள்வான். ஆகவே என்னுடைய பார்வையில் எந்த வீட்டில் ஆண் பெண் இருவரிடமும் அன்பு, நேசம் மற்றும் பற்றில் ஒற்றுமையும் பொருத்தமும் இருக்குமோ சுவர்க்கத்தைப் போன்று தூய்மையாகவும் அருளால் நிறைந்தும் காணப்படும்.

(மக்தூபாத்தே அஹ்மது பாகம் 2 பக்கம் 50)

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு வந்த இறை அறிவிப்பான خزواالرفق خزواالرفق فإنّ الرفق رأس الخيرات மென்மையாக நடந்து கொள்ளுங்கள். மென்மையாக நடந்து கொள்ளுங்கள். ஏனென்றால் அனைத்து நன்மைகளின் வேர் மென்மையே ஆகும் என்பதைக் கூறி இவ்வாறு விளக்குகிறார்கள்:

இந்த இல்ஹாமில் ஜமாஅத்தைச் சார்ந்த அனைவருக்கும் மனைவியோடு மென்மையுடனும் பரிவுடனும் நடந்து கொள்ள வேண்டும் என்ற போதனை வழங்கப்பட்டுள்ளது. அவர்கள் அடிமைகள் அல்ல. உண்மையில் நிக்காஹ் என்பது ஆண் மற்றும் பெண் இருவருக்கும் இடையே ஏற்படுகின்ற ஒரு பரஸ்பர உடன்படிக்கையாகும். ஆண் தன்னுடைய உடன்படிக்கையில் மோசடி செய்யாமல் இருப்பதற்கு முயற்சி செய்யுங்கள். அல்லாஹ் திருக்குர்ஆனில், وَعَاشِرُوْهُنَّ بِالْمَعْرُوْفِ எனக் கூறியுள்ளான். அதாவது, தன்னுடைய மனைவிகளுடன் நல்ல முறையில் நடந்து கொண்டவாரே வாழ்க்கையைக் கழியுங்கள்.

மேலும் ஹதீஸில், خَيْرُكُمْ خَيْرُكُمْ لِاَهْلِهٖ உங்களில் யார் தன் மனைவியோடு நல்ல முறையில் நடந்து கொள்வாரோ அவரே சிறந்தவராவார் என வந்துள்ளது. ஆக, ஆன்மீக நிலையிலும் பௌதீக நிலையிலும் தன்னுடைய மனைவிகளுடன் நல்ல முறையில் நடந்து கொள்ளுங்கள். அவர்களுக்காக துஆ செய்து கொண்டிருங்கள். மேலும் தலாக் (மணவிலக்)கிலிருந்து விலகி இருங்கள். ஏனென்றால் இறைவனின் பார்வையில் எவர் தலாக் கொடுப்பதில் அவசரப்படுவாரோ அவர் மிகவும் தீயவராகக் கருதப்படுவார். இறைவன் சேர்த்த ஜோடியை அசுத்தமான பாத்திரத்தைப் போல் உடைத்து விடாதீர்கள்.

(ஸமீமா துஹ்ஃபா கோல்டவிய்யா)

மேலும் கூறுகிறார்கள்: அதே போன்று பெண்கள் மற்றும் குழந்தைகளுடனான தொடர்பு மற்றும் ஒற்றுமையாக வாழ்வதில் மக்கள் தவறிழைக்கின்றார்கள். மேலும் நேரான வழியிலிருந்து விலகி விட்டார்கள். திருக்குர்ஆனில் وَعَاشِرُوْهُنَّ بِالْمَعْرُوْفِ தன் மனைவிகளுடன் நல்ல முறையில் நடந்து கொள்ளுங்கள் என்று வந்துள்ளது. ஆனால் தற்போது அதற்கு நேர்மாற்றமாக நடந்து கொண்டிருக்கிறார்கள். இது தொடர்பாக இரண்டு விதமான மக்களை நம்மால் காண முடிகின்றது. ஒரு பிரிவு மக்கள் எப்படிப்பட்டவர்கள் என்றால் அவர்கள் பெண்களை முற்றிலுமாக சுதத்திரமாக விட்டு விடுவார்கள்.

(அதாவது வெட்கக்கேடான செயல் செய்வதற்கு எந்தவித தடையின்றி தன்னிச்சையாக செயல்படுதல்) மார்க்கம் அவர்கள் மீது எந்தத் தாக்கத்தையும் ஏற்படுத்தாது. மேலும் அவர்கள் பகிரங்கமாக இஸ்லாத்திற்கு எதிராக செயல்படுவார்கள். அந்த பெண்களிடம் யாரும் எதுவும் கேட்க மாட்டார்கள். சிலர் எப்படிப்பட்டவர்கள் என்றால் (இரண்டாம் வகை) அவர்கள் முற்றிலும் சுதந்திரமாக விடுவதில்லை. மாறாக அதற்கு நேர் மறையாக அவர்களை எந்த அளவிற்குக் கடுமையாகவும் கட்டுப்பாட்டுடனும் நடத்துகின்றார்கள் என்றால் அவர்களுக்கும் மிருகங்களுக்கும் இடையில் எந்த வேறுபாடும் காண முடியாது. அடிமைகள் மற்றும் மிருகங்களை விடவும் மிக மோசமான முறையில் நடந்து கொள்கிறார்கள். அடித்தால் முன்னால் இருப்பது உயிருள்ள பொருள் தானா? இல்லையா? என்பதைக் கூட அறியாத அளவிற்கு இரக்கமில்லாமல் அடிக்கின்றனர்.

ஆக மிகவும் கீழ்த்தரமாக நடந்து கொள்கிறார்கள். இங்கு பஞ்சாபில் பிரசித்த பெற்ற ஒரு கூற்று உள்ளது. அதாவது பெண்கள் காலணிக்கு ஒப்பாக கருதப்பட்டு வந்தார்கள். ஒன்றை கழற்றி விட்டு மற்றொன்றை அணிந்து கொள்ள வேண்டும் என்பதே அந்த கூற்றாகும். இது மிகவும் அபாயகரமான மற்றும் இஸ்லாமிய கோட்பாடுகளுக்கு எதிரான விஷயமாகும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அனைத்து விஷயங்களிலும் ஒரு முன்மாதிரியாகத் திகழ்கிறார்கள். அன்னாரின் வாழ்க்கையைப் பாருங்கள். பெண்களுடன் எவ்வாறு நல்ல முறையில் நடந்து கொண்டார்கள். என்னுடைய பார்வையில் பெண்களுக்கு எதிராக எவன் நிற்கின்றானோ அவன் தைரியமற்றவனும் ஆண்மையில்லாதவனுமாவான்.

(மல்ஃபூஸாத் தொகுதி 2 பக்கம் 396)

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகிறார்கள்:

கணவருக்கு மனைவியுடன் எத்தகைய தொடர்பு இருக்க வேண்டும் என்றால் இரு உண்மையான நண்பர்களுக்கு இடையில் இருக்கின்ற தொடர்பைப் போல் இருக்க வேண்டும். மனிதனுடைய உயர் நல்லொழுக்கம் மற்றும் இறை தொடர்பின் முதல் சாட்சியாக இந்தப் பெண்களே இருக்கின்றனர். இவர்களுடன் நல்ல தொடர்பு இல்லை என்றால் பிறகு இறைவனுடன் சமாதானத்தை ஏற்படுத்துவது எவ்வாறு சாத்தியமாகும்?

ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

خَيْرُكُمْ خَيْرُكُمْ لِاَهْلِهٖ அதாவது உங்களில் நல்லவர் தமது மனைவியுடன் நல்ல முறையில் நடந்து கொள்பவர்தான்.

(மல்ஃபூஸாத் தொகுதி 3 பக்கம் 300, 301)

குடும்ப வாழ்வை அமைதி நிறைந்த சூழலாக உருவாக்குவதற்கு இரண்டாவது வழிமுறை சந்ததிகளின் தர்பிய்யத் ஆகும். கணவன் மனைவி ஆகிய இருவரிடமும் அன்பு மற்றும் ஒற்றுமை இருக்குமேயானால் மேலும் ஒருவர் மற்றவருக்காக உளமார்ந்த கண்ணியத்தை வெளிப்படுத்துகின்ற உணர்வு மற்றும் மார்க்கப் பற்று இருந்தால் உறுதியாக சந்ததிகளிலும் அதற்கான தாக்கம் ஏற்படும்.

எம்பெருமானார் (ஸல்) அவர்கள் اَكْرِمُوْا اَوْلَادَكُمْ وَاَحْسِنُوْا اَدَبَهُمْ என்று கூறியுள்ளார்கள். அதாவது உங்கள் சந்ததிகளுக்கு கண்ணியமளியுங்கள். மேலும் அவர்களுக்கு அழகிய நற்பண்புகளைக் கற்றுக் கொடுங்கள்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:

நீங்களும் சுயமே நல்லவராக இருங்கள். மேலும் சந்ததிகளுக்காக நன்மையிலும் இறையச்சத்திலும் சிறந்த முன்மாதிரியாக இருங்கள். அவர்களை இறையச்சமும் மார்க்க உணர்வும் உள்ளவராக ஆக்குவதற்காக முயற்சியும் துஆவும்

செய்யுங்கள். அவர்களுக்காக செல்வத்தைச் சேகரிக்க எவ்வளவு முயற்சி செய்கிறீர்களோ அந்த அளவுக்கு இதற்காகவும் முயற்சி செய்யுங்கள். சந்ததிகளுக்கான மிகச் சிறந்த முன்மாதிரியாகவும் பாடமாகவும் அமையக் கூடிய வேலையைச் செய்யுங்கள்.

அதற்கு முதலில் நீங்கள் உங்களைச் சீர்திருத்துவது அவசியமாகும். நீங்கள் மிக உயர் தரம் வாய்ந்த இறையச்சம் உடையவராகவும் நன்னெறியாளராகவும் ஆகி விட்டீர்கள் என்றால் மேலும் இறைவனைத் திருப்திப்படுத்துவீர்கள் என்றால் அல்லாஹ்வும் உங்கள் சந்ததிகளுடனும் நல்ல முறையில் நடந்து கொள்வான் என உறுதி கொள்ளப்படுகிறது.

(மல்ஃபூஸாத் தொகுதி 8 பக்கம் 109, 110)

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் குழந்தைகளிடத்தில் எப்போதும் உண்மை மற்றும் நாணயத்தை ஏற்படுத்துவதே அன்னாரின் வாழ்வின் அழகிய தருணமாகும். மேலும் அவர்களின் தர்பிய்யத்தில் கடுமை காட்டாமல் துஆ மற்றும் செயல் முன்மாதிரியை அவசியம் எனக் கருதினார்கள். அப்படிப்பட்ட வீட்டில் நடந்த ஒரு சிறிய சம்பவம் மேலும் அந்த சம்பவத்தை பொலிவூட்டுகிறது.

கபூர்தலாவைச் சேர்ந்த ஹஸ்ரத் முன்ஷி ஸஃபர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஒருமுறை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் படுத்துக் கொண்டிருந்தார்கள். ஹஸ்ரத் செய்யது ஃபஸல் அஹ்மது ஷாஹ் சாஹிப் ஹுஸூர் (அலை) அவர்களின் காலை அமுக்கிக் கொண்டிருந்தார்கள். அப்போது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஓரளவு உறங்கி விட்டார்கள். ஃபஸல் அஹ்மது ஷாஹ் சாஹிப் என்னை நோக்கி சைகையில் (ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின்) சட்டைப்பையில் கடினமான பொருள் ஏதோ இருக்கிறது எனக் கூறினார்கள். நான் கையை உள்ளே விட்டு அந்தப் பொருளை வெளியே எடுத்தவுடன் ஹுஸூர் (அலை) அவர்கள் கண் விழித்து விட்டார்கள். அந்தப் பொருளானது பாதி உடைந்த மண்பாடத் துண்டாக இருந்தது. அதை நான் தூக்கி எறியும்போது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள்:

இதை மியான் மஹ்மூது விளையாடிக் கொண்டிருக்கும்போது என் சட்டைப் பையில் போட்டு விட்டார். அதை நீங்கள் தூக்கி எறியாதீர்கள். என்னுடைய சட்டைப்பையிலேயே வைத்து விடுங்கள். ஏனென்றால் அவர் எம்மை நம்பிக்கையாளர் எனக் கருதி விளையாட்டுப் பொருளை வைத்திருக்கிறார். அவர் கேட்டால் நாம் எங்கிருந்து கொண்டு வருவோம் என்று கூறியதும் அவர் அதை சட்டைப் பையிலேயே வைத்து விட்டார். இந்தச் சிறிய சாதாரண சம்பவம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தன்னுடைய செயல் முன்மாதிரியின் மூலமாகத் தம்முடைய குழந்தைகளுக்கு குழந்தைப் பருவத்திலிருந்தே உண்மை, நேர்மை, நாணயத்தை கற்றுக் கொடுப்பதற்கு எந்த அளவு ஆவலாக இருந்தார்கள் என்பதை உணர்த்துகிறது.

அதேபோன்று அன்னாரின் வாழ்வின் ஒரு அழகிய தருணமாக விளங்குகின்ற விஷயம் குழந்தைகள் மீண்டும் மீண்டும் இடையூறு செய்தாலும் அன்னார் மிகுந்த பணியிலிருந்த போதிலும் பதற்றமடைய மாட்டார்கள் என்பதாகும்.

ஹஸ்ரத் டாக்டர் மீர் முஹம்மது இஸ்மாயீல் சாஹிப் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:

மியான் பஷீர் அஹ்மது சாஹிப் அவர்கள் சிறுவனாக இருக்கும்போது சர்க்கரை சாப்பிடும் பழக்கம் இருந்தது. எப்போது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் வந்து கையை நீட்டியவாறு தந்தையே (வெள்ளை) சர்க்கரை எனக் கேட்பார்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் நெருக்கடியான எழுத்துப் பணியில் இருக்கும்போது அதை விட்டு விட்டு உடனடியாக சிறிய அறைக்குச் சென்று சர்க்கரை எடுத்து வந்து தருவார்கள். பின்னர் அன்னார் எழுதத் தொடங்கி விடுவார்கள். சிறிது நேரம் கழித்து மீண்டும் மியான் சாஹிப் கையை நீட்டியவாறு வந்து தந்தையே வெள்ளை (அதாவது வெள்ளை நிற சர்க்கரை) வேண்டும் எனக் கேட்பார்கள்.

ஹுஸூர் (அலை) மீண்டும் எழுந்து சென்று அவர் கேட்டதைக் கொண்டு வந்து தருவார்கள். இவ்வாறாக அந்நாட்களில் தினமும் பலமுற இந்த கொடுக்கல் வாங்கல் நடந்து கொண்டே இருக்கும். ஆனால் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் எழுத்துப் பணியின் காரணமாக நெருக்கடியில் இருந்தபோதிலும் எதுவும் கூற மாட்டார்கள். மாறாக ஒவ்வொரு முறையும் அவருக்காக (சிறுவனுக்காக) எழுந்து செல்வார்கள்.

(சீரத்துல் மஹ்தி பக்கம் 823, 824)

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் சிறுவர்களுக்கு உடல் ரீதியான தண்டனை வழங்குவதை கடினமாக எதிர்த்து வந்தார்கள். நல்ல முன்மாதிரி மற்றும் அன்புடன் குழந்தைகளுக்கு தர்பிய்யத் கொடுக்க வேண்டும் என்பதே அன்னாரின் கூற்றாக இருந்தது. இது தொடர்பாக கமருல் அன்பியா ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:

மவ்லவி ஷேர் அலி சாஹிப் (ரலி) அவர்கள் என்னிடத்தில் இவ்வாறு கூறினார்கள்:

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் சிறுவர்களுக்கு உடல்ரீதியான தண்டனை கொடுப்பதை கடினமாக எதிர்த்தார்கள். எந்த ஆசிரியர் தொடர்பாக அவர் சிறுவர்களை அடிக்கின்றார் என்ற புகார் வந்தாலே கோபித்துக் கொள்வார்கள். மேலும் அறிவுள்ள ஆசிரியர் எந்தப் பணியை ஞானத்துடன் செய்கின்றாரோ அதை தகுதியற்ற அறிவீனமான ஆசிரியர் அடி உதையைக் கொண்டு செய்து விடலாம் என்று விரும்புகிறார். ஒருமுறை மத்ரஸாவில் ஓர் ஆசிரியர் ஒரு சிறுவனுக்கு ஏதோ தண்டனை கொடுத்தார். அப்போது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மீண்டும் அவ்வாறு நடந்தது என்றால் நாம் அந்த ஆசிரியரை மத்ரஸாவிலிருந்து வெளியேற்றி விடுவோம் எனக் கூறினார்கள். (சீரத்துல் மஹ்தி தொகுதி 2 பக்கம் 398)

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஒரு சந்தர்ப்பத்தில் கூறுகிறார்கள்:

ஹிதாயத் மற்றும் உண்மையான தர்பிய்யத் இறைவனது செயலாகும். (உண்மையான தர்பிய்யத் அல்லாஹ்வின் பணியாகும்.) கடுமையாக அவர்களைப் பின்தொடர்வதும், ஒரு விஷயத்தில் பிடிவாதத்துடன் அளவுக்கு மீறித் தலையிடுவதும் அதாவது ஒவ்வொரு விஷயத்திலும் பிள்ளைகளைத் தடுப்பது போன்றவை தாமே நேர்வழியின் உரிமையாளர் என்பதை வெளிப்படுத்துவதாகும். நாம் நமது விருப்பத்திற்கேற்ப அவர்களை ஒரு வழியில் கொண்டு வந்து விடுவோம் என்று வெளிப்படுத்துவது என்னுடைய பார்வையில் இதுவும் ஒருவகை மறைமுகமான ஷிர்க் ஆகும்.

கோபத்தில் உள்ள ஒருவர் தண்டனை கொடுக்கும்போது கோபம் என்ற தீ அதிகரித்து அவர் எதிரியின் தன்மையை மேற்கொள்கிறார். அதன் காரணமாக குற்றம் செய்வதில் எல்லையை கடந்து விடுகின்றார். கோபத்தில் கட்டுப்பாடு இழந்து தண்டிக்காமல் சீர்திருத்த வேண்டும் என்ற நோக்கத்தில் தண்டனை கொடுப்பதற்கான (அடிப்பது) உரிமை அவருக்கு உள்ளது. சூழ்நிலையைக் கருத்தில் கொண்டவாறு தண்டனை கொடுக்க வேண்டும். மன்னிக்கவும் வேண்டும்.

மேலும் அன்னார் (அலை) கூறுகிறார்கள்: எவ்வாறு எந்த அளவுக்கு தண்டனை கொடுப்பதில் ஆர்வம் காட்டப்படுகிறதோ அதே அளவுக்கு துஆ செய்வதில் ஈடுபாடு காட்டுங்கள். மேலும் குழந்தைகளுக்காக வருத்தத்துடன் உள்ளத்திலிருந்து துஆ செய்வதை ஒரு பகுதியாகவே கருதுங்கள். ஏனென்றால் பெற்றோர்கள் குழந்தைகளுக்காகச் செய்கின்ற துஆ குறிப்பாக ஏற்றுக் கொள்ளப்படுகிறது.

(மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 308, 309)

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் சாதாரண இழப்பின் காரணமாக குழந்தைகளுக்குத் தண்டனை வழங்க மாட்டார்கள். மாறாக மன்னித்து விடுவார்கள்.

ஹஸ்ரத் மவ்லவி அப்துல் கரீம் சாஹிப் (ரலி) அவர்கள் அல்ஹகம் பத்திரிகையில் இவ்வாறு எழுதுகிறார்கள்:

மஹ்மூது (இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி)) நான்கு வயது சிறுவனாக இருந்தார்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் வழக்கம்போல் எழுதிக் கொண்டிருந்தார்கள். மியான் மஹ்மூது தீக்குச்சியை வைத்துக் கொண்டு அங்கு வந்தார்கள். அவர்களுடன் குழந்தைகளின் கூட்டமும் இருந்தது. முதலில் சிறிது நேரம் அவர்கள் தமக்குள்ளேயே விளையாடிக் கொண்டிருந்தார்கள். அப்போது அவர்களது உள்ளத்தில் தோன்றியவாறு கையெழுத்துப் பிரதியை எரித்து விட்டார்கள். மேலும் மகிழ்ச்சியுடன் கைதட்டிக் கொண்டிருந்தார்கள்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் எழுதுவதில் மூழ்கி இருந்த காரணத்தால் என்ன நடக்கிறது என்பதை கூட தலை நிமிர்ந்து பார்க்கவில்லை. அதற்குள் முக்கியமான ஆவணமெல்லாம் தீயில் எரிந்து சாம்பலாகி விட்டது. குழந்தைகளும் வேறு பக்கம் சென்று விட்டார்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் எழுதிக் கொண்டிருக்கும்போது கட்டுரையின் சொற்றொடரை இணைக்கும் வகையில் முந்தைய பக்கத்தை பார்க்க வேண்டியதிருந்தால் அந்த காகிதத்தைத் தேடியவாறு அது எங்கே என்று கேட்ட போது அனைவரும் அமைதியாக இருக்கிறார்கள்.

அப்போது ஒரு சிறுவன் மியான் சாஹிப்தான் அந்த காகிதத்தை எரித்தார்கள் எனக் கூறினான். பெண்கள், குழந்தைகள் மற்றும் வீட்டில் உள்ள அனைவரும் மிகவும் வியப்பாக தற்போது என்ன நடக்கப்போகிறதோ என்ற அச்சத்தில் இருந்தார்கள். அப்போது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் புன்னகைத்தவாறு நல்லதே நடந்துள்ளது. இதில் (தீயில் எரிந்ததில்) அல்லாஹ்வின் விருப்பமும், நாட்டமும் ஏதோ இருக்கும். மேலும் தற்போது அதை விடச் சிறந்ததை நமக்குப் புரிய வைக்க வேண்டும் என இறைவன் விரும்புகிறான் என்று கூறினார்கள்.

(சீரத் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) ஷேக் யஃகூப் அலீ இர்ஃபானீ சாஹிப் எழுதியது)

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் எங்கு உலக விஷயங்களையும், உலகக் கல்வியையும் கற்பதில் உடல் ரீதியான தண்டனை வழங்குவதை ஆகுமானதாகக் கருதுவதில்லையோ அங்கு மார்க்கத்திற்காக மதிப்பையும் தன்மான உணர்வையும் வெளிப்படுத்த வேண்டிய சந்தர்ப்பத்தில் அன்னார் உடல் ரீதியான தண்டனையை வழங்கியுள்ளார்கள். அதனால் குழந்தைப் பருவத்திலிருந்தே குழந்தைகளுக்கு மார்க்கத்தின் மீதும் மதிப்பும் தன்மான உணர்வும் நிலை பெற வேண்டும் என்பதே ஆகும்.

ஹஸ்ரத் உம்முல் முஃமினீன் (ரலி) அவர்கள் அப்படிப்பட்ட ஒரு சம்பவத்தை ஹஸ்ரத் மியான் பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்களுக்கு கூறினார்கள்: ஒருமுறை உம்முடைய சகோதரர் முபாரக் அஹ்மது மர்ஹூம் அவர்களின் குழந்தைப் பருவத்தில் கவனமின்மை காரணமாக திருக்குர்ஆனுக்கு அவமதிப்பு ஏற்பட்டு விட்டது. அதனால் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மிகுந்த கோபமடைந்தார்கள். எந்த அளவுக்கு என்றால் அன்னாரின் முகம் சிவந்து விட்டது.

மேலும் கோபத்தில் முபாரக் அஹ்மதின் முதுகில் ஓர் அடி அடித்தார்கள். அதனால் அவனுடைய மெலிந்த உடலில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் விரல்களின் அச்சு பதிந்து விட்டது. மேலும் அன்னார் (அலை) கோபத்துடன் இவனை இப்போது என் முன்னால் இருந்து அழைத்துச் செல்லுங்கள் என்று கூறினார்கள்.

பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) கூறுகிறார்கள்: மர்ஹூம் முபாரக் அஹ்மது எங்கள் சகோதரர்கள் அனைவரிலும் வயதில் சிறியவன் ஆவார். மேலும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் வாழ்நாளிலேயே இறந்து விட்டார். ஹுஸூர் (அலை) அவர்கள் அவர் மீது அதிக அன்பு வைத்திருந்தார்கள். அதன் காரணமாக அவர் மரணத்திற்குப் பிறகு அவனுடைய பெயர் பலகையில் எழுத வேண்டிய கவிதைகளை எழுதினார்கள். அதில் ஒரு கவிதை இதுவாகும்:

*என் மைந்தன் முபாரக் அஹ்மது தூய வடிவாகவும் தூய இயல்பு கொண்டவனாகவும் இருந்தான்.*

*இன்று அவன் நம்முடைய உள்ளத்தில் துக்கத்தை ஏற்படுத்தி விட்டு நம்மை விட்டுப் பிரிந்து விட்டான்.*

ஆனால், அந்த சந்தர்ப்பத்தில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது

(அலை) அவர்கள் திருக்குர்ஆனின் அவமதிப்பை சகித்துக் கொள்ளவில்லை. மேலும் அதற்கான தண்டனை அவசியம் எனக் கருதினார்கள். (சீரத்துல் மஹ்தி தொகுதி 2 பக்கம் 325)

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் வாழ்வின் அழகிய தருணத்தில் இதுவும் ஒன்றாக இருந்தது. அதாவது, அன்னார் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் நடைமுறையின் ஒளியில் சில சந்தர்ப்பங்களில் படிப்பினை பெறக்கூடிய கதைகளைக் கூறியவாறு தன்னுடைய மனைவி மற்றும் குழந்தைகளுக்கு தர்பிய்யத் கொடுத்தார்கள். ஒரு சந்தர்ப்பத்தில் விருந்தினர்களின் வருகை அதிகரித்ததைப் பார்த்து வீட்டில் உள்ளவர்களின் இக்கட்டான நிலையை உணர்ந்த ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தன்னுடைய குடும்பத்தினருக்கு இந்த படிப்பினை பெறத்தக்க கதையைக் கூறினார்கள்.

ஹஸ்ரத் முஃப்தி முஹம்மது ஸாதிக் சாஹிப் (ரலி) அவர்க கூறுகிறார்கள்:

நான் 1901 ஆம் ஆண்டு ஹிஜ்ரத் செய்து காதியான் வந்தேன். என்னுடன் மனைவி மக்களையும் அழைத்து வந்தேன். ஓர் இரவில் நடந்த சம்பவமாகும். சில விருந்தினர்கள் வந்தார்கள். அவர்களுக்கான தங்குவதற்கான ஏற்பாட்டை எவ்வாறு செய்வது என வியப்புடன் ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) இருந்தார்கள். ஏனென்றால் முழு வீடும் நிறைந்து காணப்படுகிறது. இவர்களை நான் எங்கு தங்க வைப்பேன் என்று நினைத்துக் கொண்டிருக்கையில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் விருந்தினர்களுக்கு கண்ணியமளிப்பது தொடர்பாக மனைவி சாஹிபாவிற்கு பறவைகளின் கதையைக் கூறினார்கள்.

நான் அடுத்த அறையில்தான் இருந்தேன். மேலும் பழைய கால தோரணையால் செய்யப்பட்ட கதவு என்பதால் உள்ளிருந்து பேசக்கூடிய ஓசையை எளிதாகக் கேட்க முடியும். அதனால் முழு கதையையும் என்னால் கேட்க முடிந்தது.

அன்னார் கூறினார்கள்: ஒருமுறை காட்டில் ஒரு பயணி பயணம் செய்தவாறு மாலை நேரத்தை அடைந்தான். இருள் நிறைந்த இரவாக இருந்தது. அருகில் எந்தவொரு ஒரு கிராமமும் அவருக்கு தென்படவில்லை. யாரும் இல்லாத நிலையில் ஒரு மரத்தின் கீழ் இரவைக் கழிப்பதற்காக அமர்ந்து விட்டான். அந்த மரத்தில் ஒரு பறவையின் கூடு இருந்தது. ஆண் பறவை தன்னுடைய இணையான பெண் பறவையுடன் இந்த வழிப்போக்கன் நம்முடைய கூட்டின் கீழ் பூமியில் அமர்ந்துள்ளான். இன்று இரவு இவன் நம்முடைய விருந்தினர் ஆவான். அவனுக்கு விருந்தோம்பல் செய்வது நம்முடைய கடமையாகும் எனக் கூறியது.

அதைக் கேட்ட பெண் பறவை அதை ஏற்றுக் கொண்டது. மேலும் இரு பறவைகளும், குளிர்ந்த இரவாக உள்ளது. நம்முடைய இந்த விருந்தினருக்கு குளிர் காய்வதற்குத் தீயின் தேவை உள்ளது. நம்மிடத்தில் நம்முடைய கூட்டைத் தவிர வேறெதுவும் இல்லை. அந்த கூட்டையே கீழே எறிந்து விடுவோம். அதிலுள்ள குச்சிகளை எரித்து அதன் மூலம் அந்த பயணி குளிர் காய்ந்து கொள்ளட்டும் என்று ஆலோசனை செய்தவாறு அவ்வாறே செய்தது. கூட்டிலுள்ள அனைத்து குச்சிகளையும் கீழே எறிந்து விட்டது. அதை அந்த பயணி அருளாகக் கருதி அனைத்து குச்சிகளையும் ஒன்று சேர்த்து தீயை மூட்டி குளிர் காய்ந்து கொண்டான். மீண்டும் மரத்திலுள்ள பறவைகள் நாம் தீயையும் குளிர் காய்வதற்கான பொருளையும் ஏற்பாடு செய்து கொடுத்தோம். தற்போது சாப்பிடுவதற்கும் நாம் ஏதாவது கொடுக்க வேண்டுமென ஆலோசனை செய்தவாறு நம்மிடத்தில் அவருக்கு கொடுப்பதற்கு எதுவுமே இல்லாததால் நாமே தீயில் விழுந்து விடுவோம். பயணி நம்முடைய இறைச்சியை அறுத்து உண்ணட்டும் என்று கருதி அந்தப் பறவைகள் அவ்வாறே செய்து விருந்தோம்பலின் உரிமையைச் செலுத்தியது.

(திக்ரே ஹபீப் பக்கம் 85–87)

இதுவே ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தன்னுடைய குடும்பத்தினருக்கு அறிவுரை செய்யும் நடைமுறையாகும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் அல்லாஹ்வின் திருப்தியைப் பெற வேண்டும் என்ற காரணத்தினால்தான் குழந்தைகளை நேசித்தார்கள். ஹஸ்ரத் மவ்லானா அப்துல் கரீம் சாஹிப் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் குழந்தைகளை எந்த அளவுக்கு கவனித்தும் வளர்த்தும் வந்தார்கள் என்றால் மேலோட்டமாகப் பார்ப்பவர்கள் அன்னாரை விட வேறு யாருக்கும் குழந்தைகளின் மீது பாசம் இருக்க முடியாது எனக் கருதுவார்கள்.

குழந்தைகள் நோயுற்றால் அவர்களின் சிகிச்சையிலும், நலம் விசாரிப்பதிலும் எந்த அளவுக்குக் கவனம் செலுத்துவார்கள் என்றால் அன்னாருக்கு வேறு எதைப் பற்றியும் சிந்தனையே இல்லாத அளவுக்கு அதிலேயே மூழ்கி விடுவார்கள். அவை இவை அனைத்தும் அல்லாஹ்விற்காகத்தான் செய்கிறார்கள் என்பதை நுட்பமாகப் பார்ப்பவர்கள் அறிந்து கொள்ள முடியும்.

இறைவனுக்காக அவனுடைய பலவீனமான படைப்பினங்களுக்கு ஒத்தாசை செய்வதும் கவனிப்பதுமே நோக்கமாகும். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் மூத்த மகள் இஸ்மத் பேகம் சாஹிபா லூதியானாவில் காலராவால் நோயுற்றிருந்த போது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் அந்த மகளில்லாமல் வாழ்க்கையே இல்லை என்று எண்ணியவாறு அவருக்கு சிகிச்சை செய்தார்கள். ஓர் உலகவாதியாகக் குழந்தை மீது நேசம் கொண்ட ஒருவர் இதை விட அதிகமாக செயல்படவே முடியாது. ஆனால் அந்த மகள் மரணித்த பிறகு எவ்வாறு விலகி இருந்தார்கள் என்றால் அப்படி ஒரு மகள் இருந்தாள் என்று அவர்கள் நினைவு கூறியதே இல்லை.

இதேபோன்று மிர்ஸா முபாரக் அஹ்மது சாஹிப் அவர்கள் நோயுற்றிருந்த நாட்களில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் குழந்தைகளின் உடல்நலம் மற்றும் அவர்களை வளர்ப்பதில் நம்முடைய கடமைகள் என்னவென்பதை இரவும் பகலுமாக (அந்த மகனைக் கவனித்தவாறு) செயல் வடிவிலாக நமக்கு வெளிப்படுத்திக் காட்டியுள்ளார்கள். (சீரத் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) ஷேக் யஃகூப் அலீ இர்ஃபானீ சாஹிப் எழுதியது)

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் குழந்தைகளின் தர்பிய்யத்திற்காக அவர்களுக்கு குழந்தைப் பருவத்திலேயே திருக்குர்ஆன் கற்பித்தல், சிறு வயதில் திருக்குர்ஆன் முடித்த பிறகு அவர்களுக்கான ஆமீன் நிகழ்ச்சி நடத்துவதற்கான சுன்னத்தையும் (நடைமுறையையும்) தொடங்கி வைத்தார்கள். இதற்கேற்ப ஜமாஅத்தில் 1897 ஆம் ஆண்டிலிருந்து இந்த நடைமுறை தொடர்ந்தது. அதாவது அன்னாரின் மகன் ஹஸ்ரத் மிர்ஸா பஷீருத்தீன் மஹ்மூது அஹ்மது சாஹிப் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) திருக்குர்ஆன் முழுவதுமாக ஓதி முடிந்த பிறகு ஆமீன் நிகழ்ச்சி நடத்தினார்கள்.

அதற்காக வெளியிலிருந்தும் அன்பர்களுக்கு அழைப்பு கொடுத்திருந்தார்கள். அந்த சந்தர்ப்பத்தில் பிரத்யேகமாக விருந்திற்கான ஏற்பாடு செய்திருந்தார்கள். மேலும் அன்னார் (அலை) அவர்கள் அச்சந்தர்ப்பத்தில் 'மஹ்மூது கி ஆமீன்' என்ற பிரசித்தி பெற்ற கவிதையை எழுதினார்கள். அதன் முதல் இரண்டு வரிகள் இதுவாகும்:

*மஹ்மூது படித்து முடிந்த இந்த நாளை நீயே காண்பித்தாய்!*

*உள்ளம் இந்தக் கருணையைக் கண்டு உன்னைப் புகழ்ந்து பாடியது!*

*நூற்றுக்கணக்கான நன்றி உனக்கே இறைவா!*

*நூற்றுக்கணக்கான நன்றி உனக்கே இறைவா!*

*இந்த நாளை அருளுக்குரியதாக ஆக்குவாயாக.*

*என்னைக் காண்கின்ற இறைவன் தூய்மையானவன்.*

இந்த அருளுக்குரிய சுன்னத்தின் விளைவாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஜமாஅத்தில் திருக்குர்ஆனின் போதனை மற்றும் தர்பிய்யத்திற்கான புதிய வாசலைத் திறந்து விட்டார்கள் – அல்ஹம்துலில்லாஹ். ஒவ்வொரு வீட்டிலும் இவ்வாறான ஒரு தர்பிய்யத்திற்கான முக்கியமான கடமை நிறைவேற்றப்பட்டுக் கொண்டிருக்கிறது.

தற்போது நான் என்னுடைய உரையின் இறுதியில் நம்முடைய வாழ்வில் தர்பிய்யத் தொடர்பாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடன் மகத்துவமான கூற்றை ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் தம்முடைய ஜுமுஆ உரையான 2 ஜுலை 2004 ஆண்டு ஆற்றிய உரையிலிருந்து வாசித்து என்னுடைய உரையை முடிக்கின்றேன்.

ஆண்களுக்குத் தலைவர் என்ற முறையில் (முத்தகி) இறையச்சமுடையவராக இருப்பதும் அவருடைய பொறுப்பாகும். மேலும் ஓர் இறையச்சமுடையவர் குடும்பத் தலைவராக ஆகுவதற்கு சுயமே தொழுகையாளியாக இருக்க வேண்டும். இரவில் எழுந்திருங்கள் அல்லது குறைந்தது ஃபஜ்ர் தொழுகைக்காக கண்டிப்பாக எழுந்திருங்கள். தன்னுடைய மனைவி மக்களையும் எழுப்புங்கள். எந்த வீடு இறைவணக்கங்கள் செய்பவர்களால் நிறைந்து காணப்படுமோ அவர்கள் இறைவனுடைய அருளையும் அவனிடமிருந்து நன்மையையும் பெறக் கூடியவர்களாக இருப்பார்கள்.

ஆனால் நினைவில் கொள்ளுங்கள். துஆவுடன் முயற்சி செய்யும்போதுதான் அந்த முயற்சி உங்களுக்கு பலன் தரக்கூடியதாகவும், வெற்றியைப் பெற்றுத் தரக்கூடியதாகவும் இருக்கும். வெறுமனே நிற்பதாலும், குனிவதாலும் மட்டுமல்ல. மாறாக உங்களுக்காகவும் உங்களுடைய மனைவி மக்களுக்காகவும் தொடர்ந்து துஆ செய்து கொண்டே இருங்கள். ஆதலால் தொழுகையிலும் தன்னுடைய மனைவி மக்களுக்காக அதிகமாக துஆ செய்யுங்கள்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:

திருக்குர்ஆனில் اصلح لی فی ذُریتی அதாவது என்னுடைய மனைவி மக்களைத் திருத்துவாயாக என்ற துஆவை கற்றுத் தந்துள்ளான். தன்னுடைய நிலைமையில் தூய மாற்றத்திற்காக துஆ செய்வதுடன் தன்னுடைய மனைவி மற்றும் குழந்தைகளுக்காக துஆ செய்து கொண்டே இருக்க வேண்டும். ஏனென்றால் அதிகமான சோதனைகள் மனைவி மற்றும் குழந்தைகளினால் தான் ஏற்படுகிறது.

அதாவது அவர்களினால்தான் அதிகமானோர் மீது துன்பங்களும் இன்னல்களும் கஷ்டங்களும் வருகின்றது. ஆக, அவர்களின் சீர்திருத்தத்திற்காகவும் முழு கவனம் செலுத்த வேண்டும். மேலும் அவர்களுக்காக துஆவும் செய்து கொண்டே இருக்க வேண்டும்.

(மல்ஃபூஸாத் தொகுதி 5 பக்கம் 456, 457)

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:

நான் எவ்வாறு துஆ செய்கிறேன் என்பதில் என்னுடைய வழிமுறை என்னவென்றால் நான் தினமும் விடாமல் தொடர்ச்சியாக சில துஆக்களை செய்கிறேன்.

முதலில் என்னுடைய நஃப்ஸுக்காக (ஆன்மாவிற்காக) துஆ செய்கிறேன். அல்லாஹ்வுடைய கண்ணியமும் கம்பீரமும் வெளிப்படும் பணியை என்னிடமிருந்து அல்லாஹ் வாங்குவானாக.

இரண்டாவதாக எனது வீட்டில் உள்ளவர்களுக்காக, அவர்களிடமிருந்து கண்களுக்கு குளிர்ச்சி கிடைக்கவும் அவர்கள் அல்லாஹ்வின் விருப்பத்தின் வழியில் நடக்கவும் துஆ செய்வேன்.

மூன்றாவதாக எனது குழந்தைகளுக்காக அவர்கள் அனைவரும் மார்க்கத்தின் தொண்டர்களாக ஆக வேண்டுமென துஆ செய்வேன்.

நான்காவதாக என்னுடைய நல்ல நண்பர்களுக்காக ஒவ்வொருவரின் பெயரையும் குறிப்பிட்டு துஆ செய்வேன்.

ஐந்தாவதாக இந்த இயக்கத்துடன் தொடர்புடையவர்கள், நாம் அவர்களை அறிந்தாலும் அறியா விட்டாலும் அவர்களுக்காக துஆ செய்வேன்.

(மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 309)

எல்லாம் வல்ல அல்லாஹ் நம்மை உண்மையான முறையில் நம்முடைய உரிமைகளையும் கடமைகளையும் செலுத்துவதற்கான பாக்கியத்தைத் தருவானாக. நம்முடைய மனைவி குழந்தைகள் மூலமாக நமக்கு மனநிறைவையும் கண்களுக்கு குளிர்ச்சியையும் அளிப்பானாக. அல்லாஹ்வை வணங்கக் கூடியவர்களாகவும் நன்மையில் நிலை நிற்பவர்களாகவும் அவர்களை ஆக்குவாயாக.

2018 ஆம் ஆண்டு நடைபெற்ற காதியான் ஆண்டு மாநாட்டில் நிகழ்த்தப்பட்ட உரை

## விகிதாச்சார அடிப்படையில் சந்தா கொடுப்பதும், வஸிய்யத் அமைப்பின் முக்கியத்துவமும் அதன் அருள்களும்

மவ்லவி K.தாரிக் அஹ்மது (சத்ர், மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா, பாரத்)

(தமிழாக்கம்: மவ்லவி N.ஜிஹாவுல் ஹக்)

يٰۤاَيُّهَا الَّذِيۡنَ اٰمَنُوۡا لَا تُلۡهِكُمۡ اَمۡوَالُكُمۡ وَلَاۤ اَوۡلَادُكُمۡ عَنۡ ذِكۡرِ اللّٰهِ‌ۚ وَمَنۡ يَّفۡعَلۡ ذٰلِكَ فَاُولٰٓـئِكَ هُمُ الۡخٰسِرُوۡنَ ○ وَاَنۡفِقُوۡا مِنۡ مَّا رَزَقۡنٰكُمۡ مِّنۡ قَبۡلِ اَنۡ يَّاۡتِىَ اَحَدَكُمُ الۡمَوۡتُ فَيَقُوۡلَ رَبِّ لَوۡلَاۤ اَخَّرۡتَنِىۡۤ اِلٰٓى اَجَلٍ قَرِيۡبٍ ۙ فَاَصَّدَّقَ وَاَكُنۡ مِّنَ الصّٰلِحِيۡنَ ○

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: இந்த காலம் எவ்வளவு அருளுக்குரிய காலமாக இருக்கிறது! இதில் எவருடைய உயிரும் கேட்கப்படவில்லை. மேலும் இந்தக் காலம் உயிரைக் கொடுப்பதற்கான காலம் அல்ல; மாறாக, தகுதிக்கேற்ப செல்வங்களை வழங்குவதற்குரிய காலமாகும். (அல்ஹகம் காதியான் 10 ஜூலை 1903)

மேலும் கிஷ்தி நூஹ் என்ற நூலில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

ஒவ்வொரு மனிதருடைய உண்மைத்தன்மையும் அவருடைய சேவையைக் கொண்டே கண்டறியப்படுகிறது. அன்பர்களே! இது மார்க்கத்திற்காகவும் மார்க்கத்தின் நோக்கத்திற்காகவும் சேவை செய்வதற்கான நேரமாகும். இந்த நேரத்தைப் பொக்கிஷமாகக் கருதுங்கள். பிறகு இது ஒருபோதும் கை கூடாது.

(கிஷ்தி நூஹ், ரூஹானி கஸாயின் தொகுதி 19 பக்கம் 83)

சகோதரர்களே! நீங்கள் செவிமடுத்ததைப் போன்று இந்த அருளுக்குரிய மாநாட்டில் 'விகிதாச்சார அடிப்படையில் சந்தா கொடுப்பது மற்றும் வஸிய்யத் அமைப்பின் முக்கியத்துவமும் அருள்களும்' என்ற தலைப்பில் சில கருத்துக்களை உங்கள் முன் வைப்பதற்குப் பணிக்கப்பட்டுள்ளேன்.

அன்பர்களே! தற்போது நான் அல்முனாஃபிகூன் அதிகாரத்தின் 10,12 ஆகிய வசனங்களை ஓதினேன். ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹ்) அவர்களின் மொழியாக்கத்தில் அதன் பொருள் இவ்வாறாகும்:

"நம்பிக்கையாளர்களே! உங்கள் செல்வங்களும், உங்கள் சந்ததிகளும் அல்லாஹ்வை நினைவு கூருவதிலிருந்து உங்களைத் தடுக்க வேண்டாம். எவர் அவ்வாறு செய்வாரோ அவர் இழப்பிற்குரியவராவார். உங்களுக்கு மரணம் நெருங்கி, அவர் என் இறைவா! எனக்கு மேலும் கால அவகாசம் வழங்கியிருந்தால் நான் நிச்சயமாக தருமங்கள் செய்து நல்லவர்களுடன் இணைந்திருப்பேன் எனக் கூறும் நிலை வருவதற்கு முன்பாக உங்களுக்கு வழங்கப்பட்டதிலிருந்து வழங்குங்கள்."

சகோதரர்களே! அல்லாஹ் இந்த வசனங்களில் இறைஞானத்தின் மகத்தான ஒரு நுண்ணிய கருத்தைக் கூறியுள்ளான். அதாவது, மனிதனுக்கு இவ்வுலகை விட்டுச் செல்லும் நேரம் வரும்போது, அந்தோ! வாழ்க்கை தனக்கு மேலும் அவகாசம் வழங்கினால் அல்லாஹ்வின் பாதையில் தனது விருப்பத்திற்குரிய பொருளை அளவில்லாமல் வழங்க ஆயத்தமாகி விடுவேனே என்ற உணர்வு அவனைக் கண்டிப்பாக நிம்மதியிழக்கச் செய்கிறது.

மேலும் தன்னிடம் உள்ள அனைத்தையும் அல்லாஹ்வின் பாதையில் வழங்கி விடுகின்றேன். எப்படியாவது அல்லாஹ்வின் விருப்பத்தைப் பெற்று விட வேண்டும் என விருப்பம் கொள்கின்றான். மனிதனுக்கு அவனது கடைசி நேரத்தில் இறைவழியில் செலவு செய்ய வேண்டும் என்ற எண்ணம் ஏன் நினைவுக்கு வருகிறது என்ற இந்த கேள்வி இந்த இடத்தில் மிக முக்கியமானதாகும்.

இறைவிருப்பத்தைப் பெறுவதற்கு மிகச்சிறந்த மற்றும் பயன்தரக்கூடிய விஷயம் அல்லாஹ்வின் பாதையில் தனது செல்வங்களைத் தியாகம் செய்வதுதான் எனத் திடீரென்று ஏன் தெரிய வருகிறது? இதில் உள்ள இரகசியம் என்ன?

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மனிதனுடைய இந்த நிலையை படம்பிடித்துக் காட்டியவாறு இவ்வாறு கூறுகிறார்கள்:

ஹஸ்ரத் அபூ ஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிப்புச் செய்கின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் ஒரு மனிதர் வந்தார். அவர் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! எந்த சதகாவில் அதிக நன்மையுள்ளது என்று கேட்டார். அதற்கு பெருமானார் (ஸல்) அவர்கள், நீங்கள் நல்ல உடல்நலத்துடன் இருக்கும்போது கருமித்தனம் கொண்ட போதிலும் வழங்கும் சதகாவில்தான் அதிக நன்மை இருக்கிறது என்று கூறினார்கள்.

அதாவது உங்களை ஒருபுறம் வறுமையின் பயமும், மறுபுறம் செல்வந்தராக வேண்டும் என்ற எண்ணமும் இருக்கும்போது (இந்த சதகாவில்) உங்களுக்கு சோம்பேறித்தனம் ஏற்படக் கூடாது. மூச்சு தொண்டைக்கு வந்த பின்னர் அந்த நேரத்தில் நீங்கள் அவருக்கு இவ்வளவு, இவருக்கு இவ்வளவு என கூறினால் எந்த பலனுமில்லை. ஏனென்றால் (அந்த செல்வமாகிய) அது அவருக்குரியதாக ஏற்கனவே ஆகிவிட்டது.

(புகாரி, கிதாபுஸ் ஸக்காத்)

அல்லாஹ் தனது அடியாருடைய அனைத்து நிலைகளையும் அறிந்தவனாவான். தனது அடியாரின் கடைசி நேரத்தில் ஏற்படும் ஏக்கங்களிலிருந்து இரட்சிப்பை

வழங்குவதற்காக அனுதாப அடிப்படையில் இவ்வாறு கூறுகின்றான்:

وَمَاذَا عَلَيْهِمْ لَوْ اٰمَنُوْا بِاللّٰهِ وَالْيَوْمِ الْاٰخِرِ وَاَنْفَقُوْا مِمَّا رَزَقَهُمُ اللّٰهُ ؕ وَكَانَ اللّٰهُ بِهِمْ عَلِيْمًا ○ اِنَّ اللّٰهَ لَا يَظْلِمُ مِثْقَالَ ذَرَّةٍ ۚ وَاِنْ تَكُ حَسَنَةً يُّضٰعِفْهَا وَيُؤْتِ مِنْ لَّدُنْهُ اَجْرًا عَظِيْمًا ○

அதாவது அவர்கள் அல்லாஹ்வின் மீதும் மறுமையின் மீதும் நம்பிக்கை கொள்வதிலும் அல்லாஹ் அவர்களுக்கு வழங்கியவற்றிலிருந்து கொடுப்பதிலும் அவர்களுக்கு என்ன கஷ்டம் ஏற்பட்டுள்ளது? அல்லாஹ் அவர்களை நன்கு அறிகின்றான். நிச்சயமாக அல்லாஹ் சிறிதளவு கூட அநீதி இழைக்க மாட்டான். ஏதாவது நன்மையான செயல் இருந்தால் அதை அவன் அதிகமாக்கி விடுவான். அதற்குத் தன் புறமிருந்து மிகப் பெரிய கூலியையும் வழங்குகின்றான். (4:40,41)

ஆக, நற்கூலிக்குரிய மனிதரே நற்பேறு பெற்றவர் ஆவார். அல்லாஹ் அவருக்கு உடல்நலம் வழங்கியிருந்த காலத்தில் அவருக்கு வாய்ப்பளித்த அதே நேரத்தில் தனது முடிவு நல்லதாக அமைவதற்குப் பொருளாதார விஷயத்தில் அல்லாஹ்வுடன் தனது கணக்கைச் சரியாக வைக்கின்றார். இல்லையென்றால் திருக்குர்ஆன் கூறுவதைப் போன்று மரணத் தருவாயில் பொருள் தியாகம் செய்வது தொடர்பாகக் கவலைப்படுவது இழப்பிற்குரியவர்களின் செயலாகும். அது தன்னைத் தானே அழிவில் ஆழ்த்திக் கொள்வதாகும்.

சகோதரர்களே! அல்லாஹ் தனது பரிசுத்த வேதத்தில் மிக முக்கிய இறைவணக்கமாக உள்ள தொழுகைக்கான கட்டளையுடன் பொருள் தியாகத்தின் கட்டளையாக இருக்கும் ஸக்காத்தை பற்றிக் கூறியுள்ளான். இந்த வகையிலும் நாம் பொருள் தியாகத்தின் அவசியத்தைக் கணிக்கலாம்.

ஆக எந்த அளவுக்குத் தொழுகையை வலியுறுத்திக் கூறியுள்ளானோ அதே அளவுக்கு இறைவழியில் தியாகம் செய்வதையும் வலியுறுத்திக் கூறியுள்ளான். திருக்குர்ஆனில் பொருளாதார இபாதத் இரண்டு வகையான சந்தாக்களின் வடிவில் கூறப்பட்டுள்ளது.

ஒன்று, கட்டாய மற்றும் கடமையாக்கப்பட்ட சந்தா. மற்றொன்று விருப்பச் சந்தா. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கடமையாக்கப்பட்ட சந்தாவை அதாவது ஸக்காத்தை இஸ்லாம் மார்க்கத்தின் ஓர் அடிப்படைக் கடமையாகக் கூறியுள்ளார்கள். ஸக்காத் மட்டுமின்றி, மார்க்கத் தேவையின்போது இறைத் தூதரின் அழைப்பினை ஏற்று பொருள் தியாகம் செய்வதில் முந்திக் கொண்டு பங்கு பெறும் மக்களே உண்மையில் இபாதத்தின் உரிமையை நிறைவேற்றக் கூடியவர்களாகவும், அல்லாஹ்வின் நெருக்கத்தை பெறக் கூடியவர்களாகவும் உள்ளனர்.

இறைவழியில் செல்வத்தை வழங்குங்கள் என்ற குரல் மற்றும் திட்டத்திற்கு ஒவ்வொரு நபியின் காலத்திலும் அவர்களை ஏற்றுக் கொண்டவர்கள் லெப்பைக் (நாங்கள் ஆஜரானோம்) என்றே கூறியுள்ளனர். ஆனால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சஹாபாக்கள் எந்த அளவுக்கு அன்னாரது குரலுக்குச் செவிமடுத்தார்கள் என்றால் அதன் நினைவுகள் இன்றும் – ஏன் – மறுமை வரை உள்ளங்களில் உணர்வுகளைத் தூண்டிக் கொண்டேயிருக்கும்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முன்னறிவிப்பிலிருந்து இஸ்லாத்தின் உலகளாவிய வெற்றி இமாம் மஹ்தி, வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் மூலம் நடைபெறும் என்பது தெரிய வருகிறது. இந்த மகத்தான திட்டத்திற்கு அந்தக் காலத்தில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் நம்மிடம் பொருள் தியாகத்திற்கான அறிவிப்பைச் செய்தார்கள். இந்த வகையில் ஸக்காத் போன்ற கடமையான சந்தாக்களைச் செலுத்துவதுடன் வஸிய்யத் திட்டத்தின் கீழ் வருமானம் மற்றும் சொத்திலிருந்து பொருள் தியாகம் செய்யுமாறு கூறினார்கள்.

மேலும் இதில் இணையக்கூடிய தூயவர்களுக்கு சொர்க்த்திற்கான நற்செய்தியையும் வழங்கினார்கள். மேலும் வஸிய்யத் திட்டத்தில் இணையாத அந்த ஆண்கள் மற்றும் பெண்கள் கட்டாயம் தனது வருமானத்தில் பதினாறில் ஒரு பகுதியை (அதாவது சந்தா ஆம்) இந் நோக்கத்திற்காக வழங்க வேண்டும். அதனுடன் வஸிய்யத் திட்டத்தில் இணைவதற்கு விருப்பம் கொள்ள வேண்டும். மேலும் இதன் மூலம் அவருக்கு அதன் அருளினால் முறையாக வஸிய்யத் திட்டத்தில் இணைவதற்கு வாய்ப்பு கிடைக்க துஆவும் செய்ய வேண்டும். வருமான அடிப்படையில் சந்தா செலுத்தும் அருளினால் அல்லாஹ் வஸிய்யத் திட்டத்தில் இணையும் வாய்ப்பை வழங்குகிறான்.

இந்த வகையில் நான் எனது சொற்பொழிவில் முறையே விகிதாச்சார அடிப்படையில் சந்தா செலுத்துதல் மற்றும் வஸிய்யத் திட்டத்தின் முக்கியத்துவம் மற்றும் அருள்கள் தொடாக சில கருத்துக்களை எடுத்துரைப்பேன்.

ஸக்காத் செலுத்திய பின்னர் அஹ்மதிய்யா ஜமாஅத்தில் இணைந்துள்ள ஒவ்வொரு ஆணும் பெண்ணும் தனது வருமானத்தில் பதினாறில் ஒரு பங்கை அல்லாஹ்வுடைய விருப்பத்தினைப் பெறுவதற்காகவும் இயக்கத்தின் நலனுக்காகவும் செலுத்துவது கட்டாயமாகும்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கட்டாய சந்தாக்கள் செலுத்தவது தொடர்பாக இவ்வாறு வலியுறுத்திக் கூறுகிறார்கள்:

இந்த உயர்வான இயக்கத்தில் இணைவதற்கு உயர்வான மன தைரியம் கொண்டவரே தகுதியானவராவார். மேலும் வருங்காலத்தில் முடிந்த அளவு இடைவிடாது ஒவ்வொரு மாதமும் தனது வருமானத்திலிருந்து இந்த மார்க்கத் தேவைகளை நிறைவேற்றுவதற்கு முயற்சி செய்து கொண்டிருப்பேன் என ஒரு புதிய மற்றும் உண்மையான வாக்குறுதியை அல்லாஹ்வுடன் செய்ய வேண்டும்.

வருமானத்திற்கேற்ப சந்தா செலுத்தும் தூண்டுதலையும் உணர்வையும் உள்ளத்தில் உருவாக்குவதற்கு இந்த நுட்பத்தைப் புரிவது அவசியமாகும். இந்த நுட்பத்தைப்

புரியாததன் விளைவினால்தான் எல்லா கருமித்தனங்கள் செய்வது, பொருள் தியாகங்களிலிருந்து விலகியிருப்பது போன்ற சாக்குப் போக்குகள் உருவாகின்றன. அந்த நுட்பம் என்னவென்று அல்லாஹ் பலமுறை கூறியுள்ளான்.

أَنْفِقُوا مِمَّا رَزَقْنَاكُمْ

அதாவது நாம் அவர்களுக்கு வழங்கியதிலிருந்து செலவு செய்யுங்கள். (2:255)

இதன் விளக்கத்தை இந்த குறுகிய நேரத்தில் எடுத்துரைப்பது சாத்தியமற்றாகும். எனவே காலத்தின் இமாம் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றை மட்டும் எடுத்துரைப்பதே போதுமானதாகும் எனக் கருதுகிறேன்.

நீங்கள் செல்வத்தையும் நேசித்துக் கொண்டு அல்லாஹ்வையும் நேசிப்பது உங்களுக்கு முடியாத காரியமாகும். ஆகவே நற்பேறு பெற்றவர் இறைவன் மீது அன்பு கொள்பவரேயாவார். உங்களில் ஒருவர் அல்லாஹ்வின் மீது அன்பு கொண்டு அவனது வழியில் செல்வத்தைச் செலவு செய்வார் என்றால் நான் நிச்சயமாக திட உறுதி கொள்கிறேன். அவரது பொருளில் மற்றவரை விட அதிகமாக பரக்கத் வழங்கப்படும். ஏனெனில் செல்வம் தானாகவே வருவதில்லை. மாறாக, இறைவனது விருப்பத்திற்கேற்ப வருகிறது.

(மஜ்மூஆ இஷ்திஹாராத் தொகுதி 3 பக்கம் 497)

ஆக இந்த நுட்பத்தை புரிவது தான் காலத்தின் மிக முக்கியமான தேவையாகும். அன்பர்களே! அல்லாஹ்வுடைய நடைமுறை தனது அடியார்களுடன் சந்று வித்தியாசமாகவே உள்ளது. அதாவது தானே செல்வத்தை வழங்கி விட்டு அந்த செல்வத்திலிருந்து சிலவற்றை வழங்குங்கள். நான் அதற்கான அருட்கொடையை அதிகப்படுத்தித் தருகின்றேன் என்று வாக்குறுதியும் அளிக்கின்றான்.

தனது அடியார்களை இறைவழியில் செலவு செய்யுமாறு கூறிய அதே இடத்தில் يَسْأَلُونَكَ مَاذَا يُنْفِقُونَ قُلِ الْعَفْوَ என்றும் கூறுகின்றான். அதாவது எதைச் செலவு செய்ய வேண்டும் என அவர்கள் வினவுகின்றனர். அதற்கு அவர்களிடம், (தேவைக்கு மேல்) எஞ்சி இருப்பதனை (செலவு செய்யுங்கள் எனக் கூறுவீராக) என்று கூறியுள்ளான்.

மேலும் அல்லாஹ் தான் வழங்குவதைப் பற்றி கூறியுள்ள இடங்களிலெல்லாம் وَاللّٰهُ يَرْزُقُ مَنْ يَشَاءُ بِغَيْرِ حِسَابٍ என்று கூறியுள்ளான். அதாவது அவன், தான் விரும்புவோருக்குக் கணக்கின்றி வாழ்விற்குரியவற்றை வழங்குகின்றான். (2:213)

ஆக, அல்லாஹ் வழங்கும்போது அளவின்றி வழங்குகின்றான். ஆனால் அவன் தனது வழியில் செலவிடக் கட்டளையிடும்போது அதற்கு எல்லைக்குட்பட்ட ஓர் அளவை நிர்ணயித்துள்ளான். இதனை இஸ்லாமிய பொருளாதார அமைப்பின் மரபின்படி ஷரஹ் (விகிதாச்சாரம்) என்று கூறுவர். தனது வருமானத்தில் தனது திறமையை விட அதிக அளவு அந்த இறைவனுடைய அருளும் கருணையும் அடங்கியிருக்கும்போது அவனது ஒரு சிறிதளவு பங்கை அவன் திரும்பக் கேட்கும்போது அதைக் கொடுப்பதை விட்டு விட்டு அந்த அனைத்தையும் அறியக்கூடிய இறைவனிடமிருந்து தனது வருமானத்தை மறைக்கக் கூடியவன் ஒரு பைத்திய காரனைத் தவிர வேறு யாராக இருக்க முடியும்?

இது தொடர்பாக ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் கூறுகின்றார்கள்:

எனது வருமான வரி இவ்வளவு ஆகிறது. இதில் இவ்வளவு குறைத்துக் காட்டினால் எனக்கு இவ்வளவு எஞ்சும் என்ற எண்ணம் வருவது பிரச்சனையில்லை. (அவ்வாறு எண்ணம் வருவதால்) அல்லாஹ் அவரைத் தண்டிக்க மாட்டான். ஆனால் அதன்படி செயல்பட்டால், வருமான வரியைத் திருடினால், அரசுக்கு இழப்பை ஏற்படுத்தினால் அல்லது உண்மையைக் கூறவில்லை என்றால், தனது சந்தாக்களில் தனது வருமானத்தைக் குறைத்து எழுதினால் அல்லாஹ் தண்டிப்பான்.

இது தொடர்பாக மக்களது பல அனுபவங்களும், உதாரணங்களும் உள்ளன. பின்னர் அவர்களது வருமானமும் படிப்படியாகக் குறைய ஆரம்பித்து விடும். மேலும் அவர்கள் தெரிவித்த வருமானத்தின் அளவுக்கே அவர்களது வருமானம் வந்து விடும். அல்லாஹ்வுக்கு வழங்கும் தியாகமானாலும் சரி; அரசுக்குரிய உரிமையை செலுத்தவதானாலும் சரி; இவ்வாறு செய்தால் பிறகு தண்டனைக்குரிய குற்றமாகும். ஆக, மனிதனின் உள்ளத்தில் உறுதியான (தவறான) எண்ணம் உருவாகி விட்டால் பிறகு அதற்கான சூழ்ச்சிகளையும், ஏமாற்றுதலையும் கைக்கொள்கின்றான்.

(ஜுமுஆ குத்பா 26 அக்டோபர் 2018)

இவ்வாறே ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹிமஹுல்லாஹ்) அவர்கள் கூறுகின்றார்கள்:

எனது முழு வாழ்வின் அனுபவம் என்னவென்றால், எவர் பொருள் தியாகம் செய்யும் விஷயத்தில் இறைவனுடன் சரியான நிலையைக் கையாள மாட்டாரோ, தனது செல்வத்திலிருந்து இறையச்சத்துடன் அல்லாஹ் மற்றும் அவனது மார்க்கத்தின் பங்கைத் தனியாக எடுத்து வைக்க மாட்டாரோ அவர்களது ஏனைய விஷயங்களும் சீர்கெட்டு விடும். வீட்டின் நிம்மதி அழிந்து போகும். வியாபாரத்தில் இழப்பு ஏற்பட ஆரம்பிக்கும். சந்ததிகளின் தர்பிய்யத்திலும் சீர்கேடு வந்து விடும். மேலும் பொதுவாக மனிதனின் வாழ்விலிருந்து அருள் போய்விடும்.

(மாலி நிஸாம் தொகுதி 1 பக்கம் 96)

சகோதரர்களே! சூழ்நிலைக்கேற்ப இங்கு ஈமானுக்கு வலுவூட்டக்கூடிய ஒரு சம்பவத்தை எடுத்துரைப்பது உள்ளத்தை ஈர்க்கக் கூடியதாக இருக்கும். அதாவது அல்லாஹ் தனது வழியில் உள்ளம் திறந்து வருமானத்தின் அடிப்படையில் முழுமையாக சந்தா வழங்கக் கூடியவருக்கு எவ்வாறு அருள்பாலிக்கின்றான் என்பதைப் பாருங்கள்.

ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் தனது ஜுமுஆ பேருரை 26 மார்ச் 2010–ல் கூறுகின்றார்கள்:

ஐவெரிகோஸ்ட்டின் நகரமான பஸ்ஸம் என்ற இடத்தில் ஒரு புதிய அஹ்மதி சகோதரர் கண்ணியத்திற்குரிய யகோ அலிடோ அவர்களுக்கு ஜமாஅத்தின் பொருளாதார அமைப்பிலுள்ள விகிதாச்சாரம் மற்றும் அளவுகள் கூறப்பட்டன. மறுநாள் அவர் தனது வருமானத்திற்கேற்ப சந்தா ஆம், வக்ஃபே ஜதீது, தஹ்ரீகே ஜதீது போன்றவற்றைச் செலுத்த வந்தார். அது ஏறக்குறைய 50 பவுண்டாக இருந்தன. இது அவருக்கு மிகப்பெரிய தொகையாகும். இது அவர் அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொண்ட பிறகு செலுத்தும் முதல் சந்தாவாகும்.

அறிவிக்கக் கூடியவர்கள் கூறுகின்றார்: நமது முஅல்லிம் சாஹிப் அவரது சந்தாவிற்கான ரஸீதை எழுதிக் கொண்டுதான் இருந்தார். அவருக்கு அவரது ஒரு நண்பர் ஃபோன் செய்தார். இரண்டு வருடத்திற்கு முன்பு தான் கொடுக்க வேண்டிய கடன் தொகையை இன்று வந்து பெற்றுக் கொண்டு செல்லுங்கள் என்று கூறினார்.

யாகோ அலீடோ சாஹிப் மிகவும் ஆச்சரியத்துடன் கூறினார்: இந்த மனிதர் என்னிடம் கடன் வாங்கி எவ்வாறு நடந்து கொண்டார் என்றால் இவரிடமிருந்து அவர் வாங்கிய கடன் தொகையைத் திரும்ப வாங்குவது என்பது சாத்தியமற்றதாக இருந்தது. இது இன்று சந்தா செலுத்தியதனால் மட்டுமே நிகழ்ந்துள்ளது. இந்தக் கடன் தொகை திரும்ப கிடைத்தது மட்டுமல்லாமல் சில நாட்களுக்குப் பிறகு அரசின் தரப்பிலிருந்து புதிய வருடத்தில் உங்களுக்கு உயர்பதவி மட்டுமல்ல. உங்களது சம்பளத்தில் ஐம்பது சதவிதிகம் அதிகமாகி உள்ளது என அவருக்கு கடிதம் கிடைத்தது. இவ்வாறு அவர் தனது அதிகப்படியான சம்பளத்தைப் பெற்றவுடன் தனது வருமானத்திற்கேற்ப தனது சந்தாவை இரண்டு மடங்காக்கினார்.

தற்போது அவர் தனது மாத சந்தாவை மட்டும் செலுத்தவில்லை. மாறாக, பள்ளிவாசல் கட்டுமானப் பணியிலும் தனது கையிலிருந்து அதிக அளவு செலவு செய்கின்றார். மேலும் அனைவருக்கும் இவையனைத்தும் இறைவனது வழியில் பொருள் தியாகம் செய்ததன் விளைவாகக் கிடைத்த இறைவனது அருட்கொடையாகும் என வெளிப்படையாகக் கூறி வருகிறார்.

பாருங்கள்! அல்லாஹ் எவ்வாறு புதிதாக வரக்கூடியவர்களுக்கு مِنْ حَيْثُ لَا يَحْتَسِبُ – நீங்கள் அறியாத இடத்திலிருந்து நான் உங்களுக்கு வழங்குவேன் என்ற காட்சியை மட்டும் காண்பிக்காமல் فَيُضٰعِفَهٗ لَهٗۤ اَضْعَافًا كَثِيْرَةً நான் அதிகப்படுத்தி வழங்குவேன் என்ற வாக்குறுதியையும் சொல்லுக்கு சொல் நிறைவேற்றியுள்ளான். (2:246)

சகோதரர்களே! வருமானத்திற்கேற்ப சந்தா வழங்குவது உண்மையில் அல்லாஹ் மற்றும் அவனது நபிக்குக் கட்டுப்படுவதாகும். வருமானத்திற்கேற்ப சந்தா வழங்குவதில் சில சமயம் பலவீனமான உள்ளத்தில் நாம் அதிகமாக வழங்கி விட்டோம்ட என்ற எண்ணம் உருவாகிறது. நாம் இதைச் செலவு எனக் கருதுகிறோம். ஆனால் அல்லாஹ் கூறுகின்றான்: இது செலவு அல்ல. மாறாக, இது எனது விருப்பத்தினைப் பெறுவதற்காக நான் கூறிய நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக நீங்கள் செய்த செலவுகள் உண்மையில் செலவுகள்அல்ல. மாறாக, அவை உங்களது கணக்கில் செலுத்தியதாகும். மேலும் அது உங்களுக்கு தேவைப்படும்போது அல்லாஹ் அதை உங்களுக்குத் திரும்பி வழங்கி விடுவான்.

ஹதீஸ் குத்ஸி ஒன்றில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அல்லாஹ் தொடர்பாக கூறுகிறார்கள்:

ஆதமின் சந்ததிகளே! நீ உனது கருவூலத்தை என்னிடத்தில் சேர்த்து வைத்து நிம்மதி அடைந்து கொள்ளுங்கள். அதற்கு நெருப்பு பற்றுவதற்கான அபாயமும் இல்லை. நீரில் மூழ்குவதற்கான வாய்ப்பும் இல்லை. மேலும் எந்தத் திருடனும் திருடுவதற்காகப் பயமும் இல்லை. என்னிடம் வைக்கப்பட்டுள்ள செல்வங்களை நீ அதற்கு மிக அதிக தேவையுள்ளவனாக இருக்கும்போது வழங்குவேன் என்று அல்லாஹ் கூறுகின்றான்.

(கன்ஸுல் உம்மால் தொகுதி 6 பக்கம் 352 ஹதீஸ் எண் 16021)

சகோதரர்களே! நாம் அல்லாஹ்வின் வழியில் எவ்வளவு செல்வங்களைத் தியாகம் செய்கிறோம் என்பது முக்கியமல்ல. நாம் இறைவனின் தூதருக்குக் கட்டுப்பட்டு விகிதாச்சார அடிப்படையில் அல்லாஹ்வின் வழியில் செலவு செய்கின்றோமா என்பதுதான் முக்கியம். வசதியுடையவர்கள் இறைவழியில் இலட்சக் கணக்கில் செலவு செய்வார்கள். ஆனால் இது அவருடைய வருமானத்திற்கேற்ப விகிதாச்சார அடிப்படையில் இருக்காது.

ஆனால் அவரை விட வசதியில் குறைந்தவராக இருந்தபோதிலும் கட்டுப்படுதலுக்கான உயர்ந்த முன்மாதிரியை வெளிப்படுத்தியவாறு தனது வருமானத்திற்கேற்ப விகிதாச்சார அடிப்படையில் இறைவழியில் செலவு செய்பவரே அதிக நன்மைக்குத் தகுதியானவர் ஆவார்.

இறைவனுக்கு செல்வத்தின் தேவை ஒன்றுமில்லை. அவன் உங்களது உள்ளங்களின் நிலையை ஆய்வு செய்கின்றான். அவன் உங்களது கட்டுப்படுதலுக்கான ஆன்மா மற்றும் தியாகம் செய்வதற்கான உணர்வைப் பார்த்து நமக்கு வழங்குகின்றான். இன்றைய காலத்தில் செல்வந்தர், ஏழை என்ற பாகுபாடு இல்லாமல் மக்கள் தனது செல்வத்தை வேகமாக இரண்டு, மூன்று மடங்காக ஆக்குவதற்கு உள்ளத்தை ஈர்க்கக்கூடிய விளம்பரங்களைப் பார்த்து தனது வருமானத்தை பைனான்ஸ் கம்பெனிகளில் செலுத்துகிறார்கள். ஆனால் பெரும்பாலார் தமது முதலீட்டையே தொலைத்து விட்டு அமர்கின்றார்கள். ஆனால் இறை ஜமாஅத்துகள் தனது வருமானத்தை எப்போதும் இறைக் கட்டளைக்கேற்ப செலவு செய்து இறை விருப்பத்தை வேண்டக் கூடியவர்களாக இருக்கும்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:

இறைவனுக்காக உங்கள் உயிர்களையும் செல்வங்களையும் தியாகம் செய்யுங்கள் என நாம் நமது ஜமாஅத் உறுப்பினர்களிடம் எப்போதும் கூறி வந்துள்ளோம். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களும் இதை எப்போதும் கூறி வந்துள்ளார்கள். ஆனால் ஒவ்வொரு காலகட்டத்திலும் இந்தத் தரம் மாறிக் கொண்டே சென்றிருக்கிறது. முதல் நாள் மக்கள் இந்தக் குரலைக் கேட்டபோது முன்னால் வந்து, எங்கள் உயிரும், செல்வமும் இதோ உள்ளது என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் அந்த மக்களின் பதிலைக் கேட்டுக் தொழுகையை நிலைநாட்டுங்கள். நோன்பு வையுங்கள். இஸ்லாம் மற்றும் அஹ்மதிய்யத்தை பரப்புங்கள். மேலும் உங்களது செல்வத்திலிருந்து மார்க்கத் தொண்டிற்காக ஏதாவது கொடுத்து வாருங்கள். இதற்காக அரை ரூபாய் கொடுத்தாலும் சரி எனக் கூறினார்கள்.

மக்கள் இதைக் கேட்டபோது அவர்களது உள்ளத்தில் வேலை மிக சாதாரணமாகத்தான் உள்ளது. பிறகு நம்மிடம் வாருங்கள்; உங்களது உயிர்களையும், செல்வங்களையும் தியாகம் செய்யுங்கள் என ஏன் கூறப்படுகிறது? என வியப்படைந்தனர்.

சிறிது காலம் கடந்த பிறகு மக்களிடம் உயிர் மற்றும் செல்வத்தைத் தியாகம் செய்வதற்கான நேரம் வந்து விட்டது எனக் கூறப்பட்டது. மக்களும் தமது உயிர்களையும், செல்வங்களையும் எடுத்துக் கொண்டு வந்தனர். அப்போது அவர்களிடம் நீங்கள் ரூபாயிலிருந்து ஒரு பைசாவைச் சந்தாவாக கொடுங்கள் எனக் கூறப்பட்டது. சில காலம் கடந்த பிறகு தலைமையகத்திலிருந்து, வாருங்கள்! உங்கள் உயிர்களையும், செல்வங்களையும் மார்க்கத் தொண்டிற்காகத் தியாகம் செய்யுங்கள் என மீண்டும் குரல் கொடுக்கப்பட்டது.

இந்த நிலை இவ்வாறு முன்னேறிச் சென்றது. அரை பைசாவிலிருந்து துவங்கி பைசாவிற்கு வந்தது. பிறகு இரண்டு பைசாவிற்கு வந்தது. பிறகு இரண்டு பைசா போதாது. மூன்று பைசா வழங்குங்கள் என்று கூறப்பட்டது. பிறகு மூன்று பைசா கொடுத்து வந்தார்கள். அப்போது நான்கு பைசா கொடுங்கள் எனக் கூறப்பட்டது.

பிறகு ஒரு காலம் வந்தபோது உங்கள் சொத்துகள் மற்றும் வருமானங்களிலிருந்து வஸிய்யத் செய்யுங்கள் எனக் கூறப்பட்டது. இந்த வஸிய்யத்தில் குறைந்த பட்சம் பத்தில் ஒரு பங்கு வழங்குமாறு கேட்கப்பட்டது. பிறகு பத்தில் ஒரு பங்கு குறைவாகும். நீங்கள் ஒன்பதில் ஒரு பங்கை கொடுக்க முயற்சி செய்யுங்கள் எனக் கூறப்பட்டது. இறைவன் யாருக்கு வாய்ப்பை வழங்கியுள்ளானோ அவர்கள் இதைவிட அதிகமாக வழங்குங்கள் எனக் கூறப்பட்டது.

யாருக்கு அல்லாஹ் புரியும் திறனையும், சிந்திக்கும் அறிவையும் வழங்கியுள்ளானோ அவர்கள் நாம் ஒவ்வோர் அடியும் இந்த நோக்கத்திற்கு அருகில் கொண்டு செல்லப்படுகிறோம் என்பதை அறிகிறார்கள். அந்த நோக்கம் இல்லாமல் சமுதாயங்கள் ஒருபோதும் உயிருடன் இருக்க முடியாது.....

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்று உண்மையான ரீதியில் வெளிப்பட்டபோது கால சுழற்சியின் காரணமாக உங்களது கவனக் குறைவின் காரணமாக உங்களில் பலர் இவ்வாறு புரிந்து கொண்டார்கள். உயிர் மற்றும் செல்வம் ஆகியவற்றை தியாகம் செய்வது என்பதன் பொருள், பணத்திலிருந்து ஒரு பைசா அல்லது ஒன்றரை பைசாவை சந்தாவாக வழங்குவது என்றும், உயிர் தியாகம் என்பதன் பொருள் வாரம் அல்லது மாதத்தில் ஒரு மணி நேரம் அல்லது ஒன்றரை மணி நேரம் (ஜமாஅத்திற்கு) வழங்குவது என்றும் கருதினர். ஆனால் அந்தக் காலம் ஒரு பைசா அல்லது ஒன்றரை பைசாவை சந்தாவாக கொடுப்பதற்குரிய காலமாக இருக்காது.

மேலும் தனது நேரத்திலிருந்து ஒரு மணி நேரம் அல்லது ஒன்றரை மணி நேரம் (ஜமாஅத்திற்கு) கொடுப்பதாக இருக்காது. மாறாக, அனைத்து செல்வங்களையும் அனைத்து உயிர்களையும் இறைவழியில் தியாகம் செய்வதற்கான காலமாக அது இருக்கும்... அந்த நேரத்தில் ஒரு பைசா அல்லது ஒன்றரை பைசாவை சந்தாவாக கொடுப்பதற்கான கேள்வி இருக்காது. மாறாக, தனது அனைத்துச் செல்வங்களையும், அனைத்துச் சொத்துக்களையும் ஒரு நிமிடத்திற்குள் விட்டுச் செல்வதற்கான கேள்வி இருக்கும்.

(அல் ஃபஸல் 10 ஏப்ரல் 1962, 1946 ஆம் ஆண்டு மஜ்லிஸ் முஷாவரத்தில் நிகழ்த்தப்பட்ட சொற்பொழிவு)

ஆக, காலம் எவ்வாறெல்லாம் பொருள் தியாகத்தை எதிர்பார்க்கிறதோ காலத்தின் மகத்தான கலீஃபாக்கள் எப்போதெல்லாம் கூறுவார்களோ அப்போது லெப்பைக் (நான் ஆஜராகி விட்டேன்) என்று கூறியவாறு தனது உயிர் செல்வம் போன்றவற்றை இறைவழியில வழங்கிக் கொண்டே செல்ல வேண்டும்.

நான் தற்போது எனது சொற்பொழிவின் இரண்டாவது பகுதியாகிய வஸிய்யத் அமைப்பின் அருள்கள் என்பதன் பக்கம் வருகிறேன்.

சகோதரர்களே! தற்போது உலகின் எதிர்காலம் அஹ்மதிய்யத்துடன் தொடர்பு கொண்டுள்ளது என்பது இறைநியதி ஆகும். மேலும் எந்த அமைப்பு உலகளவில் பரவ வேண்டியதுள்ளதோ அதில் உலகை நடத்துவதற்கான ஒரு முழுமையான மற்றும் ஒருங்கிணைக்கப்பட்ட செயல் திட்டம் இருப்பது அவசியமாகும். அந்த அமைப்பின் பெயர் இன்று வஸிய்யத் அமைப்பாகும்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் இதற்கான உண்மையான விளக்கத்தை இவ்வாறு கூறுகிறார்கள்:

ஆக, தற்போதைய காலத்தின் தேவைகளை முழுமை செய்வது காத்தமுல் குலஃபா அவர்களின் கடமையாகும். அதாவது இஸ்லாமிய போதனைகளுக்கேற்ப ஒரு திட்டத்தை ஆயத்தம் செய்து உலகின் துன்பங்களை முடிவுக்கு கொண்டு

வர வேண்டும். இஸ்லாமிய திட்டத்தின் முக்கிய வழிகாட்டல், மனிதர்கள் அனைவரின்தேவைகளையும் நிறைவேற்றுவது ஆகும். ஆனால் இதைச் செய்யும்போது தனிப்பட்ட மற்றும் குடும்ப வாழ்வின் நுண்ணிய உணர்வுகள் அழிக்கப்படவும் கூடாது. இந்தப் பணி வசதி படைத்தவர்களிடமிருந்து விருப்பமாகப் பெற வேண்டும். கட்டாயமாகப் பெறக்கூடாது. இந்த அமைப்பு நாடு தழுவிய அளவில் இருக்கக் கூடாது. சமுதாய அளவில் இருக்க வேண்டும்.

இறைவன் புறமிருந்து தோன்றிய இமாம் மஹ்தி (அலை) அவர்கள் புதிய அமைப்பின் அடித்தளத்தை 1905–ஆம் ஆண்டு நிறுவினார்கள். அதை அல் வஸிய்யத் திட்டத்தின் மூலம் வைத்தார்கள். இஸ்லாமிய அரசு அனைத்து உலகத்திற்கும் உணவளிக்க வேண்டுமென்றால், அனைத்துலகிற்கும் ஆடை வழங்க வேண்டுமென்றால், அனைத்து உலகிற்கும் வாழ்வதற்கு வீட்டிற்கான ஏற்பாட்டைச் செய்ய வேண்டுமென்றால், அனைத்துலகின் அறிவின்மையை அகற்றுவதற்காக கல்விக்கான ஏற்பாட்டைச் செய்ய வேண்டுமென்றால் நிச்சயமாக அரசிடம் இதற்காக அதிகமாகப் பணம் இருக்க வேண்டும்.

இந்த வகையில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் அல்லாஹ்வின் கட்டளைக்கேற்ப இந்த அறிவிப்பைச் செய்தார்கள். அதாவது இந்தக் காலத்தில் இறைவன் உண்மையான சொர்க்கத்தைப் பெற விரும்பும் மக்களுக்கு இந்த ஏற்பாட்டைச் செய்துள்ளான். அவர்கள் மகிழ்ச்சியுடன் தனது செல்வத்திலிருந்து குறைந்தபட்சமாக பத்தில் ஒரு பகுதியையும் அதிகபட்சமாக மூன்றில் ஒரு பகுதியை வஸிய்யத் செய்ய வேண்டும். இந்த புதிய அமைப்பின் அடித்தளம் 1910 ரஷ்யாவில் வைக்கப்பட்டதல்ல.

அதேபோல் இனி வருங்காலத்தில் ஏதாவது ஒரு வருடத்தில் தற்போதைய போருக்குப் பிறகு ஐரோப்பாவில் வைக்கப்படப்போவதுமில்லை. மாறாக, உலகிற்கு நிம்மதியளிக்கக் கூடியவரும் ஒவ்வொரு மனிதரின் வாழ்வை மகிழ்ச்சியாக ஆக்கக் கூடியவரும் இதனுடன் மார்க்கத்தைப் பாதுகாக்கக் கூடியவர் மூலமாக புதிய அமைப்பின் அடித்தளம் 1905–ஆம் ஆண்டு காதியானில் வைக்கப்பட்டு விட்டது. தற்போது உலகிற்கு வேறெந்த புதிய அமைப்பின் தேவையுமில்லை. (மாலி நிஸாம் பக்கம் 40,41)

சகோதரர்களே! இப்படிப்பட்ட அருளுக்குரிய அமைப்பில் பங்கு பெறுவதற்கான வாய்ப்பினை அல்லாஹ் தனது அருளால் நமக்கு வழங்கியிருப்பது நமது நற்பேறு ஆகும். நாம் நஹ்னு அன்ஸாருல்லாஹ் – அல்லாஹ்வின் உதவியாளர்கள் என வாதம் செய்து விட்டு இவ்வளவு சிறந்த கூட்டத்தில் பங்கு பெறாமல் இருந்து நமது வாதத்தையே தவறானது என நிரூபிக்க வேண்டுமா என்ன? அது எந்த அளவுக்கு இறைவனுக்கு மதிப்பை வழங்காத நிலையாக இருக்கும்? இது நமது வாதத்தினை பொய்ப்படுத்தக் கூடியதாகும்.

வஸிய்யத் அமைப்பில் இணைவது எந்த அளவுக்கு முக்கியமானது என்பதை ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊது (ரலி) அவர்களின் மேற்கோள்களிலிருந்து மிகத் தெளிவாக தெரிய வரும்.ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:

“நம்பிக்கையாளர்களின் ஈமானின் சோதனை இதில்தான் இருக்கின்றது. அவர் இந்த அமைப்பில் இணைய வேண்டும். மேலும் இறைவனது சிறப்பான அருளைப் பெற வேண்டும். நயவஞ்சகர் மட்டும்தான் இந்த அமைப்பில் இந்த அமைப்பிலிருந்து விலகியிருப்பார். இது எவர் மீதும் கட்டாயமில்லை. ஆனால் அத்துடன், இதில் உங்களது நம்பிக்கையில் ஒரு சோதனை இந்த தியாகத்தைச் செய்வது உங்களுக்கு அவசியமாகும்.

உங்கள் உள்ளத்தில் சொர்க்கத்தின் கண்ணியமும் மகத்துவமும் இல்லை என்றால் பிறகு உங்கள் செல்வத்தை உங்களிடமே வைத்துக் கொள்ளுங்கள். நமக்கு உங்கள் செல்வத்தின் எந்தத் தேவையுமில்லை.”

(மாலி நிஸாம் பக்கம் 42)

மேலும் ஹுஸூர் அவர்கள் கூறுகின்றார்கள்:

“வஸிய்யத் அமைப்பு முழுமையடையும்போது இதன் மூலம் தப்லீக் மட்டும் நடைபெறாது. மாறாக, இஸ்லாத்தின் விருப்பத்திற்கேற்ப ஒவ்வொரு நபருடைய தேவையும்இதன் மூலம் நிறைவேற்றப்படும். கஷ்டமும் வறுமையும் உலகிலிருந்து துடைத்தெரியயப்படும் – இன்ஷா அல்லாஹ். அனாதைகள் யாசிக்க மாட்டார்கள். விதவை மக்களிடத்தில் கையேந்த மாட்டார். வசதியற்றவர் கஷ்டத்துடன் திரிய மாட்டார்.

ஏனென்றால் வஸிய்யத் குழந்தைகளின் தாயாக இருக்கும். இளைஞர்களுக்குத் தந்தையாக இருக்கும். பெண்களுக்குக் கணவனாக இருக்கும். கட்டாயப்படுத்தாமல் அன்பு மற்றும் உள்ளத்தின் மகிழ்ச்சியுடன் ஒரு சகோதரர் மற்றொரு சகோதரருக்கு இதன்மூலம் உதவி செய்வார். அவர் கொடுப்பது பிரிதிபலனை எதிர்பார்த்து இருக்காது. மாறாக, கொடுக்ககூடிய ஒவ்வொருவரும் இறைவனிடத்தில் சிறந்த பிரதிபலனைப் பெறுவார்கள்.

வசதி படைத்தவரும் இழப்பில் இருக்க மாட்டார். எந்த ஏழையும் இழப்பில் இருக்க மாட்டார். எந்தச் சமுதாயமும் மற்ற சமுதாயத்துடன் சண்டையிடாது. மாறாக, அதன் கருணை உலகம் அனைத்திலும் பரந்திருக்கும். ஆகையால் நீங்கள் மிக வேகமாக வஸிய்யத் செய்யுங்கள். இதன் மூலம் புதிய அமைப்பு அமைக்கப்பட வேண்டும். மேலும் நாலா புறமும் இஸ்லாம் மற்றும் அஹ்மதிய்யத்தின் கொடி பரக்கக்கூடிய அந்த அருளுக்குரிய நாள் வர வேண்டும்.

நான் இதனுடன் வஸிய்யத் அமைப்பில் இணைந்துள்ள சகோதரர்களுக்கு வாழ்த்துக்களையும் கூறிக் கொள்கிறேன். மேலும் நான் தற்போது வரை வஸிய்யத் அமைப்பில் இணையாத மக்களுக்கு அவர்களும் இதில் இணைந்து உலக மற்றும் மார்க்க அருள்களிலிருந்து பங்கு பெற்று செல்வந்தர்களாக ஆக அல்லாஹ் வாய்ப்பளிப்பதற்காக துஆ செய்கின்றேன்.”

(மாலி நிஸாம் பக்கம் 42)

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:

நீங்கள் இதைச் சிந்தனைக்கு அப்பாற்பட்ட விஷயமாகக் கருதாதீர்கள். இது வானம் மற்றும் பூமியின் அரசனாக இருக்கும் அந்த ஆற்றல் மிக்கவனின் விருப்பமாகும்.

இந்த வலுவான வார்த்தைகளிலிருந்து வஸிய்யத் அமைப்பின் மகிமையும், மகத்துவமும் நமக்கு நன்றாக தெரிய வருகிறது. இந்த வார்த்தைகள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் அருளுக்குரிய எழுதுகோலிலிருந்து இந்த அமைப்பு ஆரம்பிக்கப்பட்டபோது எழுதப்பட்டதாகும். இன்று இதற்கு 113 வருடங்கள் முழுமையடைவதைக் கண்டு உள்ளம் அல்லாஹ்வின் புகழால் நிறைகிறது.

ஆக, இந்த மகத்தான அமைப்பிற்கான அடித்தளம் இடப்பட்ட இந்தியாவில் வாழக்கூடிய நாம் எந்த அளவிற்குத் தனது வாக்குறுதியை நிறைவேற்றியுள்ளோம். எந்த அளவுக்கு காலத்தின் கலீஃபாவின் குரலுக்குக் கட்டுப்பட்டவாறு இந்த முன்னறிவிப்பு நிறைவேறுவதில் நமது பங்கைச் செலுத்தியுள்ளோம் என ஆய்வு செய்ய வேண்டிய அவசியமுள்ளது.

மேலும் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:

வஸிய்யத் செய்யும்போது எவருடைய செல்வம் நிரந்தரமாக உதவி செய்யக்கூடியதாக இருக்குமோ அவருக்கு நிரந்தரமான நன்மை கிடைக்கும். தொடரக்கூடிய நன்மையின் கட்டளையின் கீழ் அது இருக்கும்.

நான் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தியவாறு சகோதரர்களுக்கு இந்த விஷயத்தின் பக்கமும் கவனமூட்ட விரும்புகிறேன். அதாவது ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் தமது மிக அதிக விருப்பமாக வஸிய்யத் அமைப்பு துவங்கி நூறு ஆண்டுகள் நிறைவடையும் சந்தர்ப்பத்தில் வஸிய்யத் அமைப்பு தொடர்பாக உலகளாவிய ஜமாஅத்தினர் முன்பு 2005– ஆம் ஆண்டு கூறினார்கள்:

நான் கூறியது போன்று இந்த அமைப்பில் முழு மனதுடன் இணையுங்கள். எவர் இதில் இணைந்துள்ளாரோ அவர் தனது மனைவி, பிள்ளைகளையும் ஏனைய அன்பர்களையும் இதில் இணைப்பதற்கு முயற்சி செய்யுங்கள். இறைவனுடைய மஸீஹின் குரலுக்குச் கட்டுப்பட்டவாறு தியாகத்தின் உயர் தகுதியை நிலை நாட்டுங்கள். நான் எனது இந்த விருப்பம் தொடர்பாக இதற்கு முன்பும் ஒரு சந்தர்ப்பத்தில் கூறியுள்ளேன்.

2008–ஆம் ஆண்டில் அஹ்மதிய்யா கிலாஃபத் நிலைபெற்று நூறு ஆண்டுகள் முழுமையடையும்போது உலகில் ஒவ்வொரு நாட்டிலும் ஒவ்வொரு ஜமாஅத்திலும் சம்பாதிக்கக்கூடிய நபர்களில் சந்தா செலுத்தக்கக் கூடியவர்களில் குறைந்தபட்சம் ஐம்பது விழுக்காடு பேர் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் இந்த மகத்தான அமைப்பில் இணைந்திருக்கக் கூடியவர்களாக இருக்க வேண்டும். மேலும் இது இந்த நபர்கள் மூலமாக அல்லாஹ்வுக்கு செலுத்தும் எளிமையான காணிக்கையாக இருக்கும். இது அஹ்மதிய்யா கிலாஃபத்தின் நூறு ஆண்டுகள் நிறைவடைவதையொட்டி நன்றியாக அல்லாஹ்விடம் செலுத்தக்கூடியதாக இருக்கும்.

மேலும் கூறுகிறார்கள்: இதனையும் நினைவில் கொள்ளுங்கள். அதாவது நிஸாமே வஸிய்யத்திற்கு நிஸாமே கிலாஃபத்துடன் ஒரு ஆழமான தொடர்பு உள்ளது. ஏனென்றால் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்குத் தமது மரணம் தொடர்பான செய்திகள் கிடைத்தபோது ஜமாஅத்தின் தர்பிய்யத்திற்கான சிந்தனை தோன்றியது. மேலும் அன்னார் பொருள் தியாகம் செய்வதற்கான அமைப்பை நிறுவிய அதே சமயத்தில் அன்னார் ஜமாத்தார்களுக்கு எனது மரணம் தொடர்பான செய்திகளைக் கேட்டு வருத்தமடையாதீர்கள். ஏனென்றால், இறைவன் இந்த இயக்கத்தை வீணாக்க மாட்டான். மாறாக, இறைவனது வல்லமையின் கை உங்களை தாங்கிக் கொள்ளும் என்ற நற்செய்தியையும் கூறினார்கள்.

ஆக வஸிய்யத் நூலில் கிலாஃபத் அமைப்பு பற்றிக் கூறியிருப்பது இந்த இரண்டு அமைப்பிற்கும் இடையில் ஒரு ஆழமான தொடர்பு இருப்பதை நிரூபிக்கிறது. எவ்வாறு வஸிய்யத் அமைப்பில் இணைந்து மனிதன் இறையச்சத்தின் உயர் தரத்தைத் தனக்குள் உருவாக்கிக் கொள்ள முடியுமோ அதேபோன்று கிலாஃபத் அமைப்புடன் கட்டுப்படுதலுக்கான உயர் முன்மாதிரியை நிலைநாட்டினால் மட்டுமே அவரது ஆன்மீக வாழ்வு சாத்தியமாகும். பொருள் தியாகத்திற்கான அமைப்பும் கிலாஃபத்தின் அருளுக்குரிய நிழலில் தான் வலுவடைய முடியும்.

ஆக, கிலாஃபத் நிலைபெற்றிருக்கும் வரை பொருள் தியாகத்தின் தரமும் உயர்ந்து கொண்டே செல்லும். மார்க்கமும் முன்னேற்றமடையும். ஆக, எனது துஆ என்னவென்றால், அல்லாஹ் உங்களுக்கு இந்த இரண்டு அமைப்புடனும் இணைந்திருக்கச் செய்வானாக. மேலும் தற்போது வரை வஸிய்யத் அமைப்பில் இணையாதவர்களுக்கு அல்லாஹ் வாய்ப்பளிப்பானாக. அவர்களும் இதில் இணைந்து ஆன்மீக மற்றும் பௌதீக அருள்கள் மூலம் செல்வங்களைப் பெறக் கூடியவர்களாக ஆகட்டுமாக. அல்லாஹ் ஒவ்வொரு அஹ்மதியையும் கிலாஃபத் அமைப்புடன் கலப்பற்ற தன்மை மற்றும் நன்றியுணர்வுடன் இணைந்திருக்கச் செய்வானாக.

மேலும் கிலாஃபத்தின் ஆயுளுக்காக எப்போதும் தியாகம் செய்ய முயற்சி செய்ய வேண்டும். மேலும் தனது அனைத்து வித முன்னேற்றத்திற்காக கிலாஃபத்தின் கயிற்றை பற்றிப் பிடிக்க வேண்டும். அல்லாஹ் ஒவ்வொரு அஹ்மதிக்கும் தனது பொறுப்பை உணரக்கூடிய, அதன்படி முழுமையாக செயல்படக்கூடிய வாய்ப்பினைத் தந்தருள்வானாக. அனைவரையும் தனது விருப்பத்தின் வழியில் நடத்துவானாக. நம் அனைவரின் முடிவையும் நல்லதாக ஆக்கித் தருவானாக. ஆமீன்.

(அல் ஃபஸ்ல் 2005 – 29 ஜூலை முதல் 11 ஆகஸ்ட் வரை)

இந்த அமைப்பில் இணைவதன் அருள்கள் மிகவும் சுருக்கமான வார்த்தைகளில் சொர்க்க வாழ்வை பெறுவீர்கள் என ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

ஆக, இந்த வார்த்தை மறுமையில் பெறுவதற்கான அல்லது வழங்குவதற்கான வாக்குறுதியோ அல்லது வியாபாரமோ அல்ல; மாறாக, இந்த அமைப்பில் இணைவதன் மூலம் இந்த உலகிலேயே அதற்கான பிரதிபலன் அவர்களுக்குக் கிடைத்து விடும். மேலும் எவருக்கு இவ்வுலகில் சொர்க்கத்தின் இன்பம் கிடைக்கவில்லையோ அவர் மறுமையிலும் அந்த அருளிலிருந்து தடுக்கப்பட்டவராக எழுப்பப்படுவார் என நமக்குத் திருக்குர்ஆன் கூறுகிறது.

இந்த அனைத்தையும் தெரிந்த பின்னரும் இவ்வுலகிலேயே சொர்க்க வாழ்வைப் பெற விரும்பாத யாராவது இருக்கின்றாரா? இந்த அருளிலிருந்து தடுக்கப்பட்டவராக இருப்பதற்கு எந்த மனிதன் விரும்புவான்? அவ்வாறு யாரும் இல்லாமல் இறைவன் ஆக்குவானாக.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் நமக்கு இந்த அமைப்பின் அனைத்து விதமான அருள்கள் மற்றும் முக்கியத்தவத்தைத் தெளிவுபடுத்தியதுடன் இதில் இணைவதற்கு வலியுறுத்தியும் கூறியுள்ளார்கள். மேலும் அறிவுரை செய்யும் உரிமையை முழுமையாகச் செலுத்தி விட்டார்கள். அன்னார் இவை அனைத்தையும் மிகவும் வேதனையுடனும், அன்புடனும் கூறியுள்ளார்கள்.

அல் வஸிய்யத் நூலில் கடைசி வரியை அன்னார் இவ்வாறு எழுதுகிறார்கள்: பலர் உலகின் மீது அன்பு கொண்டவாறு எனது இந்தக் கட்டளையை விட்டு விடுவார்கள். ஆனால் மிக விரைவில் உலகை விட்டுப் பிரிந்து விடுவார்கள். அப்போது கடைசி நேரத்தில் இதுான் அருளாளன் வாக்குறுதி கொடுத்ததாகும். இறைதூதராக அனுப்பப்பட்டவர்கள் உண்மை கூறினர் என்று கூறுவார்கள். والسلام علىٰ من التبع الهدىٰ (நேர்வழியைப் பின்பற்றியவர்க்கு சாந்தி உண்டாவதாக)

காலத்தின் இமாமின் கையில் பைஅத் செய்த பின்னரும் அன்னாரால் வலியுறுத்தி கூறப்பட்ட கட்டளையை விட்டு விடுபவர் தொடர்பாக எந்த அளவு வேதனை மற்றும் துக்கத்தை வெளிப்படுத்தியுள்ளார்கள். இறைவன் எந்த அஹ்மதியையும் இப்படிப்பட்ட துரதிர்ஷ்டவாளியாக ஆக்காமலிருப்பானாக.

அல்லாஹ் நம் அனைவருக்கும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் விருப்பத்தினைப் புரிந்து கொண்டு இந்த அருளுக்குரிய வஸிய்யத் அமைப்பில் இணையக்கூடிய நல்வாய்ப்பினை வழங்குவானாக. ஆமீன். வஸிய்யத் அமைப்பின் மூலம் நிறுவப்பட்ட பெஹஷ்தி மக்பராவிற்கு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மூலம் மிகவும் ஞானமிக்க, மிகவும் உருக்கத்துடன் மூன்று முறை துஆக்கள் செய்த தனிச் சிறப்பு உண்டு.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

இதில் இறைவன் அருள் புரிவானாக. இதனையே பெஹஷ்தி மக்பராவாக (சொர்க்கத்திற்குரியவர்களின் மண்ணறை) ஆக்குவானாக. உண்மையிலேயே உலகத்தை விட்டு மார்க்கத்திற்கு முன்னுரிமை வழங்கி உலகின் நேசத்தை விட்டு விட்டு தங்களை இறைவனுக்காக ஆக்கிக் கொண்டு தங்களிடத்தில் தூய்மையான மாறுதலை உருவாக்கி ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சஹாபாக்களைப் போன்று நன்றியுணர்வு, உண்மை ஆகியவற்றின் முன்மாதிரியை காட்டிய இந்த ஜமாஅத்தைச் சேர்ந்த தூய உள்ளம் கொள்ள மக்கள் இறுதியாக ஓய்வெடுக்கும் இடமாக அது இருக்கட்டுமாக என்று நான் இறைவனிடம் துஆ செய்கின்றேன். آمین یارب العالمین

மீண்டும் நான் துஆ செய்கிறேன். வல்லமைமிக்க என் இறைவா! தங்கள் பணிகளில் உலக நோக்கங்களைக் கலக்காதவர்களாகவும், உண்மையிலேயே உனக்காகவே ஆகிவிட்ட என் ஜமாஅத்தை சேர்ந்த அந்த தூய உள்ளங்களின் மண்ணறையாக இதனை ஆக்குவாயாக. آمین یارب العالمین

மீண்டும் நான் மூன்றாம் முறை துஆ செய்கிறேன். வல்லமைமிக்க என் இறைவா! அதிகமாக மன்னிக்கின்ற, மீண்டும் மீண்டும் கருணை காட்டும் இறைவா! உன்னால் அனுப்பப்பட்டுள்ள இந்த தூதர் மீது உண்மையான நம்பிக்கை வைத்து எவ்வித வஞ்சகமும் சுயநலமும் தங்களிடத்தில் இல்லாமல் நம்பிக்கையின் கட்டுப்படுதலின் உரிமையை முழுமையாக நிறைவேற்றுபவர்களாக, உனக்காக உனது வழியில் தமது உயிரை அர்ப்பணிப்பவர்களாக இருப்பவர்களுக்கும், எங்களிடத்தில் நீ திருப்தியடைந்து அவர்கள் முற்றிலும் உனது அன்பில் தங்களையே இழந்து உனது தூதரிடத்தில் உளப்பூர்வமான நம்பிக்கையுடனும் முழுமையான மரியாதையுடனும் அன்புடனும் அத்தூதருக்காக அனைத்தையும் அர்ப்பணிக்கும் அளவில் தங்களது தொடர்பை நிலைநாட்டியுள்ளனர் என எவர்கள் பற்றி உனக்குத் தெரியுமோ அப்படிப்பட்ட மக்களுக்கு இந்த கபருஸ்த்தானில் இடமளிப்பாயாக. آمین یارب العالمین

(அல் வஸிய்யத், பக்கம் 29–32)

அல்லாஹ் நம் அனைவருக்கும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் உயர்ந்த எதிர்பார்ப்பிற்கேற்ப நம்பிக்கை மற்றும் கட்டுப்படுதலின் உயர்தரத்தை வெளிப்படுத்துவதற்கான வாய்ப்பை அளிப்பானாக. இதன் மூலம் நாம் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் துஆக்களுக்கு உண்மையான வாரிசாக வழிவகை செய்வானாக. ஆமீன்.

**எல்லோரிடத்தும் அன்பு**
**எவரிடத்தும் இல்லை வெறுப்பு**

**நேர்மையை நேசிப்போம்**
**நேர்மையின்மையை வெறுப்போம்**